பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 14 திங்கட்கிழமை (31.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 255


சகலவிதமான வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை சுவையாகவும், தரமாகவும் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
Hotline : 078 352 5374, 021 222 2092, 021 205 7455 (C-1957)


# உள்ளக விசாரணை வேண்டாம்

# சர்வதேச விசாரணையே தேவை

## தமிழரசுக் கட்சி தவிர்ந்த 3 கட்சிகள் வலியுறுத்து







(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து நீதியான தீர்வைப் பெற்றுகொள்வதற்காக சர்வதேச விசாரணையே தேவை என்பதை வலியுறுத்தியும் உள்ளக விசாரணையை முற்று முழுதாக நிராகரிப்பதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய 3 கட்சிகள் இணைந்து கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலிலிருந்து விலகி துறவியாகிறேன் - அநுர

(கொழும்பு)

தான் அரசியலைவிட்டு விலகி துறவியாக போவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

பொது தேர்தலில் தோல்வியடைந்தவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு

24ஆம் பக்கம் பார்க்க....

## கம்யூனிஸ்ட் கட்சி சுயாதீனமாக செயற்படும்

(கொழும்பு)

பாராளுமன்ற நடவடிக்கைகளின் போது ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியானது எதிர்க்கட்சி வரிசையில் சுயாதீனமாக செயற்படப் போவதாக தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி செயற்படப் போவதில்லை

24ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டணிக் கட்சிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் தேசிய சுதந்திர முன்னணி கலந்து கொள்ளும் எனவும்

24ஆம் பக்கம் பார்க்க....

## 'சர்வதேச விசாரணையே வேண்டும்'

### காணாமல் போனோரின் உறவுகள் கண்ணீருடன் கோரிக்கை

(கிளிநொச்சி)

இலங்கையில் போர்க்காலத்தில் காணாமல்போனவர்களின் உறவினர்கள் மன்னார் நகரில் நேற்று ஞாயிறன்று கூடி தங்களின் உறவுகளை கண்டுபிடிப்பதற்கு ஏதுவாக சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆட்கள் காணாமல் ஆக்கப்படுதலுக்கு எதிரான சர்வதேச தினத்தை (ஓகஸ்ட் - 30) ஒட்டி இந்த நிகழ்வு மன்னார்

24ஆம் பக்கம் பார்க்க....



## பாடசாலைகள் இன்று 3-ம் தவணைக்காக ஆரம்பம்

(கொழும்பு)

இந்த ஆண்டின் மூன்றாம் தவணைக்காக அனைத்து தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல பாடசாலைகளும் இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

க.பொ.த. உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் விடைத்தாள்

24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேசம் ஏற்கும் வகையில் உள்நாட்டு விசாரணை நடக்கும்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கையின் அரசியல் சட்டத்துக்குள்பட்ட வகையில் உள்நாட்டிலேயே விசாரணைகள் நடத்தப்படும்.

அது இலங்கையில் உள்ள அனைத்துச் சமூகங்களும் சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் இருக்கும் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

த இந்து ஊடகத்துக்கு அவர் அளித்துள்ள பிரத்தியேக நேர்காணலின்போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

ரோம் நகரில் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டில் இலங்கை கையெழுத்திடாததால் உள்நாட்டு விசாரணையே போதும் என்ற முடிவுக்கு நாங்கள் வந்திருக்கிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த

24ஆம் பக்கம் பார்க்க....

## லக்ஷ்மன் கதிர்காமர் கொலை; விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்படலாம்

### கதிர்காமரின் குடும்பத்தினரின் கோரிக்கைக்கு அமைய

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிரகாமர் கொலை தொடர்பாக, புதிய விசாரணையொன்றை ஆரம்பிக்க வேண்டுமென கதிர்காமரின் குடும்பத்தினர் விரைவில் வேண்டுகோள் விடுக்க வுள்ளனர்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு செவ்வி அளித்துள்ள லக்ஷ்மன் கதிர்காமரின் மகள் அஜிதா கதிர்காமர்,

தமது தந்தையின் படுகொலை தொடர்பாக விரிவான புதிய விசாரணையை ஆரம்பிக்குமாறு புதிய அரசாங்கத்திடம் கோருவதற்கு தமது குடும்பத்தினர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக அனைத்துலக அளவில் பரப்புரைகளை மேற்கொண்டு, பல்வேறு நாடுகளில் புலிகள

24ஆம் பக்கம் பார்க்க....



## நடுவுநிலை தவறாது நல்நெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரம் உள்ள இராஜதந்திரியை பிரி. உயர்ஸ்தானிகராக நியமியுங்கள்

## ஜனாதிபதியிடம் டக்ளஸ் விக்கிரமசிங்க கோரிக்கை

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஒருவரை நியமிக்கும்போது அதிகாரம் மிக்க ராஜதந்திரி ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லண்டனை மையமாகக்கொண்ட சிங்கள சம்மேளனத்தின் தலைவர் டக்ளஸ் விக்ரமசிங்க இந்த கோரிக்கையை ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் விடுத்துள்ளார்.

கிறிஸ் நோனிஸுக்கு பதிலாக இதுவரை பிரித்தானியாவுக்கான உயர்ஸ்தானிகர் ஒருவர் நியமிக்கப்படவில்லை.

அண்மையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனாநாயக்கவுக்கு அந்தப் பதவியை ஏற்றுக்கொள்ள பிரதமரால் அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அவர் அதனை ஏற்கவில்லை.

இதனையடுத்து ஜனாதிபதி சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விலகிய குமார் சங்கக்காரவை பிரித்தானிய உயர்ஸ்தானிகராக நியமிக்க விருப்பம் வெளியிட்டிருந்தார்.


குமார் சங்கக்கார சிறந்த சாதனைகளை படைத்த கிரிக்கெட் வீரர். அவரின் சாதனைகளை வீணான பிரசாரங்களுக்காக பயன்படுத்தக்கூடாது.

இந்தநிலையில் கடந்த பல மாதங்களாக வெற்றிடமாக உள்ள உயர்ஸ்தானிகர் பதவியை உரியவர்களை கொண்டு நிரப்பவேண்டும்.

இந்த நிரப்பலின் மூலம் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லிணக்க முயற்சிகளுக்கு சிறந்த ஊக்கம் வழங்கப்படவேண்டும் என்றும் டக்ளஸ் விக்கிரமசிங்க கோரியுள்ளார். (செ-12)

### பொருத்தமற்ற ஆடை அலங்காரம்

# நாடாளுமன்ற உறுப்பினர்களை கடிந்து கொண்டார் - ரணில்



(கொழும்பு)

சந்தர்ப்பங்களுக்கேற்ற வகையில் பொருத்தமான ஆடை அணியத் தெரியாக ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமர் ரணிலிடம் கடுமையான பேச்சுக்களை வாங்கிக் கொண்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கூட்டம் வார இறுதியில் நேற்று கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவில் நடைபெற்றது. இதன்போது பல உறுப்பினர்கள் பொருத்தமற்ற ஆடை அலங்காரங்களுடன் சமுகமளித்திருந்துள்ளனர். இதனைக் கண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களை நன்றாக திட்டியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் என்பது பிக்னிக் செல்லும் இடமல்ல என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையே குறித்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அரைக்கை சட்டையுடன் வருகை தந்த எஸ்.எம். மரிக்கார் மற்றும் கம்பஹா நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயலத் ஆகியோருக்கு இது குறித்த விபரம் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து ஸ்ரீ கொத்தாவுக்கு வெளியிலேயே நின்று கொண்ட அவர்கள், தங்கள் பாதுகாவலர்களை அனுப்பி முழுநீள சட்டை வாங்கி அணிந்து கொண்ட பின்னரே நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டத்துக்கு சமுகமளித்துள்ளனர். (செ-12)

# சுதந்திரக் கட்சிக் கூட்டங்களை அனுமதியின்றி நடத்த தடை!

(கொழும்பு)


அனுமதியின்றி கட்சிக் கூட்டங்களை நடத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகம் தடை விதித்துள்ளது. கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோருக்கு அறிவிக்காமல் அனுமதி பெறாமல கூட்டங்களை நடத்தக் கூடாதென தெரிவித்துள்ளது.

இதன் மூலம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னிச்சையாக கட்சிக் கூட்டம் நடத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தொடர்பான கூட்டங்களை நடத்த வேண்டுமாயின் அது குறித்து கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, சிரேஷ்ட உபதலைவர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோருக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும என கட்சி நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரகசிய சந்திப்புக்களை நடத்துதல், குழுக்களாக பிளவடைந்து செயற்படுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த உத்தரவினை உறுப்பினர்கள் மீறிச் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நேற்று ஞாயிற்றுக்கிழமை கட்சி உறுப்பினர்களை சந்தித்த போது ஜனாதிபதி இது பற்றி அறிவுறுத்தியுள்ளார். (செ-12)

# நிரந்தரமான பாதுகாப்பான சூழலே புதிய அரசின் எதிர்பார்ப்பு—

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

முழு நாட்டு மக்களும் வாழ தகுந்த நிரந்தரமான, பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும், நிரந்த பொருளாதார சௌபாக்கியத்தை பெற்றுக்கொடுப்பதே தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சகல இனங்களினதும் தேவைகளை பாதுகாக்கும்படியான பேச்சுவார்த்தை மூலம் வழியில் ஏடுக்கப்படும் தீர்மானங்கள் ஊடாக செயற்படுவதே புதிய அரசாங்கத்தின் கொள்கை எனவும் அவர் கூறியுள்ளார்.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், இலங்கையில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளை சந்தித்த போதே வெளிவிவகார அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஊழலை ஒழிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் கொள்கைகளின் அடிப்படையில் புதிய சட்டம் மற்றும் நிறுவனத்தை ஏற்படுத்துவதே புதிய அரசாங்கத்தின் அடிப்படை நோக்கம் என்றும் மங்கள சமரவீர இதன்போது குறிப்பிட்டுள்ளார். (செ-12)


## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, தபால் பெட்டி சந்திக்கருகாமையில் 2 3/4 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு (C-1621)

தொடர்புகளுக்கு
077 9773 375
004740042067



## இதய பூர்வமாக வாழ்த்துகின்றோம்



கோண்டாவில்
உப அஞ்சல்
அலுவலகம்,
யாழ் கோண்டாவில்
இராம கிருஷ்ண
மகாவித்தியாலய
ஆரம்பப்பிரிவு பாடசாலை
ஆகியவற்றை
அன்பளிப்பாக வழங்கிய
கோண்டாவில் வாழ்
சமூகசேவையாளரும்
கல்விக்
கொடையாளருமாகிய
**'செங்கைப் புரவோன்'**

திரு. **இராசையா குவேந்திரநாதன்** அவர்கள் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் குட்டிச்சுட்டி முன்பள்ளிக்கான காணியுடன் அமைந்துள்ள அகம், குழந்தைகள் பகல் நேரக்காப்பகம் மற்றும் கிராமசேவையாளர் அலுவலகம் ஆகியவற்றை வழங்கியமையைக் கௌரவித்து 29-08-2015 அன்று இடம்பெற்ற திறப்பு விழாவின் போது **'பொன்மனப்பேராளன்'** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையை மகிழ்ச்சியுடன் வரவேற்பதுடன் அவரது சமூகப்பணி மேன்மேலும் தொடர இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

(1625) கோண்டாவில் வாழ் மக்கள்



## கண்ணீர் அஞ்சலி

அமரர் இளையதம்பி குமரவேள்



எமது பாடசாலையின்
சங்கீத ஆசிரியை
திருமதி தேவமனோகரி
உருத்திரசிங்கம் அவர்களின்
தந்தையார்
அமரர் இளையதம்பி குமரவேள்
அவர்களின் மறைவினால்
துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
(C-1963)

பாடசாலைச் சமூகம், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் பிரபாகரன் தனிநாட்டு கோரிக்கையை கைவிடவில்லை

## விலகியமைக்கு விளக்கம் கூறும் கருணா



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனிநாட்டு கோரிக்கையை இறுதிவரை கைவிடவில்லை. ஆனால் நான் கூட்டாட்சி முறையை தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன். அதனால் புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேற நேரிட்டது என விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதியும் முன்னாள் பிரதி அமைச்சருமான கருணா என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தமிழக தொலைக்காட்சியான "தந்தி" தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அளித்த பேட்டியில்,

**கேள்வி: மகிந்த அரசாங்கத்துடன் நீங்கள் இணைந்திருந்தமையினை எவ்வாறு நியாயப்படுத்துவீர்கள்?**

**பதில்:** விடுதலைப் புலிகளை எதிர்த்து நான் அரசுடன் இணையவில்லை. அவர்களிடமிருந்து விலகியே அரசுடன் இணைந்து கொண்டேன். பிரபாகரனுக்கும் எனக்கும் தனிப்பட்ட பிரச்சினைகள் இருந்தது உண்மைதான். ஆனால், அது அதிகாரப் போட்டியல்ல. அரசியல் ரீதியான பிரச்சினையாலேயே நான் புலிகளிலிருந்து விலகினேன். அதாவது, சமஷ்டி முறையினை தலைவர் பிரபாகரன் ஏற்கவில்லை. அதனால்தான் அவருக்கும் எனக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டது. மடிந்த போராளிகளின் தியாகத்தை என்றும் மறக்கமுடியாது. நான் அரசுடன் இணைந்திருந்து மக்களின் நன்மைக்காகவே பாடுபட்டு வந்தேன். இறுதி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்திலிருந்து குரல் கொடுத்தேன். முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்கள் அனைவரையும் கொல்ல திட்டமிட்டார்கள். எனது முயற்சியால் சொந்த இடங்களில குடியமர்த்தினேன்.

**கேள்வி: இறுதி யுத்தத்தில அரசாங்கம் உங்களைப் பயன்படுத்தியதா? நீங்கள் தான் புலிகள் பற்றிய இரகசியங்களை அவர்களுக்கு தெரிவித்ததாகக் கூறப்படுகிறதே?**

**பதில்:** இது முற்று முழுதாக தவறான ஓர் விடயமாகும். இது தொடர்பில் நான் அரசாங்கத்துடன் எந்தவொரு உடன்படிக்கையினையும் செய்யவில்லை. அதற்கு அவசியமும் இல்லை. இறுதி யுத்தத்தின் போது, குறிப்பிட்ட ஒரு பகுதிக்குள்ளேயே விடுதலைப்புலிகள் இருந்தார்கள். அதனால் அவர்களை அழிப்பதில் எந்தவொரு சிரமமும் அரச படைகளுக்கு இருக்கவில்லை.


விடுதலைப் புலிகள் இயக்கத்தில் நான் ஒரு வீரனாகத் திகழ்ந்தேன். இதனால், நான் விடுதலைப் புலிகளை விட்டு வெளியேறியதும் அவர்களது போர்த்திறன் குறைவடைந்து விட்டது. இதுவும் அவர்களது தோல்விக்கு ஒரு காரணமாக அமைந்தது.

**கேள்வி: அவ்வாறாயின் அரசாங்கம் போரை வெற்றி கொண்டதற்கு நீங்கள்தான் காரணமா?**

**பதில்:** அவ்வாறு குறிப்பிட முடியாது. சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் நான் பல போராட்டங்களில் புலிகளுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்திருந்தேன். ஜெயசிக்குறு, ஆனையிறவு உள்ளிட்ட போர்களை வெற்றி பெற்றுக் கொடுத்திருந்தேன். இதனால் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எமது போராளிகள் 8 ஆயிரத்திற்கு மேல் உயிர்த் தியாகம் செய்திருந்தனர்.

**கேள்வி: "துரோகி கருணா" என்று கூறும்போது உங்கள் மனநிலை எவ்வாறு உள்ளது?**

**பதில்:** நான் தமிழ் மக்களுக்கு நல்லதையே செய்துள்ளேன். நாட்டில் நல்லிணக்கத்தை உருவாக்கியுள்ளேன்.



தற்போது, வடக்கு, கிழக்கிற்கு அரசியல்வாதிகள் சென்று வரும் சூழலை நானே உருவாக்கியுள்ளேன். யுத்தம் முடிவுக்கு வந்தற்கு நானும் ஓர் முக்கிய காரணமாக உள்ளேன். இதனால்தான் நாட்டில் சமாதான சூழல் ஏற்பட்டது.

"துரோகி கருணா" என்று கூறும் போது எனக்கு கவலையாக இருந்தாலும், அவ்வாறு என்னை துரோகி என்று கூறும் புலம் பெயர் தமிழர்கள் இங்கு சந்தோஷமாக வந்து செல்வதற்கான சூழலை நானே உருவாக்கினேன். இதனை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தனிநாடு என்ற கோரிக்கையை மாத்திரம் தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் சமஷ்டி முறைமையினையும், அமைதியான சூழலையுமே எதிர்பார்க்கின்றார்கள். அதனை இந்த தேர்தலின் மூலம் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். புலம்பெயர் தமிழர்களின் ஆதரவுடன், தனிநாடு என்ற கோரிக்கையினை முன்வைத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தலில் போட்டியிட்டிருந்தார்.

அவரது நிலைப்பாட்டை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் அவரை இந் தத் தேர்தலில் தமிழ் மக்கள் நிராகரித்தார்கள். அவரின் தோல்வி மூலம் அவரின் தனிநாட்டுக் கோரிக்கையும் தோல்வி கண்டுள்ளது. இதனால் தமிழ்மக்கள் ஓர் உண்மையை உணர்த்தியுள்ளார்கள்.

தமிழ் மக்கள் எப்பொழுதும் அமைதியையே எதிர்பார்க்கின்றார்கள். இதற்கு சமஷ்டி முறை சிறந்த ஒன்றாகும். இதனையே நான் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்த போதும் வலியுறுத்தியிருந்தேன்.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதனையே எதிர்பார்க்கின்றது. அவர்கள் தனிநாடுதான் வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தால், கஜேந்திரகுமாருக்கு ஆதரவு வழங்கியிருப்பார்கள்.

ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை. எனவேதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றிருந்தது. தனி நாடு கோரியவர்களுக்கு தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி தோல்வியடையச் செய்துள்ளார்கள்.

எனவே என்னுடைய நிலைப்பாட்டையும் அவர்கள் இப்பொழுது புரிந்து கொண்டிருப்பார்கள்.

கூட்டாட்சி முறையை ஏற்கத் தவறியமைதான் விடுதலைப்புலிகளின் தோல்விக்குக் காரணமாக அமைந்தது. முற்றுமுழுதாக நான் தான் காரணம் என்று கூறுவதை நான் ஏற்க மாட்டேன்.

நான் துரோகியல்ல. இந்தியப் படை இலங்கையிலிருந்த காலகட்டத்தில் தலைவர் பிரபாகரனை பாதுகாத்தவன் நான்தான்.

இந்தியப் படையினரின் கெடுபிடிகளின்போது, சூசையும் அவரை பாதுகாக்கவில்லை. பொட்டு அம்மானும் பாதுகாப்பு வழங்கவில்லை. அவர்கள் உள்ளிட்ட முக்கிய பொறுப்பாளர்கள் அனைவரும் பிரபாகரனை விட்டுவிட்டு நாட்டை விட்டு தப்பி ஓடிவிட்டார்கள்.

ஆனால், நான் மட்டக்களப்பிலிருந்து எனது உறவுகளையும் கூட்டிச் சென்று அவரை முல்லைத்தீவுக் காட்டில் வைத்துப் பாதுகாத் தேன்.

நான் இயக்கத்திலிருந்து விலகியதும், மாத்தையா செய்த துரோகத்தை நீயும் செய்து விட்டாய் என்று பிரபாகரன் என்னிடம் தெரிவித்தார். ஆனால் நான் எந்தவொரு துரோகத்தையும் செய்யவில்லை. மாறாக அவரின் உயிரையே காத்துள்ளேன். இந்தியப் படைக் காலத்திலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பிரபாகரனின் உயிரை நான் பாதுகாத்துள்ளேன். எனவே, என்னை துரோகி என்று குறிப்பிடுவது பொருத்தமற்ற ஒன்றாகும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசின் பொருளாதாரக் கொள்கை?

கடந்த அரசாங்கத்தின் பலவீனமான வெளிநாட்டுக் கொள்கை காரணமாக பல நாடுகள் இலங்கையில் முதலீட்டை மேற்கொள்ள முன வரவில்லை. இதனால் இலங்கை பல முதலீடுகளை இழந்ததுடன் அதன் மூலமாக கிடைக்கும் தொழில் வாய்ப்புக்களையும் இழந்திருந்தது என தற்போது ஆட்சி பீடம் ஏறியுள்ள ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சாட்டியது.

இதற்கு தீர்வாக கிழக்கு ஆசிய நாடுகளான சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா ஆகியவற்றுக்கும் இலங்கைக்கும் இடையே தற்போது நிலவும் வர்த்தக மற்றும் அரசியல் ரீதியான இடைவெளியை குறைத்து உயர்மட்ட அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலம் பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் வருமானத்தை அதிகரிப்பதற்கும் திட்டத்தை வகுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க அரசானது நாட்டின் பொருளாதார கட்டமைப்பை சீர்செய்யும் பாரிய பொறுப்பை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பதிவேற்றியது. அரசின் ஸ்திரத்தன்மையை தீர்மானிக்கும் பொருளாதார கட்டமைப்பை சரியான முறையில் அணுகுவது புதிய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தின் போது உள்ள முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகும்.

இடதுசாரி பொருளாதாரத்தையும் முதலாளித்துவ பொருளாதாரத்தையும் விட வளர்ச்சியடைந்த மனிதநேயம் கொண்ட பொருளாதாரத்தை சிறந்ததாக கொண்டு போட்டிச் சந்தை பொருளாதாரம், அரசின் பாரிய நிர்வாகத்தின் கீழ் பராமரிக்கப்படும்.

உத்தேச சமூக சந்தை பொருளாதார ரீதியான திறந்த பொருளாதாரத்தின் அத்திபாரத்தை விரிவாக்குவதை பொருளாதார ஜனநாயகமாக தனது பொருளாதார கொள்கையை கொண்டுள்ள ஐ.தே.க தேர்தல் பிரசாரங்களில் உறுதிமொழிவழங்கிய பத்து இலட்சம் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்க வேண்டியது முதல் கடமையாகும்.

அதேபோல் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தின்போது ஐரோப்பிய ஒன்றியத்தினால் நீக்கப்பட்ட GSP+ தீர்வை வரிச்சலுகையை பெறுவதற்கும் புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளதனான அந்தச் சலுகையினை மீளப்பெறும் பட்சத்தில் உள்நாட்டில் ஆடைத் தொழிற்துறையை விருத்தி செய்து அதன் மூலமாகவும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு உள்ளது. இருந்த போதிலும் உறுதியான வெளிநாட்டுக் கொள்கையினை பின்பற்றி வெளிநாட்டு முதலீட்டை நாட்டுக்குள் ஈர்ப்பதன் மூலம் புதிய தொழில் முயற்சிகளை உருவாக்கி அதனூடாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்கு வதனாலும் அரசாங்கத்தின் பத்து இலட்சம் தொழில் வாய்ப்பு இலக்கை அடைய முடிவதுடன் அது ஸ்திரமான பொருளாதாரத்திற்கு துணை புரியும்.

அனைவரையும் பணம் படைத்த ஓர் சமூகமாக மாற்றுவதையும் அறிவை அடிப்படையாக கொண்ட போட்டித்தன்மை வாய்ந்த சமூக சந்தைப் பொருளாதாரத்தை வேலைத்திட்டமாக கொண்டுள்ள புதிய அரசானது இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்த ஆடைகளுக்காக பெற்றுக் கொண்ட GSP+ வரிச் சலுகையை வெகு விரைவில் பெற்றுக் கொள்ளதக்கதான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

GSP+ வரிச்சலுகையை இழந்ததனால் கடந்த காலத்தில் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் தைத்த ஆடை ஏற்றுமதியின் பங்களிப்பு குறைந்து காணப்பட்டது. எனவே, இந்நிலையை சீர்செய்ய புதிய அரசு தனது இராஜதந்திர உக்திகளை பயன்படுத்தி இவ் வரிச்சலுகையை மீளப்பெறும் முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும்.

இந்த முயற்சி அரசியல் ரீதியான தாக்கத்திற்கு உள்ளாகக் கூடும். காரணம் கடந்த அரசாங்கம் மனித உரிமைமீறல் செயற்பாட்டில் ஈடுபட்டதான குற்றசாட்டை அடிப்படையாக வைத்து ஐரோப்பிய ஒன்றியம் மேற்படி வரிச்சலுகையை இலங்கைக்கு தடை செய்தது.

இதனால் இலங்கையில் தைக்கப்பட்ட ஆடைகள் ஐரோப்பிய சந்தை வாய்ப்பை இழந்தது. இதன் விளைவு உள்நாட்டில் பல ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதுடன் மேலும் பல ஆடைத் தொழிற்சாலைகள் தமது பணியாட்களின் எண்ணிக்கை குறைப்பை மேற்கொண்டன. இதனால் பல்லாயிரக் கணக்கான இளைஞர் யுவதிகள் தொழில் வாய்ப்பை இழந்தனர்.

புதிய அரசானது தனது கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு GSP+ வரிச்சலுகையை பெற்றுக் கொள்ள தடையாக இருக்கும் காரணிகளை சீர்செய்வதன் மூலம் இந்த சலுகையை மீளப் பெறும் முயற்சியை ஆரம்பிக்க வேண்டும்.

அதே போல் GSP+ தீர்வை வரிச் சலுகைக்கு மேலதிகமாக அமெரிக்கா, இந்தியா, சீனா, சிங்கப்பூர், கிழக்காசிய உட்பட ஏனைய சார்க் நாடுகளுடன் வர்த்தக மற்றும் முதலீட்டு உடன்படிக்கைகளை செய்வதன் மூலம் முதலீட்டுக்கான உற்பத்தி பொருட்களுக்கு பாரிய சந்தை வாய்ப்பை பெற்றுக் கொள்ளும் தமது கொள்கையை சரிவர முன்னெடுக்க வேண்டிய பொறுப்பை நிறைவேற்ற வேண்டியதுடன் ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட் டுள்ள இலங்கையிலிருந்து மீன் இறக்குமதி தடையை நீக்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின்பால் கவனம் செலுத்தி அவர்களின் உற்பத்திக்கு போதிய சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுத்தல், தொழில் முயற்சிக்கு தேவையான கடன் உதவிகளை பெற்றுக் கொடுத்தல், தொழிலுக்கு சரியான முறையில் வழிகாட்டலை வழங்கல் போன்றவற்றிலும் அரசு கவனம் செலு த்துதல் அவசியம்.

இதேபோல், உட்கட்டுமானம், கிராமிய அபிவிருத்தி போன்றவற்றை விருத்திசெய்வதனாலும் புதிய அரசாங்கம் முன்மொழிந்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதார சீராக்கங்களை சரியான முறையில் அணுகிகடைப்பிடிக்கப்படும் பட்சத்தில் உறுதியான பொருளாதாரத்தின் ஊடாக இனிவரும் காலங்களில் பொருளாதார வளர்ச்சி வீதத்தை உயர் நிலையில் பதிவு செய்ய முடியும்.




## வெற்றிமொழி –பீற்றர் ட்ரக்கர்

பீட்டர் பெர்டினண்ட் ட்ரக்கர் (Peter F Drucker) மேலாண்மை துறையைச் சார்ந்த புகழ்பெற்ற வல்லுநர். 1909-ஆம் ஆண்டு ஆஸ்திரியாவில் பிறந்த இவர், அமெரிக்காவின் நியூயோர்க் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக பணியாற்றியவர். தனது தந்தையின் நண்பரின் மூலம் மேலாண்மை துறையில் இவருக்கு ஈடுபாடு ஏற்பட்டது.

மேலாண்மை பற்றிய இவரின் புத்தகங்களும், எண்ணற்ற கட்டுரைகளும் உலகளவில் மிகவும் புகழ்பெற்றவை. பல்வேறு நாடுகளில் உள்ள பல பல்கலைக்கழகங்கள் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டத்தினை வழங்கி பெருமைப்படுத்தின. மேலும், ட்ரக்கரின் கோட்பாடுகள் பல நிறுவனங்களால் இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

# எவராலும், கட்டாயப்படுத்தி ஒரு விடயத்தை மற்றொருவருக்கு கற்றுக்கொடுக்க முடியாது.
# உங்களுக்கு புதிதாக ஏதாவது வேண்டுமானால், நீங்கள் செய்யும் பழைய செயலை முதலில் நிறுத்த வேண்டும்.
# தொடர்பாடலில் உள்ள முக்கியமான விடயம், எது சொல்லப்படவில்லை என்பதை தெரிந்து கொள்வதே.
# பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்பு இல்லாத இடத்தில், திட்டங்களுக்கு வேலை இல்லை வெறும் வாக்குறுதிகளும், நம்பிக்கையும் மட்டுமே இருக்கும்.
# ஒரு வணிகத்தின் நோக்கம் வாடிக்கையாளர்களை உருவாக்குவதும், அவர்களை தக்கவைப்பதுமே.
# நல்ல முடிவுகளை எடுப்பது, ஒவ்வொரு மட்டத்திலும் ஒரு முக்கியமான திறனாகிறது.
# எதிர்காலம் பற்றி நமக்கு தெரியும் ஒரே விடயம், அது மாறுபட்டதாக இருக்கும் என்பது மட்டுமே.
# எப்போதெல்லாம் ஒரு வெற்றிகரமான வணிகத்தை பார்கின்றீர்களோ, அங்கு யாரோ ஒருவர் ஒரு தைரியமான முடிவை எடுத்திருக்கின்றார் என்று அர்த்தம்.
# எது அளவிடப்படுகிறதோ, அதுவே செம்மைப்படுத்தப்படுகிறது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,471.17 | 7,350.52⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,140.68 | 4,049.15 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் — புரள்வு (ரூபா.மில்.) 9,696.976

**உயர்வடைந்த பங்குகள்(ரூ):** சிலோன் பிறின்டர்ஸ்(2,250.00),ஈகுவிட்டி ரூ (72.00),ஜே.கே.எச்(W)(40.30), பீப்பிள்ஸ் மேர்ச்.(25.10), சிஎப்ரி(8.20).

**சரிவுக் கண்ட பங்குகள்(ரூ):** ஹப்புகஸ்ரேன்(26.20),புளு டைமன்ட்ஸ் (X) (0.50),ரீ சிமோல் ஹோல்டர்(34.10),அஸ்ஹொட் ஹோல்டிங் (W)(23.90), ஈஸ்டன் மேர்சன்ட்(9.70)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## பணக்கார நாடுகள்

உலகின் பணக்கார நாடுகளை வகைப்படுத்தியுள்ளது சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எப்). 188 நாடுகள் இதில் உறுப்பு நாடுகளாக உள்ளன. நாடுகளின் மக்கள் தொகை, பொருளாதார வளர்ச்சி, தனிநபர் வருமானம், வேலை வாய்ப்பற்றோர் சதவீதம், சர்வதேச வர்த்தகம், ஏழ்மை அகற்றம் உள்ளிட்ட பல்வேறு அளவுகோல்களின் அடிப்படையில் பணக்கார நாடுகளை பட்டியலிட்டுள்ளது.

ஏற்கெனவே பொருளாதார ரீதியாக வளர்ந்த நாடுகளான ஜி-8 நாடுகளில் சில நாடுகள் இந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை. ஆனால் வளரும் நாடுகளோடு சேர்ந்து அடையாளம் காணப்பட்ட ஜி-20 நாடுகள் பட்டியலில் இந்த பணக்கார நாடுகள் இடம்பிடித்துள்ளன.

### ஜப்பான்

ஜிடிபி: 4.60 லட்சம் கோடி டாலர்
ஜிடிபி வளர்ச்சி 2015: 0.70%
மக்கள் தொகை: 12.73 கோடி
தனிநபர் வருமானம்: 35,634 டாலர்கள்
வேலைவாய்ப்பற்றோர்: 4.1%
தொழில் சுதந்திரம்: 84.1%

உலகின் அதிக இறக்குமதி செய்யும் நாடுகளில் ஜப்பானும் ஒன்று. 81,310 கோடி டாலருக்கு இறக்குமதி செய்கிறது.

மொத்த இறக்குமதியில் கச்சா எண்ணெய் 32.3 சதவீதமாக உள்ளது. எலெக்ட்ரானிக் பொருட்கள், இன்ஜின்கள், பம்புகள் இறக்குமதியில் முன்னிலை வகிக்கிறது.

### பிரேசில்

ஜிடிபி: 2.34 லட்சம் கோடி டாலர்
ஜிடிபி வளர்ச்சி 2015: -1.6
மக்கள் தொகை: 19.83 கோடி
தனிநபர் வருமானம்: 15,412 டாலர்கள்
வேலைவாய்ப்பற்றோர் : 6.6%
தொழில் சுதந்திரம்: -53.6%

22,910 கோடி டாலருக்கு இறக்குமதி செய்கிறது. மொத்த இறக்குமதியில் 19.7 சதவீதம் கச்சா எண்ணெய்க்கு. எலெக்ட்ரானிக் வகையினங்களுக்கான இறக்குமதிக்கு 2,700 கோடி டாலர் செலவு செய்கிறது.

### இந்தோனேசியா

ஜிடிபி: 0.88 லட்சம் கோடி டாலர்
ஜிடிபி வளர்ச்சி 2015: 4.67
மக்கள் தொகை : 24.80 கோடி
தனிநபர் வருமானம்: 10,098 டாலர்கள்
வேலைவாய்ப்பற்றோர்: 6.0%,
தொழில் சுதந்திரம் :-49.3 %

கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு அதிகம் செலவு செய்கிறது. மொத்த இறக்குமதி மதிப்பு 17,820 கோடி டாலர். இதில் கச்சா எண்ணெய் 4,390 கோடி டாலர்.

இறைச்சி மற்றும் கடல் உணவு வகைகளை 4.58 கோடி டாலருக்கு இறக்குமதி செய்கிறது.

### அமெரிக்கா

ஜிடிபி: 17.41 லட்சம் கோடி டாலர்
ஜிடிபி வளர்ச்சி 2015: 2.3%
மக்கள் தொகை: 31.64 கோடி
தனிநபர் வருமானம்: 52,117 டாலர்கள்
வேலைவாய்ப்பற்றோர்: 7.5%
தொழில் சுதந்திரம்: -88.8%

உலகின் இரண்டாவது பெரிய பணக்கார நாடு மட்டுமல்ல, அதிக அளவு இறக்குமதி செய்வதும் அமெரிக்காதான்.

2.41 லட்சம் கோடி டாலருக்கு இறக்குமதி மதிப்பைக் கொண்டுள்ளது.

கச்சா எண்ணெய் 35,630 கோடி டாலருக்கு இறக்குமதி செய்கிறது. மொத்த இறக்குமதியில் இது 14.8 சதவீதம்.

### இங்கிலாந்து

ஜிடிபி: 2.94 லட்சம் கோடி டாலர்
ஜிடிபி வளர்ச்சி 2015: 2.6
மக்கள் தொகை: 6.41 கோடி
தனிநபர் வருமானம்: 37,307 டாலர்கள்
வேலைவாய்ப்பற்றோர்: 7.5%
தொழில் சுதந்திரம்: -91.1%

68,250 கோடி டாலருக்கு இறக்குமதி செய்கிறது. பம்புகள், இன்ஜின்கள் இறக்குமதியில் முன்னிலை வகிக்கிறது. இதற்கு மட்டும் 13.2 சதவீதம்.

கச்சா எண்ணெய் இறக்குமதி மதிப்பு 7,690 கோடி டாலர்கள். ரயில்வே மற்றும் டிராம் உபகரணங்கள் 88.21 கோடி டாலருக்கு இறக்குமதி செய்கிறது.

### ஜெர்மனி

ஜிடிபி: 3.85 லட்சம் கோடி டாலர்
ஜிடிபி வளர்ச்சி 2015: 1.6
மக்கள் தொகை: 8.08 கோடி
தனிநபர் வருமானம்: 43,443 டாலர்கள்
வேலைவாய்ப்பற்றோர்: 5.3%
தொழில் சுதந்திரம்: -88.2%

ஐந்தாவது பணக்கார நாடு. இந்த நாட்டின் இறக்குமதி மதிப்பு 1.218 லட்சம் கோடி டாலர்கள்.

16,100 கோடி டாலர் மதிப்புக்கு கச்சா எண்ணெய் இறக்குமதி செய்கிறது.

எலெக்ட்ரானிக்ஸ், மருந்து பொருட்கள், இயற்கை ரசாயனங்கள், உருக்கு உள்ளிட்டவை இறக்குமதி செய்கிறது.

## வரவு செலவுத் திட்டத்துக்கான ஆலோசனைகள்

அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட பிரேரணைகள் சமர்ப்பிப்பதற்கு முன்னர், அரச தனியார் அமைப்புக்கள் மற்றும் பொது மக்களின் ஆலோசனைகளை நிதி அமைச்சு கோரியுள்ளது.

அவற்றின் மூலம் பெறப்படும் ஆக்கபூர்வமான விடயங்கள் வரவு செலவுத் திட்ட பிரேரணைகளில் உள வாங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 60 மாத காலப் பகுதியினுள் மேற்கொள்ளப்படும் 5 அம்ச திட்டத்தினை சிறந்த முறையில் அமுல்படுத்துவதற்கு ஏற்ற பிரேரணைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளன.

பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல், ஊழலுக்கு எதிரான செயல்பாடு, சுதந்திரத்தை பேணுதல், உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல் மற்றும் முதலீட்டை மற்றும் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும், 5 அம்ச திட்டங்கள் குறித்த பிரேரணைகள் வரவேற்கப் படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக அமைச்சுக்கள், திணைகளங்கள், கூட்டுத்தாபனங்கள், வர்த்தக சம்மேளனங்கள், தொழில் சார் நிபுணர்கள், புத்திஜீவிகள் போன்றவர்கள் தமது பரிந்துரைகளை அனுப்பி வைக்க முடியும் என அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேரணைகளை நிதி அமைச்சின வரவு செலவுத் திட்டப் பிரிவுக்கு அனுப்பி வைக்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 132.87 | 136.77 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 204.14 | 211.63 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 148.52 | 154.65 |
| சுவிஸ் பிராங் | 136.61 | 142.57 |
| கனேடிய டொலர் | 100.15 | 104.47 |
| அவுஸ்திரேலிய டொலர் | 94.63 | 99.23 |
| சிங்கப்பூர் டொலர் | 94.46 | 98.25 |
| ஜப்பான் யென் | 1.09 | 1.13 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.03 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.52 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையை காப்பாற்ற வேண்டியது அமைச்சர்களின் முக்கிய பொறுப்பாகும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தேசிய அரசாங்கம் தொடர்பான பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாத்துக் கொள்வது அமைச்சர்களின் பொறுப்பாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையில் கலந்துரையாடலின் போது அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீகொத்தாவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற அமர்வுகளின் போது அனைத்து அமைச்சர்களும் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும்.



அமைச்சர்கள் மட்டுமன்றி பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப் பினர்களும் பொதுமக்களின் குறைகளை கவனித்து, அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் ராஜித சேனாரத்ன, மிகவும் கடுமையான முயற்சியின் பின்னர் ஐ.தே.க. அதிகாரத்துக்கு வந்துள்ளது என்றும் அதனை தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வது அனைவரின் பொறுப்பு என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மேல் மாகாண முதலமைச்சராக திலக்கசிறியை நியமிக்க வாய்ப்பு

(கொழும்பு)

மேல் மாகாண முதலமைச்சராக கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் காமினி திலக்கசிறி நியமிக்கப்படலாம்என அரசியல்தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேல் மாகாண முதலமைச்சராக பதவி வகித்த பிரசன்ன ரணதுங்க, கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் கம்பஹா மாவடத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவானார். இதனால், முதலமைச்சர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

அந்த பதவியை கைப்பற்ற மூன்று பேர் போட்டியிட்டு வருகின்றனர். கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த காமினி திலக்கசிறி முதலமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் என ஒரு அணி வலியுறுத்தி வருகிறது.

கம்பஹா மாவட்டத்தை சேர்ந்த சுனில் விஜேரத்ன முதலமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் என மற்றுமொரு அணி கோரி வருகிறது.

எனினும் கம்பஹா மாவட்டத்தை சேர்ந்த ஒருவர் தொடர்ந்தும் முதலமைச்சர் பதவியை வகித்துள்ளதால், இம்முறை அந்த பதவி கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும்என வலியுறுத்தப் படுகிறது.

இதனால், மேல் மாகாண முதலமைச்சராக காமினி திலக்கசிறி நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் 9 மாகாணங்களில் அதிக மக்கள் தொகை மற்றும் நகரங்களை கொண்ட மாகாணம் மேல் மாகாணம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் கணபதிப்பிள்ளை அரசரத்தினம்
(சின்னத்தம்பி)

மலர்வு:-26.08.1939

உதிர்வு:-01.08.2015

அப்பா!
அந்த மூன்றெழுத்தின் மூச்சு
அடங்கிப் போனது! ஏனப்பா... ஏன்?
எவர் வந்து எம்மை ஆற்றுவார்
என்ன நினைத்து துயர் தந்து
நெஞ்சைப் பிளந்து சென்றீர்
நீர்கொஞ்சி மகிழ்ந்த கன்னத்தில்
நீர் கொட்டித்தவழ-எம்மை விட்டு
எங்கே போனீர்கள் அப்பா...

01.08.2015 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தந்தையின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வும் வீட்டுக்கிருத்தியமும் 31.08.2015 இன்று வட்டக்கச்சியில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தயவு செய்து இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இல. 52, கட்சன் வீதி,
வட்டக்கச்சி.

இங்ஙனம்
குடும்பத்தினர்.



# கண்ணீர் அஞ்சலி



அமரர் கிருஷ்ணமூர்த்தி பரமகுரு

ஏஷியன் பெயின்ற்ஸ் லங்கா லிமிட்டட் ஸ்தாபனத்தின் தேசிய முகாமையாளர்
**அமரர் கிருஷ்ணமூர்த்தி,** பரமகுரு அவர்கள் 29.08.2015 சனிக்கிழமை இயற்கை எய்தினார்.
நேற்றுவரை எம்மோடு உறவாடி இருந்தீர்
காற்றாகி இன்றெங்கே கனவாகிப் போனீர்
கூற்றுவன் உமைக் கொன்டேக நோயாக வந்தான் தேற்ற ஒரு மொழியில்லை
தேம்பும் மனதிற்கு உங்களின் ஆத்மா சாந்தியடைய எங்களின் பிரார்த்தனையை இறைவனிடம் சமர்ப்பிக்கினறோம்
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஏஷியன் பெயின்ற்ஸ் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்கின்றோம்

யாழ்ப்பாண இரும்பகம் ஏஷியன் பெயின்ற்ஸ் விநியோக நிலையம்,32, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.


# ராசி பலன்

31.08.2015
(ஆவணி 14, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
துதியை முன்னிரவு 8.34 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 1.45 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது சந் | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ஆயிலியம், மகம்<br>காலை 8.00இற்கு<br>மீன-சந்<br>கீழ் நோக்கு நாள் | | செவ் சுக |
| | | | குரு சூரி |
| | | சனி | புத ராகு |

**மேடம்:** மன அமைதி கூடும் நாள், நண்பர்கள் கடைசி நேரத்தில் கை கொடுத்து உதவுவர், பயணத்தால் பலனுண்டு, கொடுக்கல்-வாங்கல்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** இனிய செய்திகள் வந்து சேரலாம், ஒளிமயமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பாராட்டும் புகழும் கூடும், உறவினர்களின் வருகையுண்டு.

**மிதுனம்:** தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், உடல்நலன் சீராகும், வேலைச்சுமை கூடினாலும் பலன் கிடைக்கும்.

**சிம்மம்:** உதவி செய்த சிலரே உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடையலாம், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வார்த்தையில் நிதானம் தேவை.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், பணப்பழக்கம் அதிகரிக்கும்.

**துலாம்:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** மாற்றினத்தவர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தூரத்து உறவினர்களின் வருகையுண்டு, பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**தனுசு:** எதிர்காலம் இனிமையாக அமைய புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங் கும் எண்ணம் உருவாகும், பண வரவு திருப்தி தரும்.

**மகரம்:** சேமிப்பில் அக்கறை காட்டு வீர்கள், தொழில் ரீதியாக் எடு த்த முயற்சிகள் வெற்றி தரும், தொலைபேசி வழியில் அனு கூலச் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறு நாள், இல்லத்தில் இன்பங்கள் கூடும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், நல்லவ களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மீனம்:** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாமல் இருப்பது நல்லது, மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோட்டார்வாகன மூன்றாம்நபர் காப்புறுதியை கமநல காப்புறுதியைச் சபையில் பெற முடியும்

## யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் தகவல்

மோட்டார் வாகன மூன்றாம் நபர் காப்புறுதியை இனிவரும் காலங்களில் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபையில்பெற்றுக்கொள்ள முடியும் என கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபை யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் து.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையில் மோட்டார் வாகன மூன்றாம் நபர் காப்புறுதியை பெற்றுக்கொள்ளும் நடைமுறை கடந்த ஜூலை மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதில் வாகன வகைக்குரிய காப்புறுதி கட்டண விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் மோட்டார் சைக்கிளுக்குரிய கட்டணம் 470 ரூபாவும் முச்சக்கரவண்டிக்குரிய கட்டணம் 900 ரூபாவும் 4 சக்கர உழவு இயந்திரத்திற்கான கட்டணம் 700 ரூபாவும் இரண்டு சக்கர உழவு இயந்திரத்திற்கான கட்டணம் 500 ரூபாவும் இருநோக்க (Dual purpose) வாகனத்துக்கான கட்டணம் 750 ரூபாவும் காருக்கான கட்டணம் 750 ரூபாவும் பாரவூர்திக்கான கட்டணம் ஆயிரத்து 300 ரூபாவும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் காரியாலயங்களிலும் காப்புறுதி செய்துகொள்ளமுடியும்.

அத்துடன் எதிர்காலத்தில் கமநல சேவை நிலையங்களிலும் வெளிக்கள உத்தியோகத்தர்களூடாகவும் வாகன காப்புறுதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## உரையரங்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்பு கற்கைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இணைப்பாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் உரையரங்கு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு மொழிபெயர்ப்புத்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது இலக்கிய மொழி பெயர்ப்புகள்- நுட்பங்களும் வாக்குகளும் எனும் தலைப்பில் தமிழ்நாட்டு திண்டுக்கல் காந்தி கிராம பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் என்.ஆனந்தகுமார் உரையாற்றவுள்ளார்.

மேலும் அறிமுகவுரையினை தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் வழங்குவதுடன் கவிஞர் சோ.பத்மநாதன் கருத்துரையினை வழங்கவுள்ளார். (இ-5)



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 149 ஆவது பொலிஸ் தினம் நேற்றைய தினம் யாழ். கோட்டைப்பகுதியில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜி.கே.பெரேரா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அணிவகுப்பு, உயிர்நீத்த பொலிஸ் அதிகாரிகளுக்கான அஞ்சலி நிகழ்வு, ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு என்பன இடம்பெற்றன. (படங்கள்: எம்.லலித்)

# அவதிப்படும் கால்நடைகள்



வடமராட்சிப் பகுதிகளில் உள்ள குளங்களில் நீர் வற்றியுள்ளமையால் கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ள்தாக தெரிவிக்கப்படுகின்றது. இதில் குறிப்பாக கப்பூது கரவெட்டி கரணவாய், முள்ளிவல்லைவெளி, உடுப்பிட்டி போன்ற தரவைப் பகுதியில் உள்ள குளங்களிலே இவ்வாறு நீர்வற்றி சேறு நிரம்பிய நிலையில் காணப்படுகின்றது.

இதனால் கால்நடைகள் அருந்துவதற்கு நீர் இன்றி வீதிகள் எங்கும் அலைந்து திரிகின்றன.

இது தொடர்பாக கால்நடை வளர்ப்பு உரிமையாளர்களும் கவனம் செலுத்துவது இல்லை. அத்துடன் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள தரவைப் பகுதிகளில் உள்ள புற்களை சில விசமிகள் எரித்து விடுகின்றனர். இதனால் கால்நடைகள் நீரின்றி, உணவின்றி அலைந்து திரி கின்றன.

இதேவேளை அருகில் உள்ள வயல்களுக்குச் சென்று வயல் களை நாசம் செய்கின்றன. இதனால் விவசாயிகள் பெரும் சிரமத்தினை தினமும் எதிர்நோக்கி வருகின்றனர்.

சில சமயங்கள் கால்நடைகள் பிடிக்கப்பட்டு கட்டி வைக்கப்பட்டு உரிமையாளர்களிடம் கொடுக்கப்பட்டும் வருகின்றன.

எனவே குளங்களில் உள்ள சேறு என்பவற்றை உரியமுறையில் அகற்றி கால்நடைகளுக்கு நீர் பெற்றுக் கொடுக்க விவசாய சம்மேளனங்கள் முன் வர வேண்டும் எனவும் கால்நடைகள் உண்ணுவதற்கு உரிய புற்களை நாசம் செய்வது தொடர்பாகவும் உரிய கவனம் செலுத்துமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளால் அப்பிரதேச விவசாய சம்மேளனங்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-5-60)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ். மற்றும் வவுனியா பிரதேசத்தில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

01.09.2015 செவ்வாய் யாழ். பிரதேசத்தில் அராலி சரஸ்வதி வித்தியாலயத்தடி, கருப்பிட்டிப் பிள்ளையார் கோவிலடி, அராலித் துறைமுகம், களவாத்துறை, அராலி வடக்கு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பழையவாடி, ஆறுமுகத்தான் புதுக்குளம், பன்றிக்கெய்தகுளம், புளியங்குளம், கொம்புவைத்த குளம் படைமுகாம், இரணையிலுப்பைக் குளம், விளாத்திக்குளம், பரசன் குளம், சின்னவலயன்கட்டு ஆகிய பிரதேசங்களிலும்,

02.09.2015 புதன் யாழ் பிரதேசத்தில் கந்தரோடை, உடுவில் கற்பக்குணை, சங்குவேலி ஆகிய பிரதேசங்களிலும்,

03.09.2015 வியாழன் யாழ் பிரதேசத்தில் அராலி சரஸ்வதி வித்தியாலயத்தடி, கருப்பிட்டிப் பிள்ளையார் கோவிலடி, அராலித் துறைமுகம், களவாத்துறை, அராலி வடக்கு ஆகிய பிரதேசங்களிலும்,

04.09.2015 வெள்ளி யாழ் பிரதேசத்தில் கந்தரோடை, உடுவில் கற்பக்குணை, சங்குவேலி ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)




# ஆங்கில செறிவூட்டல் 3 மாத பயிற்சி நெறி

அமெரிக்க தகவல் கூடம் உயர் கல்வி கற்க விரும்பும் உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்காக வழங்கும் ஆங்கிலம் செறிவூட்டல் தொடர்பான மூன்றுமாத காலப் பயிற்சி நெறி செப்டெம்பர் 17 ஆம் திகதி முதல் மார்கழி 11ஆம் திகதி வரை வாரத்தில் வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை யாழ்.பொதுசன நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிகளுக்கு அனுமதிகள் தேர்வுப் பரீட்சைகள் மூலமாகவே வழங்கப்படவுள்ளது. இதற்கமைய எதிர்வரும் 9 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ். பொதுசன நூலகத்தில் தேர்வுப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

எனவே 8 ஆம் திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளும்படி விண்ணப்பதாரிகளை கேட்கப்பட்டுள் ளது. விண்ணப்பதாரிகள் தமது பதிவுகளை இல.23, அத்தியடிவீதி, நல்லூரில் அமைந்துள்ள மேற்படி அமெரிக்கத் தகவல் கூடத்தில் நேரடியாகச் சென்று மேற்கொள்ள முடியும்.

அத்துடன் 021 222 0665 எனும் தொலைபேசி இலக்கங்களுடனும் அல்லது americancornerjaffna2011@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இப்பயிற்சி முடிவில் பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும். சான்றிதழ்கள் பயிற்சிநெறியை முழுமையாகப் பூர்த்தி செய்தவர்களுக்கே மாத்திரம் வழங்கப்படும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# 18 ஆயிரத்து 279 முதியவர்களுக்கு யாழில் மாதாந்தக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் குறைந்தளவு வருமானத்தைப் பெறும் 70 வயதுக்கு மேற்பட்ட 18 ஆயிரத்து 279 முதியவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் முதியோர்களுக்கான தேசிய சேவை அமைச்சினால் முதியவர்களுக்கு பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கென விசேட அடையாள அட்டை வழங்கப்படுகின்றது.

இவ் அடையாள அட்டையானது முதியவர்களுக்கு பொது இடங்களில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதற்காக வழங்கப்படுகின்றது. இதற்கான விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் 3 ஆயிரம் ரூபாவிற்கு குறைந்த வருமானத்தைப் பெறும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு இலவச கண் வில்லைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் இச் செயற்பாடு தாமதமாகி இருந்தாலும் தற்போது விண்ணப்பித்து ஒரு மாதத்திற்குள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மேலும் கிராம மட்டங்களில் முதியவர்களுக்கான குழுக்கள் அமைக்கப்பட்டு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சலுகைகளை இது வரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தத்தமது பிரதேச செயலகங்களூடாக பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி பதவி வெற்றிட விண்ணப்பம் கோரல் (வெளிவாரி)

பதவி: களஞ்சிய முகாமையாளர் (வடிகலன் இயக்குநர்)
ச.குறியீட்டு இல: 208/14
சம்பள அளவுத்திட்டம்: 9700–11350
80X10–85X10
சுற்று நிருபம்: 66/2006 தற்போது நடைமுறையிலுள்ள கூ.ஊ. ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களின் படியான அனைத்து கொடுப்பனவுகளும் (15%, 30% உட்பட)

தகைமைகள்:

அ)கூட்டுறவு பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறையொன்றில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது, கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறையில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரணம்) கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி.

வயதெல்லை: 18–45 இற்கு இடைப்பட்டவர்கள்.
ஏனைய விபரங்கள்: இப்பதவிக்கு ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

பதவி: கணக்காளர்
குறியீட்டு இலக்கம்: 104/09
சம்பள அளவுத்திட்டம்: 10950–13650
130X10–140X10
சுற்று நிருபம்: 66/2006 தற்போது நடைமுறையிலுள்ள கூ.ஊ. ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களின் படியான அனைத்து கொடுப்பனவுகளும். (15%,30% உட்பட)

தகைமைகள்:

அ)கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத்திட்ட கணக்காளர் அல்லது உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்றில் மூன்று (3) வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்கப் பணியாளர் 11 ஆவது சம்பளத்திட்ட உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது கணக்குப் பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு (6) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப்பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டுப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

இ)கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட 03 பாடங்களில் சித்தியுடன் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வைமட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

வயதெல்லை: 18–45 இற்கு இடைப்பட்டவர்கள்.
ஏனைய விபரங்கள்: இப்பதவிக்கு இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

பதவி: எழுதுநர்
குறியீட்டு இலக்கம்: 302/15
சம்பள அளவுத்திட்டம்: 9450–11000
75X10–80X10
சுற்று நிருபம்: 66/2006 தற்போது நடைமுறையிலுள்ள கூ.ஊ. ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களின் படியான அனைத்துக் கொடுப்பனவுகள் (15%, 30% உட்பட)

தகைமை:

அ)கூட்டுறவு ஊழியர் 16 ஆம் சம்பளத்தில் எழுதுநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது இரண்டு (2) ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப்பத்திரம்/க.பொ.த. சாதாரணதரப் பத்திரம்/ க.பொ.த. பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண்கணிதம் /வர்த்தக எண்கணிதம்/ தூய கணிதம்/ கணிதம் உடன் சிங்களம்/தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான திறமைச் சித்தியுடன் கூட்டுறவுச் சங்கமொன்றில் இலிகிதர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஒரு (01) ஆண்டு கால அனுபவம்.

வயதெல்லை: 18–45 இற்கு இடைப்பட்டவர்கள்.
ஏனைய விபரங்கள்: இப்பதவிக்கு இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

பொதுவான நிபந்தனைகள்:

அ)கொத்தணியினால் வழங்கப்படும் விண்ணப்பங்களை மாத்திரம் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.

ஆ)மேலே காணப்படும் பதவிக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை கொத்தணி காரியாலயத்தில் கட்டணம் செலுத்தி பெற்று உரிய வகையில் பூர்த்தி செய்து அவசியமான இணைப்புக்களுடன் 15.09.2015 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி என்ற முகவரிக்கு கிடைக்கத்தக்கதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்தில் எழுத்துக் கொள்ளப்படமாட்டாது.

இ) தற்போது கூட்டுறவு சேவையிலுள்ள பணியாளர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.


ஈ)ஏனைய சங்கத்தில் பணியாற்றும் பணியாளர்கள் ஆயின் அச்சங்கத்தின் நிர்வாக சபை ஊடாக விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

25.08.2015

(க.துரைசிங்கம்)
தலைவர்

# தல்தாவை விட சௌவிரத்னவை சிறப்பாக கவனிக்கும் ஐ.தே.க.!

## வீரவன்ச குற்றச்சாட்டு



ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரளவுக்கு வழங்கப்படவுள்ள அமைச்சு பதவியை விட, முக்கியமான அமைச்சு பதவி ஒன்றினை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜோன் செனவிரத்னவுக்கு வழங்க திட்டமிட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜோன் செனவிரத்னவுக்கு முக்கிய அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளமை குறித்து தனக்கு தகவல் கிடைத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்காரர்கள் குழப்பமடைந்துள்ளதாகவும், வெற்றிலைக்கு வாக்களித்தவர்களுக்கு என்ன நடக்கும் என பார்த்து கொண்டிருப்பதாகவும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


காணி விற்பனைக்கு

பலாலி வீதி, தபால் பெட்டி சந்திக்கருகாமையில் 2 3/4 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு (1621)

தொடர்புகளுக்கு
077 9773 375
004740042067

டயானா பிளாஸ்ரிக் மீள் சுழற்சி

சகல விதமான உடைந்த பிளாஸ்ரிக் போன்றவை உத்தரவாதத்துடன் ஒட்டிக் கொடுக்கப்படும்.
☀ பழைய பிளாஸ்ரிக் விலைக்கு வாங்கப்படும்.
108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 077 5925088,
021 222 8680
(C-1812)

வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(C-478)

கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776




| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 24 செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: HNDM/ தனியார் தொழில்<br>தொ.இ: B/1288 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 34 செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/2032 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 55 செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/1294 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 33 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: G/2034 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 23<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ ஜேர்மனி<br>தொ.இ: B/1295 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 25 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'2'<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/2035 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 30 செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: Diploma/ ஆசிரியர்<br>தொ.இ: B/1297 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: மருத்துவ விஞ்ஞானம்/ லண்டன் NOT PR<br>தொ.இ: G/2036 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
... காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் வவு. வைத்தியசாலையில் வேலைத் திட்டங்கள்

(மல்லாவி)

ஐரோப்பிய ஒன்றியத்தின் 60 மில்லியன் யூரோக்கள் நிதியுதவி திட்டத்தின் ஊடாக வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் கழிவு நீர் அமைப்பு மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் நிர்மாணப்பணிகள் மற்றும் வைத்தியசாலையின் பௌதீக வள தேவைகளையும் பூர்த்தி செய்யும் வேலைத் திட்டங்களை வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வடக்கு மாகாணத்திலுள்ள இரண்டாவது மிகப்பெரிய மருத்துவமனை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையாகும். இதன் ஊடாக வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், அநுராதபுரம் ஆகிய பகுதிகள் உள்ளிட்ட மாவட்டங்களில் சுமார் 4 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தமது மருத்துவ சேவைகளைப் பெற்று வருகின்றனர்.

தற்போது இந்த வைத்தியசாலையில் உள்ளக நோயாளர்களுக்காக பல்வேறுபட்ட சிகிச்சைப் பிரிவுகளில் 700 கட்டில் வசதிகள் காணப்படுகின்றன.

தினசரி சுமார் 5 ஆயிரம் பேர் வரையில் வெளிநோயாளர்கள் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் வைத்தியசாலையின் கழிவு நீர் வடிகாலமைப்பில், கழிவு நீர்த் தொட்டிகள், கழிப்பறை குழிகள் என்பன முழுமையாக நிரம்பி அடைபட்ட நிலையிலும் காணப்படுகின்றன.

இவ்வாறு ஏற்படும் கழிவுகளை அகற்றுவதற்கு தினசரி நாளொன்றுக்கு சுமார் ஆறு தடவைகள் திரவக் கொள்கலன் தாங்கிகள் ஊடாக சுமார் 12 கிலோமீற்றர் தொலைவிற்கப்பால் அமைந்துள்ள கழிவகற்றல் குழிக்கு திரவக்கழிவுகள், சேறுகள் என்பன கொண்டு செல்லப்படுகின்றன.

வைத்தியசாலையின் கழிவு நீரானது வடிகால்கள் மற்றும் நிலத்தின் மேற்பரப்பில் வெளியேற்றப்படுவதால் அப்பகுதியிலுள்ள பாசனக்கால்வாய்கள் நில மேற்பரப்பு, நிலத்தடி நீர் அமைப்புகள் என்பவற்றை மாசுபடுத்தி வருகின்றது.

தற்போது காணப்படும் இக்கழிவகற்றல் முறையானது பிரதேச மக்களுக்கு குறிப்பிடத்தக்க சுகாதார அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருகின்றது.

இந்நிலையிலேயே வவுனியா நகரின் சுற்றுச் சூழல் மற்றும் சுகாதார நிலைமைகளைப் பாதிக்கக்கூடிய மிகப்பெரிய அபாயங்களில் ஒன்றைத்தடுக்கும் வகையில் வவுனியா பொது வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கழிவுநீர் அகற்றும் அமைப்பு மற்றும் கழிவு நீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் அமையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




## 1983 ஆம் ஆண்டிற்கு பின்னர்

# குருந்தூர் ஐயப்பன் ஆலயத்தில் பொங்கல்



(முள்ளியவளை)

வரலாற்று பழைமை வாய்ந்த முல்லைத்தீவு குமுழமுனை குருந்தூர் மலையில் அமைந்துள்ள ஆதி சிவன் ஐயப்பன் ஆலயத்தில் 1983 ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதற்தடவையாக நேற்றுமுன்தினம் நண்பகலில் மடை பரவி பானைவைத்து பொங்கலிடப்பட்டது.

இப்பொங்கல் நிகழ்வில் வடக்குமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங் கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், த ண் ணி முறிப்பில் நிரந்தரமாக மீள் குடியேற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து தருமாறும் அமைச்சரிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர். இதற்குப் பதிலளித்த அமைச்சர் உங்களின் கோரிக்கைகளை கூடிய விரைவில் கவனம் செலுத்தி விரைந்து நிறைவேற்றித் தருவேன் என மக்களிடம் உறுதியளித்தார். இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். (2-302)

# கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

வடமாகாணத்தில் இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையால் முதன்முதலாக கிளிநொச்சி மாவட்டத்தில் கணிய அளவையியல், படவரைஞர், வெதுப்பக உற்பத்தி ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட உதவிப்பணிப்பாளர் இரா. அகிலன் அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சிகள் GIZ நிறுவனத்தின் அனுசரணையுடன் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறஇருக்கின்றன.

இக்கற்கை நெறிகளைப் பயில இருக்கும் விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

மேலும் கற்கை நெறிக்கான கட்டணங்கள் முற்றாக இலவசமாகும்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம்04 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக 071 031 8985, 071 131 6824, 077 668 4302, 077 446 9816 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு முழுப்பெயர், முகவரி, கற்க விரும்பும் கற்கைநெறி ஆகியவற்றை குறுந்தகவல் ஊடாக அனுப்பலாம்.

அல்லது இலங்கை தொழிற்பயிற்சி நிலையம் 155 ம் கட்டை, கிளிநொச்சி எனும் முகவரிக்கு தபாலில் அனுப்புவதன் மூலம் பதவிகளை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# வருடாந்த பொங்கல் உற்சவம்

(முக்கொம்பன்)

பூநகரி பிரதேச அருள்மிகு மடத்துப்பிட்டி தான்தோன்றி பிள்ளையார் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

இதில் நேற்று பிற்பகல் 5 மணியளவில் செல்லையாதீவு அம்பாளின் அருள் பாலிப்புடன் பண்டப் பொருட்கள் கொண்டு வரப்பட்டன.

இன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு விசேட ஆராதனையுடன் அபிஷேகம் நேர்த்திக்கடன்கள் நிறைவேற்றி அம்பாளின் பொங்கலுக்கான நெல்குற்றும் வைபவம் இடம்பெறும்.

மாலை 7 மணிக்கு பண்ட மரவடியிலிருந்து பண்டமெடுத்து வரப்பட்டு அம்பாள் பண்டத்திற்கு நூல் சுற்றி அம்பாளின் பொங்கல் நடைபெறும்.


பானையில் சுற்றப்பட்ட நூல் தீயில் எரியாது மறுநாள் காலை நூல் கழற்றப்பட்டு வெட்டப்பட்டு அடியார்களுக்கு வழங்கப்படும். (2-283)

# தண்ணீர்முறிப்பு குள விவசாயிகளின் புனரமைப்பு வேலைகள் குறித்து மகஜர்

தண்ணி முறிப்பு கமக்கார அமைப்பினரால் தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளின் அவலநிலை குறித்தும் புனரமைப்பு வேலைகள் தொடர்பாகவும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜர் முள்ளியவளை தண்ணி முறிப்புப் பகுதிக்கு நேற்று முன்தினம் வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஜங்கரநேசன் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது அம்மகஜர் அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தண்ணிமுறிப்பு கிராமத்தின் கீழ் 12 கிளை வாய்க்கால்களும் 2ஆயிரத்து 400 ஏக்கர் விஸ்தீரணமுள்ள வயல் காணிகள் உள்ளது. இவ்வாய்க்கால்கள் குளம் கட்டிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டத்துடனே உள்ளது. இவ்வாய்க்கால்களில் கொட்டுகள் பாலங்கள் இல்லை. வாய்க்கால் வீதிகள் அழிவடைந்த நிலையில் உள்ளது. இதனால் ஒவ்வொரு வாய்க்கால்களின் கீழுள்ள விவசாயிகள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு உழவு இயந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள் போன்றவற்றை கொண்டு செல்லமுடியாது பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். இதனை கருத்திற்கொண்டு எமது குறைகளை பெரும்போக நெற் செய்கைக்கு முன்னர் நிவர்த்தி செய்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



8 ம் கண்டத்தில் டி சி சந்தியின் கிழக்குப் பக்கமாகவுள்ள கொங்கிறீட் கட்டினை புனரமைப்புச் செய்து உதவுமாறும் இதன்மூலம் 5ம், 6ம், 7ம் ஆகிய கண்டங்களுக்கு இலகுவாக நீர் பாய வழி கிடைக் கும். 8ம் கண்டத்தின் கீழ் 4ம் கண்ட கீழ்ப் பகுதியிலுள்ள 75 ஏக்கர் வயல் நிலத்திற்கு நீர் பாய்வதற்கு ஏதுவாக கட்டப்பட்டுள்ள மண் கட்டினை சீமெந்தினால் கட்டினால் பெருமளவான விவசாயிகள் நன்மையடைவர்.

அத்துடன் தண்ணிமுறிப்புக் குளத்தின் கலிங்கு ஆற்றுக்கான 3ம் கண்டத்தில் ஒரு மறிப்பு அணையும் 7ம் கண்டம் ஆனையுரிச்சான் எனும் பகுதியில் ஒரு மறிப்பு அணையினை யும் கட்டித்தருமாறும் இதன் மூலம் சுமார் 500 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்ட விவசாயிகள் பெரும் நன்மைய டைவர் எனச் சுட்டிக் காட்டுகின்றோம்.

மேலும் குளத்தின் வலதுகரை வாய்க்கால்களை புனரமைப்புச் செய்து காணியற்றிருக்கும் இளம் சமூகத்தினருக்கு வயற்காணிகள் வழங்குவதன் மூலம் இளம் சமூகத்தினர் நெற் செய்கையில் ஈடுபடுவதை ஊக்குவிக்கமுடியும்.

தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ் 12ம் கண்டத்தின் வடக்குப் பக்கமாக வயல் நிலங்கள் உள்ளவர்களுக்கு குடியிருப்புக் காணிகள் வழங்கப்பட்டு அவற்றுக்கான உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டவர்களை இன்றுவரை மீள்குடியேற்றம் செய்யவில்லை.

அக்காணிகளை துப்புரவு செய்து மீள் குடியேற்ற உரிய நடவ டிக்கை களை எடுக்கவேண்டுமெனக்கோருகின்றோம.


அத்துடன் குமுழமுனை தண்ணி முறிப்பில் பெருமளவான மக்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுகின்றபோதும் இன்று வரை கால்நடைகளுக்கான ஒரு மேய்ச்சல் தரைகூட இல்லை.

இதற்கு தாம் பல தடவைகள் பலரை நாடியபோதும் பயன் ஏதும் கிட்டவில்லை . இக்குறைபாட்டினை தாங்கள் நீக்கி உதவ வேண்டுமெனக் கோருகின்றோம்.

மேலும் குருந்தூர் மலையிலுள்ள ஐயன் கோவிலினை புனரமைப்புச் செய்து தாருங்கள். தமது கிராமத்தின் பிரதான வீதி நீண்ட காலமாக கிரவல் வீதியாகவே உள்ளமையால் பொதுமக்கள்,பாடசாலை மாணவர்கள்,ஆசிரியர்கள்,பிரயாணிகள் என அனைவருமே செம்பாடு படிந்த ஆடைகளுடன் வீடு திரும்பவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனை நீக்கும்முகமாக கிரவல் வீதியை தார் வீதியாக மாற்றுவதற்கு ஏற்ற வழி வகைகள் செய்து உதவ வேண்டுமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர், வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது . (2-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வரலாற்று பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி தீர்த்தத்திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற போது. (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)



யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி ஊடாக கற்பிக்கப்பட்ட ஜேர்மன் டொச் மொழி கற்கை நெறியினை பூர்த்தி செய்து சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 10ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. இதில் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் ஆசிரியர் கோணேஸ்வரனுடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.




மூளாய் வேரம்பகுதியில் அமைந்துள்ள சுவாமி ஞானப்பிரகாசர் பாலர் பாடசாலையின் நூல் நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் நூல் நிலையத்தினை திறந்து வைத்துள்ளார்.




யாழ்ப்பாணம் இன்னவீல் கழகத்தின் இரண்டாவது பதவியேற்பு வைபவம் அண்மையில் நடைபெற்றது. திருமதி நீலா தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.



கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 35 பயனாளிகளுக்கு கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவு ஊடாக கண்வில்லைகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ கரவெட்டிப் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவு அதிகாரி எஸ்.வரதபாஸ்கரன் ஆகியோர் இணைந்து பயனாளி ஒருவருக்கு கண்வில்லையை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: கரணவாய் செய்தியாளர்)



## நிகழ்வின் நிழல்கள்

வடக்கு மாகாண சபையின் நிதியொதுக்கீட்டின் கீழ், தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு அண்மையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கியிருந்தனர்.





வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை [illegible] பகுதியில் அண்மையில் நடைபெற்றது. ஜே/394 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பொதுமக்கள் இந்நடமாடும் சேவையில் கலந்து [illegible] போது. (படங்கள்: கரணவாய்ச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாசனைத் தைலம்

ஒரு சமயம் விஜயநகரப் பேரரசு கிருஷ்ணதேவராயருடைய அரசவைக்கு வண்ண வண்ணத் தலைப்பாகை அணிந்த உயரமான இருவர் வந்தனர்.

அவர்கள், 'அரசே! நாங்கள் அஜ்மீரிலிருந்து வருகிறோம். அந்த ஊர் வாசனைத் தைலத்துக்குப் பெயர் போனது. நீங்களும் போட்டுப் பாருங்கள்... மகிழ்வீர்கள்...' என்றனர்.

'எடுங்கள்... பார்க்கலாம்...' என்றார் அரசர்.

கொஞ்சம் முகர்ந்து பார்த்தார். மகிழ்ச்சி அடைந்தார். சபையினரும் புகழ்ந்தனர். அனைவரும் பல பாட்டில்களை வாங்கிக் கொண்டனர். வியாபாரிக்கு மகிழ்ச்சி.

அவர்களில் ஒருவன், 'இதுபோன்ற வாசனைத் தைலம் உலகில் வேறு எங்கும் கிடைக்காது. விரும்பினால் நீங்கள் இந்த விஜய நகரிலேயே கூடத் தைலத்தைத் தயாரித்துக் கொள்ளலாம்,' என்றான்.

அரசர் அவர்களை விருந்தினர் மாளிகையில் தங்க வைத்தார். பத்து நாட்கள் கடந்தன.

பிறகு இருவரும், 'அரசே! அந்த அற்புதமான வாசனைத் தைலம் தயாராகிவிட்டது. நீங்களே வந்து பார்த்து மகிழலாம். முதலில் நீங்கள் மட்டும் வாரு ங்கள். பிறகு அவையினர் வரலாம்' என்றனர்.



'சரி...!' என்ற அரசர் அவர்களுடன் சென்றார்.

விருந்தினர் மாளிகையில் வியாபாரிகள் ஒரு பெரிய சிவப்பு நிறப் பெட்டியைத் திறந்தனர். அதனுள் இன்னொரு அழகிய பெட்டி இருந்தது. அதைத் திறந்ததும் அதனுள் இன்னொரு வெள்ளைப் பெட்டி. அதை எடுத்துத் திறந்த போது உள்ளே ஒரு சிறு கண்ணாடி சீசா...!

அதை எடுத்து அரசரிடம் கொடுத்து, 'அரசே! இதனுள்தான் அந்த விலை உயர்ந்த வாசனைத் தைலம் உள்ளது. கொஞ்சம் முகர்ந்து பாருங்கள்...' என்றனர்.

அரசர் அதனருகில் நெருங்கினார்.

அப்போது ஒரு உரத்த குரல். 'நில்லுங்கள்... என்னிடம் அதை விட உயர்வான தைலம் உள் ளது. முதலில் அதை முகர்ந்து பாருங்கள்...' என்றது. அக்குரலோடு கூடவே விஜய நகர வீரர்கள் 'திமு... திமு...' என்று உள்ளே நுழைந்து, வியாபாரிகள் இரு வரையும் ஓடிவிடாமல் பிடித்துக் கொண்டனர்.

அப்போது தெனாலிராமன் முன்னால் வந்து சொன்னார், 'அரசே! இந்த அதிசய வாசனைத் திரவத்தை முதலில் அதைத் தயாரித்த இரு வியாபாரிகளும் முகர்ந்து பார்க்கட்டும்,' என்று அவ்விருவரின் மூக்கின் அருகில் வைத்தார்.

அதை மூகர்ந்ததும் இருவரும் மயங்கிக் கீழே சாய்ந்தனர். அதைக் கண்டதும் அரசர் திடுக்கிட்டார்.

தெனாலி தொடர்ந்தார், 'அரசே! உங்களை இவ்விருவரும் தனியாக வரச் சொன்னதுமே எனக்கு இவர்கள் மீது சந்தேகம் வந்துவிட்டது.

அப் போது இருவரும் தமக்குள் ஏதோ கண்ஜாடை காட்டிக் கொண்டனர். அதை நான் கவனித்துவிட்டேன். உங்களுக்கு இவர்கள் ஏதோ தீங்கு செய்யப் போகிறார்கள் என்று உணர்ந்து , நானும் பின்னாலேயே வந்தேன். வந்து பார்த்தால் நீங்கள் ஆபத்தில் இருக்கிறீர்கள்...' என்றார்.

அதைக் கேட்டு அரசர் தெனாலிராமனை அன்புடன் வாரி அணைத்துக் கொண்டார். பிறகு அவருக்குப் பரிசும் கொடுத்தார் கிருஷ்ணதேவராயர்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

08.2015
31

- 1422 - ஆறாம் ஹென்றி 9 மாத அகவையில் இங்கிலாந்தின் மன்னன் ஆனான்.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் ஜோர்ஜியாவின் அட்லாண்டா நகர் மீது தாகுதலைத் தொடுத்தனர்.
- 1886 - தென் கரோலினாவில் சார்ல்ஸ்டன் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 100 பேர் கொல்லப்பட்டனர்.
- 1897 - தோமஸ் எடிசன் முதலாவது திரைப்படம் காட்டும் கருவியான கினெட்டஸ்கோப்புக்கான காப்புரிமம் பெற்றார்..
- 1919 - அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது.
- 1920 - போலந்தில் கமரோவ் என்ற இடத்தில் சோவியத் போல்ஷெவிக்குகளுடன் இடம் பெற்ற போரில் போலந்து வெற்றி பெற்றது.
- 1945 - ஆஸ்திரேலியாவில் லிபரல் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1957 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து மலாயா கூட்டமைப்பு விடுதலை பெற்றது.
- 1962 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து திரினிடாட் டொபாகோ விடுதலை பெற்றது.
- 1968 - கார்ஃபீல்ட் சோபர்ஸ் கிரிக்கெட் போட்டியொன்றில் ஒரு ஓவரில் 6 ஆறு ஓட்டங்களை எடுத்து சாதனை புரிந்தார்.
- 1978 - இலங்கையில் ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய புதிய அரசியல் யாப்பு வெளியிடப்பட்டது.
- 1986 - கலிபோர்னியாவில் இரு விமானங்கள் வானில் மோதிக்கொண்டதில் 67 பேர் வானிலும் 15 பேர் தரையிலும் கொல்லப்பட்டனர்.
- 1991 - சோவியத் ஒன்றியத்தில் இருந்து கிர்கிஸ்தான் வெளியேறி தனிநாடாக அறிவித்தது.
- 1994 - ஐரியக் குடியரசு இராணுவம் போர்நிறுத்தத்தை அறிவித்தது.
- 1997 - வேல்ஸ் இளவரசி டயானா பாரிஸில் கார் விபத்தில் கொல்லப்பட்டார்.
- 1998 - வட கொரியா தனது முதலாவது செய்மதியை ஏவியது.
- 1999 - புவெனஸ் ஐரிசில் பயணிகள் விமானம் ஒன்று விமான நிலையத்தில் இருந்து புறப்படுகையில் விபத்துக்குள்ளாகியதில் 65 பேர் கொல்லப்பட்டனர்.
- 2005 - பக்தாத்தில் அல் ஆயிம்மா பாலத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 1,199 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007 - அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியை நடிகர் சரத் குமார் ஆரம்பித்தார்.

### பிறப்புக்கள்

- 1569 - ஜஹாங்கீர், முகலாயப் பேரரசின் மன்னன் (இ. 1627)
- 1870 - மரியா மாண்ட்டிசோரி, இத்தாலியக் கல்வியாளர் (இ. 1952)
- 1905 - எஸ். ஆறுமுகம், ஈழத்துப் பொறியியலாளர், எழுத்தாளர் (இ. 2000)
- 1944 - கிளைவ் லொயிட், மேற்கிந்தியத் தீவுகளின் துடுப்பாளர்
- 1979 - யுவன் சங்கர் ராஜா, தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர்

### இறப்புகள்

- 1814 - ஆர்தர் பிலிப், பிரித்தானிய கடற்படை அட்மிரல், காலனித்துவ நிர்வாகி (பி. 1738)
- 1963 - ஜோர்ஜெஸ் பிராக், பிரெஞ்சு ஓவியர் (பி. 1882)
- 1997 - டயானா, வேல்ஸ் இளவரசி (பி. 1961)
- 2001 - ஜி. கே. மூப்பனார், தமிழக காங்கிரஸ் தலைவர் (பி. 1931)

## டயானா, வேல்ஸ் இளவரசி



வேல்ஸ் இளவரசி டயானா (Diana-Princess of Wales, டயானா 1 ஜூலை 1961, பார்க் ஹவுஸ், சான்றிங்கம், நோர்ஃபோக் எனும் இடத்தில் பிறந்தார்.

இவரின் இயற்பெயர் பிரான்செஸ் ஸ்பென்சர். இவர் வேல்ஸ் இளவரசர் சார்ல்சின் முத்லாவது மனைவி. இவர்களது பிள்ளைகள் இளவரசர்கள் வில்லியம், ஹென்றி (ஹரி) ஆகியோர் பிரித்தானியாவுக்கு முறையே இரண்டாவது, மூன்றாவது முடிக்குரியவர்கள் ஆவர்.

டயானாவுடன் பிறந்தவர் கள் சாரா, ஜேன் மற்றும் சார்லஸ் ஆகியோர். அவர் பிறக்கும் ஒரு வருடத்திற்கு முன் ஜான் எனும் சகோதரன் இறந்து போனான். 9 ஜூன் 1975 இல் தன் தந்தை டயானாவை எர்ல் ஸ்பென்சர்ராக நியமித்து டயானா, லேடி டயானா என்றழைக்கப்பட்டார்.

டயானா மிகுந்த அமைதியானவர், இசையிலும், நடனத்திலும் விருப்பம் உள்ளவர். அவருக்கு இசையின் மீது மிகுந்த ஆர்வம் இருந்தது. சிறந்த பியானோ கலைஞராக ஆனார். இவர் நீச்சல், நீர் மூழ்குதல், பெல்லரினா எனும் கூட்டு நடன குழுவில் நடணம் ஆடும் முக்கிய பெண்ணாகவும் பிரகாசித்தார்.

இளவரசர் சார்ல்சுடன் டயானா திருமண ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நாளில் இருந்து டயானா பொது வாழ்வில் ஒரு முக்கிய புள்ளியாகக் கருதப்பட்டார். ஐக்கிய இராச்சியத்தில் மட்டுமல்லாமல் உலகளாவிய அளவில் இவர்களது திருமண வாழ்வு தொடக்கம் மணமுறிவு ஏற்படும் வரையில் ஊடகத் துறையில் அதிகம் பேசப்பட்டார். பாரிசில் 1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 இல் இவர் சாலை விபத்து ஒன்றில் கொல்லப்பட்டதை அடுத்து உலகெங்கும் இவருக்கு பெரும் அனுதாப அலை பெருகத் தொடங்கியது.

பிப்ரவரி ஆறாம் தேதி 1981 இல் இளவரசர் சார்லஸ் தம் காதலை கூற டயானாவும் ஏற்றுக்கொண்டார். பிப்ரவரி இருபத்தி நான்காம் தேதி வேல்ஸ் இளவரசர் சார்லஸ், டயானா இருவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது, டயானா 30,000 பவுண்டு மதிப்புள்ள மோதிரத்தை தேர்வு செய்தார். அதே மோதிரம் பின்னர் கேத் மிடில்டன்னுக்கு 2010 இல் நிச்சயதார்த்த மோதிரம் ஆனது.

தன் நிச்சயதார்த்தை தொடர்ந்து டயானா தன் வேலைகளை விடுத்து, க்லேரன்ஸ் இல்லத்தில் சிறிது காலம் வசித்து வந்தார். அதன் பின்னர் தன் திருமணம் வரை பக்கிங்க்ஹாம் இல்லத்தில் வசித்து வந்தார். 1981, ஜூலை, இருபத்தி ஒன்பதாம் தேதி டயானாவுக்கும், வேல்ஸ் இளவரசர் சார்லஸ்க்கும் புனித பால் தேவலயத்தில் திருமணம் நடந்தது. இதன் மூலம் இருபது வயது டயானா வேல்ஸ் இளவரசி ஆனார். இத்திருமணத்தை 750 மில்லியன் மக்கள் தொலைக்காட்சியின் ஊடாகவும், அறுபது லட்சம் மக்கள் நேரடியாகவும் கண்டு கழித்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிங்களமக்களின் கருத்தியல் மாற்றம் தமிழருக்கு விமோசனமளிக்கலாம்..!



இலங்கையின் பாராளுமன்றத்துக்கான தேர்தல் இடம்பெற்று இரண்டு வாரங்கள் கழிந்துவிட்ட நிலையிலும், அரசமைக்கப்போகும் கட்சியின் அல்லது தேசிய அரசின் மந்திரிசபை இன்னமும் பதவியேற்காத குழப்ப நிலை தொடர்ந்த வண்ணமே இருக்கிறது.

"மழை விட்டும் தூவாணம் விடாததுபோல்" கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின் இருந்த நிலைபோன்ற ஒரு அரசியல் நிலையே இப்போதும் காணப்படுகிறது.

ஒரு வித்தியாசம் என்னவென்றால், ஜனவரியில் ஜனாதிபதியாக மைத்திரி தெரிவானதும் பாராளுமன்றில் போதிய அங்கத்துவம் இல்லாமலே ரணில் பிரதமராக்கப்பட்டார்.

ஆனால், இம்முறை தேர்தலில் அரசமைக்க 113 என்ற பெரும்பான்மை அங்கத்துவத்தை பெறமுடியாதபோதும், எதிர்த்தரப்பை விட கூடுதலான அங்கத்துவத்தை ஐ.தே. முன்னணி பெற்றது என்ற வகையில் ரணில் பிரதமராக்கப்பட்டுள்ளார்.

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதன் மூலம், தனது சிறுபான்மை அரசுக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை தவிர்ப்பதற்கு ரணில் முயல்வதாகத் தெரிகிறது.

அதுபோல், தனது கட்சியை சேர்ந்தவர்களுக்கு பதவிகளை வளங்குவதன்மூலம் அவர்களையும் அரசியல் பலமுள்ளவர்களாக தன்னுடன் வைத்திருக்க வேண்டும் என்ற சிந்தனை ஜனாதிபதி மைத்திரியிடமும் உள்ளது.

அவர் தனக்கிருக்கும் வாய்ப்புகள் மூலம் தனது தலைமையிலான அரசையும், தனது தலைமையிலான கட்சியையும் ஒரே திசையில் பயணிக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஆனால், மகிந்தவின் தூண்டுதலால், அவருக்கு துணை நிற்கும் ஆதரவாளர்கள் மூலம் இப்போதும் அரசுக்கு நெருக்கடிகள் கொடுக்கப்படுவதாகவே தெரிகிறது.

இரண்டாவது முறையும் தோல்வியை தழுவியுள்ள மகிந்த, இம்முறை தேர்தலின் பின் உருவாகியுள்ள புதிய அரசினால் தனக்கு எதிராக வேகம்பெறப்போகும் குற்றவிசாரணைகளிலிருந்து தப்பிவிடவேண்டும் என்ற நோக்குடனேயே தனக்கு ஆதரவான அங்கத்துவர் மூலம் அரசுக்கு நெருக்கடிகளை கொடுத்து வருகிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரி இருந்தபோதும், மகிந்தவுக்கு சார்பான அங்கத்தவர்களை இப்போதுவரை ஜனாதிபதியால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதாலேயே தேசிய அரசு அமைப்பதிலும் மந்திரிசபை அமைப்பதிலும் காலதாமதம் ஏற்படும் நிலை காணப்படுகிறது.

தேசியப் பட்டியல் ஆசனங்களுக்கு அங்கத்தவர்களை நியமிப்பதிலேயே கட்சிக்குள் இழுபறி நிலை ஆரம்பமானது. ஆனால் கட்சித் தலைவர் என்ற ரீதியல் மைத்திரியால் தன் எண்ணப்படி பட்டியலை பூர்த்தி செய்ய முடிந்தது.

ஆனால் தேசிய அரசு, மற்றும் அதற்கான அமைச்சுப் பதவி என்பவற்றில் ஏற்படும் நெருக்கடிகளை அவரால் இலகுவில் தீர்த்துவைக்க முடியாமல் போயுள்ளது. இதுவே கடந்த ஆறு மாதங்களாக இருந்து வந்த நிலை.

தேசிய அரசொன்றை அமைப்பதில் இரண்டு பிரதான கட்சிகளுக்கு் இடையில் மட்டுமே பேச்சுவார்த்தைகளும், பேரம் பேசல்களும் இடம்பெற்று வருகின்றன.

ஆனால், தேசிய அரசென்றால் சிறு கட்சிகள், சிறுபான்மைக் கட்சிகள் என்பன உள்ளடக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையே இல்லாததுபோல் அரச தரப்பும், எதிர் தரப்பும் தமக்கிடையே மட்டும் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றன.

16 ஆசனங்களைப் பெற்று மூன்றாவது நிலையிலுள்ள தமிழ் மக்களின் தலைமையாக கருதப்படும் தமிழ் கூட்டமைப்பைக்கூட கண்டுகொள்ளாதது போலவே அனைத்து விடயங்களும் இடம்பெற்று வருகின்றன.

"அமைச்சுப் பதவிகளைப் பெற்று அரசுடன் இணைந்து செயல்பட போவதில்லை, ஆனால் வெளியிலிருந்து ஆதரவளிப்போம்" என்று தமிழ் கூட்டமைப்பு தெரிவித்திருந்ததை சாட்டாக வைத்து, அவர்களை தற்போதைக்கு விலத்தி வைத்திருப்பதே நல்லது என்ற முடிவுக்கு ரணில் வந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

எதிர்க்கட்சித் தலைமைப் பதவி தமிழர் தரப்பிடம் போவதை தடுப்பதும் அவரது பின்நகர்வுக்கு காரணமாக இருக்கலாம்.

பாரிய இடைவெளி இல்லாத ரணிலின் வெற்றி, மகிந்தவை குறைத்து மதிப்பிட முடியாது என்ற ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளது. இரண்டு பக்கமும் இனவாதத்தின் வாக்குகளே ஆதிக்கம் செலுத்தியுள்ளதை தேர்தல் முடிவுகள் காட்டியுள்ளன.

இனவாதக் கட்சிகளும் அமைப்புகளும் பிரிந்து நின்று இரண்டு தரப்புக்கும் ஆதரவளித்தன என்பது இரண்டு கட்சியிலும் இணைந்து போட்டியிட்ட இனவாதக் கட்சிகளின் எண்ணிக்கையை பார்த்தாலே புரிந்துவிடும்.

அதனால், இப்போதே தமிழர் தரப்பை இணைத்துக் கொண்டால், அரசமைப்பதற்கான ஆரம்பமே சிங்கள இனவாதிகளால் ஆட்டம் காணச் செய்யப்படும் நிலை உருவாகும் என்று கருதியே ரணில் தமிழ்த்தரப்பைத் தவிர்த்து, சிங்கள மக்களை மட்டுமே மையப்படுத்தி தனது அரசியல் சதுரங்கத்தை அரங்கேற்ற முயல்கிறார்.

தமிழரின் பிரச்சினை தொடர்பாக உறுதியான எந்தக் கருத்தையும் இப்போது தெரிவிப்பதற்கு ரணில் தயாராக இல்லை என்பது தெரிகிறது. போர்க்குற்றம் சம்பந்தமாக உள்ளக விசாரணை என்ற போர்வைக்குள் எல்லாவற்றையும் மூடிமறைக்கும் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

அதற்கு அமெரிக்காவின் ஆசீர்வாதமும் கிடைத்துள்ளது என்பதை அமெரிக்காவின் தெற்காசிய நாடுகளுக்கான இராஜாங்க உதவி செயலாளர் நிஷா பிஸ்வாலின் இலங்கை விஜயம் வெளிப்படுத்தியுள்ளது.

**இலங்கையின் போர்க்குற்றம், மனிதஉரிமை மீறல் என்பன நெருப்பாக இல்லாமல் புகையாக மட்டுமே இருந்துவிடும் நிலை தோன்றியுள்ளதாகத் தெரிகிறது.**

வாய்ப்புகள் யாவும் சிங்கள அரசுக்கு சாதகமாகவே உள்ளது. தமிழ் மக்கள் பட்ட துன்ப துயரங்கள் யாவும் எங்கோ கேட்ட குரலாக மட்டுமே இருந்துவிடுமோ? என்ற ஏக்கம்தான் ஏற்படுகிறது.

அமெரிக்கா மனித உரிமைப் பேரவையில் தமிழர்களின் காலை வாரிவிடப்போகிறது என்பது மட்டும் புரிகிறது. அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் தாளம்போடும் நிலையில் உள்ள தமிழர் கூட்டமைப்பு அமெரிக்காவின் முடிவையிட்டு என்ன செய்யப்போகிறது என்பதுதான் தமிழர்களின் கேள்வியாக உள்ளது.

இலங்கையின் உள்ளக விசாரணைக்கு இணங்கவேண்டிய நிலைக்கு தமிழர் கூட்டமைப்பு தள்ளப்பட்டுள்ளது என்றே கருதவேண்டியுள்ளது.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை, குறிப்பிடத் தக்களவானவர்கள் ஓரளவுக்கேனும் நாட்டின் முன்னேற்றத்தையும் ஒருமைப்பாட்டையும் சிந்திக்க தலைப்பட்டுள்ளார்கள் என்பதை தேர்தல் முடிவுகள் சில காட்டி நிற்கின்றன.

போர் வெற்றியை முன்னிறுத்தி பத்து வருடங்கள் இனவாத அரசியலை மேற்கொண்ட மகிந்தாவை அரசகட்டில் ஏறவிடாமல் பார்த்துக் கொண்டுள்ளார்களசிங்கள மக்களின் ஒரு பகுதியினர்.

போர் வெற்றியின் நாயகன் என்று தன்னை சொல்லிக் கொண்ட சரத்பொன்சோகா, இனவாதப் பிக்கு ஞானசார தேரர், மற்றும் தேர்தலில் போட்டியிட்ட நூற்று ஐம்பது வரையான பிக்குகளை சிங்கள மக்கள் தோல்வியடைய செய்துள்ளார்கள்.

சிங்கள மக்களில் குறிப்பிடத்தக்கவர்களிடம் ஏற்பட்டுள்ள மாற்றமாகவே இதை கருதலாம். இனவாதிகளும், சிங்கள அரசியல்வாதிகளும் இந்த மாற்றத்தை தொடர்ந்து வரும் தேர்தல்களில் அனுமதிப்பார்கள் என்று சொல்வதற்கில்லை.

காரணம் இனவாத அரசியல்தான் சிங்கள அரசியல்வாதிகளின் தொலைதூர அரசியலை தீர்மானிக்கும் சக்தியாக தொடர்ந்தும் இருந்துவருகிறது.

ஆனாலும், சிங்கள மக்களிடம் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம், சிங்கள இனவாத அரசியலவாதிகளையும் கடந்து, படிப்படியாக என்றாலும் ஏனைய சிங்கள மக்களிடமும் உருவாகும் பட்சத்திலேயே நாட்டில் சமத்துவமும், தமிழருக்கான நிரந்தரத் தீர்வும் சாத்தியம் என்றே கருத இடமுண்டு.

*-க.ரவீந்திரநாதன*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக விசாரணை குறித்து அறிய தென்னாபிரிக்கா செல்கிறார் மங்கள

(கொழும்பு)

**உள்ளக விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை அமைப்பது குறித்து அறிந்து கொள்ளும் நோக்கில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.**



போர்க்குற்றச் செயல் குற்றச்சாட்டு தொடர்பிலான விசாரணை நடத்தும் நோக்கில் உள்ளகப் விசாரணைப் பொறிமுறைமை ஒன்று உருவாக்கப்பட உள்ளது.

எவ்வாறு இந்த விசாரணைப் பொறிமுறைமையை உருவாக்குவது என்பது குறித்து ஆராயும் நோக்கில் விரைவில் அமைச்சர் மங்கள தென்னாபிரிக்கா விஜயம் செய்ய உள்ளார்.


ஏற்கனவே போர்க் குற்றச் செயல் குறித்த உள்ளக விசாரணைப் பொறிமுறைமை தொடர்பிலான விபரங்கள் உள்ளடக்கிய ஆரம்பகட்ட அறிக்கை ஒன்றை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையிடம் ஒப்படைத்துள்ளது.

போர்க்குற்ற விசாரணைகளுக்கு சமாந்தரமாக தேசிய நல்லிணக்க திட்டமொன்றும் உருவாக்கப்படவுள்ளது.

மனிதவுரிமைப் பேரவையின் அறிக்கை, மெக்ஸ்வல் பரணகம அறிக்கை, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை மற்றும் டெஸ்மன்ட் டி சில்வா தலைமையிலான நிபுணர் குழுவின் அறிக்கை ஆகியனவற்றை அடிப்படையாகக்கொண்டு நல்லிணக்கம் மற்றும் குற்றச் செயல்களுக்கு பொறுப்பு கூறுதல் தொடர்பிலான பொறிமுறைமையை அரசாங்கம் உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அர சாங்கத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (இ-7)

# நாட்டு மக்களின் நலனுக்காக எங்களுக்கு அமைச்சுப் பதவி

## துமிந்த திஸாநாயக்க விளக்கம்



நாட்டு மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தின் அமை ச்சுப் பதவிகள் தொடர்பான கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும் போதே சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார். கொழும்பு நியூஸ்டுடே சிங்கள இணையத் தளம் இந்தச் செய் தியை பிரசுரித்துள்ளது. தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள துமிந்த திஸாநாயக்க,

ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது சுதந்திரக் கட்சிக்கோ தனியாக அரசமைக்கும் ஆணையை பொதுமக்கள் வழங்கவில்லை. தேர்தல் முடிவுகளை கவனித்தால் இது தெளிவாக தெரிய வரும்.

ஜனாதிபதித் தேர்தலின் போது பொது வேட்பாளராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த நல்லாட்சிக் கொள்கை நாட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனை முன்கொண்டு செல்லும் வகையிலேயே நாடாளுமன்றத் தேர்தலின்போது பொதுமக்கள் வாக்களித்துள்ளனர்.

அதனை நாங்கள் கருத்திற்கொண்டு, நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் நலங்க ளைப் பாதுகாக்கும் நோக்கிலேயே தேசிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்ளவுள்ளோம் என்றும் துமிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்தவைத் தூற்றும் எஸ்.பி. திஸாநாயக்க

## நன்றிகெட்ட அரசியல் சந்தர்ப்பவாதியாம்



மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினரும் சேர்ந்தே தன்னைத் தோற்கடித்ததாக முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் தோல்வி குறித்த கேள்விக்குப் பதிலளித்துள்ள அவர், தான்திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.


இதுவரை நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் நான் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளேன். ஆனால் இந்தத் தடவை தேர்தல் ஆரம்பித்தவுடன் மகிந்த ராஜபக்ஷ, பசில் மற்றும் கோத்தபாய ஆகியோர் எங்களைத் தோற்கடிப்பதில் குறி வைத்து இயங்கினாரகள்.

எங்கள் பிரதேசத்தின் இரண்டாம் கட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் பொதுமக்களிடம் நாங்கள் வெற்றி பெற்றால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக வதந்தியைப் பரப்பினார்கள்.

அதனை நம்பி மக்கள் எங்களுக்கு வாக்களிக்கத் தயங்கியதன் காரணமாகவே நாங்கள் தோற்கடிக்கப்பட்டோம் என்று எஸ்.பி:திஸாநாயக்க தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்துள்ள எஸ்.பி. திஸாநாயக்க,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உடைந்து விடக் கூடாது என்ற நோக்கத்தில் முன்னாள் ஜனாதிபதிக்கும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதில் நாங்கள் முன்னின்றோம். ஆனால் அவர் எங்களைத் தோற்கடிப்பதில் குறியாக இருந்தார்.

இதுதான் நன்றிகெட்ட அரசியல் சந்தர்ப்பவாதம் என்றும் அவர் விமர்சித்துள்ளார். (இ-7)



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நேற்று முன்தினம் மாலை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டி ஸ்ரீ தலதா பெரஹரவை பார்வையிட்டனர். ஜனாதிபதி குடும்ப உறுப்பினர்களும் இச்சந்தர்ப்பத்தில் பங்கு பற்றியிருந்தனர்.

# புலம்பெயர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து தனிநாட்டுக்கான போராட்டத்தை ஆரம்பிப்பு

## சிங்கள ஊடகம் செய்தி

விடுதலைப் புலிகள் அமைப்பின் புலம் பெயர் அமைப்புகள் ஒன்றிணைந்து தனி நாட்டுக்கான போராட்டத்தை புதிய தேசம் எனும் தொனிப்பொருளில் முன்கொண்டு செல்வதாக சிங்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச ஊடகங்களுக்கு இலங்கைச் செய்திகளை வழங்கும் தனியார் செய்திச் சேவை நிறுவனமான கொழும்பு நியூஸ் டுடே செய்திச் சேவையின் இணையத்தளத்தில் மேற்கண்ட செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

குறித்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப் புலிகள் அமைப்பின் கிளை அமைப்புகள் ஒன்றிணைந்து தனிநாட்டுக்கான செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளன.

அதன் ஒரு கட்டமாக ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் புதிய தேசம் எனும் தொனிப் பொருளில் கண்காட்சிகள் மற்றும் கலாசார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் அழிவு மற்றும் ஈழத்தில் நடைபெற்ற இனப்படுகொலை போன்ற விடயங்களும் இந்தக் கண்காட்சியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் விடுதலைப் புலிகளை மாவீரர்களாக சித்தரிப்பதுடன், தமிழின விடுதலைப்போராட்டத்தை நியாயப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் ஈழம் வரைபடம், தேசியக் கொடி, யுத்தம் தொடர்பான புகைப்படங்கள் என்பனவும் கண்காட்சிகளின் போது விற்பனை செய்யப்படுவதாகவும் குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடியில் ஈடுபடும் பௌத்த பிக்குகளுக்கு எதிராக தண்டனை விதிக்க புதிய சட்டமூலம்

(கொழும்பு)

**இனவாத செயற்பாடுகளைத் தூண்டும் மற்றும் அடாவடித்தனமான செயல்களில் ஈடுபடும் பௌத்த மதகுருமாருக்கு எதிராக கடுமையான தண்டனை விதிக்கும் வகையில் சட்டமூலம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.**

பௌத்த மதகுருமார் தங்களுக்கு அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை கவசமாக பயன்படுத்திக் கொண்டு ஏமாற்று மோசடிகள், இனவாதச் செயற்பாடுகள், அடாவடிகள் போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக பௌத்த மதத்தின் விழுமியங்கள் பாதிக்கப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் மதகுருமாருக்கும் இதுகாலவரையும் சாதாரண சட்டங்களின் கீழ் தண்டனை வழங்கப்பட்டு வந்தது.

எனினும் இனிவரும் காலங்களில் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் பௌத்த மதகுருமாரைத் தண்டிக்க விசேட சட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. தற்போதைக்கு அதற்கான வரைபு தயாரிக்கப்பட்டு, சட்டமா அதிபரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## முன்னாள் பிரதியமைச்சருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை

வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு சொந்[illegible]ான சுமார் ஒரு கோடியே [illegible] இலட்சம் ரூபா பணத்தை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் முன்னாள் மீன்பிடித்துறை பிரதியமைச்சர் சரத் குணரத்னவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள் [illegible].

அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் பரிந்துரையை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்ப ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, நீர்கொழும்பு மாநகர சபை மைதானத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்திற்காக மேடை அமைக்க 99 இலட்சத்திற்கும் மேல் செலவிட்டமை, தனது அரசியல் தேவைக்காக ரி சேர்டுகள் மற்றும் தொப்பிகளை தயாரிக்க சுமார் 13 இலட்சம் ரூபாவை செலவு செய்தமை, நாட்காட்டிகளை அச்சிட 10 இலட்சம் ரூபாவுக்கும் மேல் செலவிட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சரத் குணரத்ன மீது சுமத்தப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக ஜனாதிபதி ஆணைக்குழு குணரத்னவை அழைத்து விசாரணை நடத்தியது. இதனடிப்படையில், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பரிந்துரைக்க தீர்மானித்துள்ளது. (இ-7)

## மக்களின் துரதிர்ஷ்டமே எனது தோல்வி

பொதுமக்களின் துரதிர்ஷ்டம் காரணமாகவே கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தான் தோல்வியுற நேர்ந்ததாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உபேக்ஷா சுவர்ணமாலி (பபா) தெரிவித்துள்ளார்.

வாரஇறுதி பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள நேர்காணலில் இது குறித்து அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்துள்ள உபேக்ஷா, பொது "மக்களின் முன்னேற்றம் குறித்து எனக்குள் ஏராளம் திட்டங்கள் இருந்தன. ஆனால் அவற்றை நிறைவேற்றிக் கொள்ள முன் நாடாளுமன்றத் தேர்தலில் நான் தோல்வியுற்றுள்ளேன். அந்த வகையில் எனது தோல்வி எனக்குத் தனிப்பட்ட பாதிப்பு என்பதை விட பொதுமக்களின் துரதிர்ஷ்டமாகவே நான் கருதுகின்றேன். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 120 | 160 |
| தக்காளி | 100 | 100 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 | 60 |
| கோவா | 80 | 100 | 80 | 70 |
| கரட் | 140 | 100 | 160 | 120 |
| பூசணி | 30 | 40 | 60 | 40 |
| புடோல் | 50 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 100 | 100 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 120 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 120 | 120 |
| பாகற்காய் | 120 | 140 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 90 | 100 | 90 | 120 |
| பயற்றங்காய் | 120 | 100 | 80 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 80 |
| பீற்றூட் | 40 | 30 | 60 | 40 |
| கறிமிளகாய் | 150 | 150 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 160 | 100 | 100 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 40 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-70 | 40-45 | 50 |
| இராசவள்ளி | 150 | 250 | — | 220 |
| வெங்காயப்பூ | 200 | 100 | 200 | 180 |
| முள்ளங்கி | 40 | 40 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

## facebook (f) :.பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 473

மௌலி ஏகாம்பரநாதன்




ஹாரிஸ் டானி





அன் விதுஷ்


இன்னும் சில நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம்.



சுஜி செல்வா




கஜானன் கஜா




சிவ தர்ஷன்




நீங்கள் பார்த்த :.பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தேர்தல்- இனி என்ன?

இலங்கையில் இந்த ஆண்டு இரண்டு தேர்தல்கள் முடிவடைந்து மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும், ரணில் விக்கிரமசிங்க நான்காவது முறையாகப் பிரதமராகவும் பொறுப்பேற்றிருக்கிறார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணி 93 இடங்களில் வெற்றி பெற்றது. அவர் போட்டியிட்ட கொழும்பு மாவட்டத்தில் இதுவரை யாரும் பெறாத அளவுக்கு 5,00, 566 (preference vote) விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார்.

இதற்கு முன்பு, சந்திரிகா குமாரதுங்க 1994-இல் அதிக வாக்குகள் பெற்று சாதனை படைத்திருந்தார். ரணில் பிரதமராவதற்கு உரிய பலம் இல்லாததால் தற்போது எதிரும் புதிருமாக இருந்த சிங்களர்கள் ஒன்றுசேர்ந்து தேசிய அரசை அமைக்க உளளனர். சிறிசேனவின் வேண்டுகோளின் படி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து இந்த தேசிய அரசு அமையும்.

இந்த தேசிய அரசு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையில் சிறப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவில் முன்னாள் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, சரத் அமுனுகம, மகிந்த சமரசிங்க, எஸ்.பி. திசநாயக, சுசில் பிரேமஜயந்த ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இந்த அரசில் இரு அணிகளைச் சேர்ந்த 70 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்க இருக்கின்றனர். இந்த தேசிய அமைச்சரவை 2017 ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி வரை இயங்கும் என்று இரு கூட்டணியினரும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர்.

இலங்கை நாடாளுமன்றத்தில் மொத்தம் உள்ள 225 உறுப்பினர்களில் 196 பேர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மீதம் 29 பேர் தேசியப் பட்டியல் வரிசையில் தேர்வு செய்யப்படுவார்கள். இந்த தேசியப் பட்டியல் உறுப்பினருக்கான இடங்கள் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் பிரித்து வழங்கப்படும்.

தமிழர்களை வஞ்சிக்க, வைரிகளாக இருந்த ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், இலங்கை சுதந்திரக் கட்சியும் ஒன்றுகூடி அரசு அமைத்தால் என்னவாகும் என்பதுதான் நமது கேள்வி.

மைத்திரி, ரணில், சந்திரிகா, மகிந்த ஆதரவாளர்கள் இலங்கை அரசியல் சதுரங்கத்தில் வெவ்வேறு திசையில் பயணித்தவர்கள். இன்றைக்கு அனைவரும் ஒன்றுகூடிவிட்டனர். திரும்பவும் சிங்களப் பேரினவாதம் நர்த்தனமாட இருக்கிறது.

தமிழர்கள், முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்தபின்பு தமிழர்களுக்கு அளித்த உறுதியின்படி மைத்திரி எதையும் செய்யவில்லை. அதேபோலத்தான், கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழர் வாக்குகளைப் பெற்றுவிட்டு தமிழர்களுக்கு நன்றி பாராட்டவில்லை.

சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பூர்வீக நிலம், ஒன்றுபட்ட இலங்கையில் தமிழர்களின் உரிமைகளையும், தனித்தன்மையையும் காக்கப் பாடுபடுவோம்என்ற வாக்குறுதியோடு தேர்தல் களத்தில் இறங்கியது.

நடந்து முடிந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2010 தேர்தலில் பெற்றதைப் போன்று 14 இடங்களில் வென்று, தேசியப்பட்டியல் வரிசையிலும் 2 இடங்களை நாடாளுமன்றத்தில் பெற்றுள்ளது.

ஒருநாடு இரு தேசம், சுயநிர்ணய உரிமை என்ற கொள்கை முழக்கத்தோடு போட்டியிட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஓர் இடத்தில்கூட வெற்றி பெற முடியவில்லை. உதயன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் வித்தியாதரன் தலைமையில் போட்டியிட்ட முன்னாள் போராளிகளும் தோல்வியுற்றனர்.

இவர்களில் ஒருசிலர் வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்குச் சென்றிருக்க வேண்டும். டக்ளஸ் தேவானந்தா திரும்பவும் வெற்றி பெற்றுள்ளார். இது ஒருபுறமிருக்க, மலையகத்தில் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக ஆறுமுகன் தொண்டைமான், முத்துசிவலிங்கம் போன்றோர் வெற்றி பெற்றுள்ளனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் படுதோல்வியடைந்த மகிந்தவுக்கு இந்த நாடாளுமன்றத் தேர்தல் அரசியல் மீள்பிரவேசத்துக்கான பொது வாக்கெடுப்பாகவே உலக நாடுகளால் கருதப்பட்டது.

ஆனால், மகிந்த திரும்பவும் தோல்வியைத் தழுவியது ஓர் ஆறுதலான விடயம். அவரோடு இருந்தவர்கள் இன்றைக்கு அமைச்சரவையில் சேர்ந்து திரும்பவும் சிங்களர்கள் இனவாத அரசாக தேசிய அரசு அமைந்தால் தமிழர்களுடைய அபிலாஷைகளும், கோரிக்கைகளும் கானல்நீராகின்ற கதைதான்.

மகிந்த எதிர்க்கட்சித் தலைவராக அமர முயற்சிக்கிறார். பழைய குருடி கதவைத் திறடி என்ற நிலையில் சிங்களர்கள் திரும்பவும் தமிழர்களை அழிக்கக் கூடிய நிலைக்குத்தான் இந்த தேசிய அரசு செயலில் இறங்கும்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக, தமிழர்கள் மீது ஏவப்பட்ட இன அழிப்பு, குறிப்பாக 2009 போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச சுதந்திரமான, நம்பகமான வசாரணை வேண்டும் என 2010 இலிருந்து குரல்கள் எழுப்பப்பட்டும் அவையாவும் செவிடன் காதில் சங்கு ஊதிய கதையாகவே உள்ளது.

மிருக பலத்தோடு சிங்களர்கள் அமைக்கும் தேசிய அரசு தேர்தல் சீர்திருத்தம் குறித்தான 20-ஆவது சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தால், தமிழர்களுக்கு தற்போது கிடைத்த 16 இடங்கள்கூட எதிர்காலத்தில் கிடைக்க இயலாத நிலைமை ஏற்படும்.

1977 ஜுலை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மை பலத்துடன் இலங்கையில் ஆட்சியைப் பிடித்தது. 1972 அரசமைப்புச் சட்டத்தில் இரண்டாவது திருத்தம், 1977 ஒக்டோபர் 4-இல் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றி அனைத்து அதிகாரங்களையும் தன்னகத்தே (ஜனாதிபதி ஆட்சி) ஜெயவர்த்தன எடுத்துக் கொண்டார். இதனால், 1978பெப்ரவரி 4-இல் ஜெயவர்த்தன சர்வ வல்லமை படைத்த ஜனாதிபதியானார்.

அதன்பின்பு, நாடாளுமன்றத்துக்கான காலம் ஆறு ஆண்டுகளாக மாற்றப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல்களில் பல உறுப்பினர்கள் கொண்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையும் செயற்பாட்டுக்கு வந்தது.

(தொடரும்...)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 266**

## அஹங்காரத்தை விடுதல்

...நீங்கள் யார் என்று கேட்பதாக வைத்துக்கொண்டால், நீங்கள் என்ன சொல்வீர்கள்?

நான் இன்னாரின் தந்தை அல்லது நான் இன்னாரின் சகோதரி அல்லது நான் ஒரு மருத்துவர் என்று இவ்வாறு எதாவது சொல்வீர்கள்.

ஆனால் இவைகளெல்லாம் என்ன? இவையெல்லாம் உங்கள் உறவுமுறைகளும், தொழிலும்தான்.

நீங்கள் உங்கள் தந்தைக்கு மகள், உங்கள் கணவருக்கு மனைவி. உங்கள் குழந்தைகளுக்குத் தாய் இவ்வாறு....

நீங்கள் உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு இவைகளாக இருக்கிறீர்கள்.

அப்பொழுது உங்களுக்கே நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள்?

நீங்கள் தற்சமயம் உறவு முறைகளிலும் தொழிலும்தான் இருக்கிறீர்கள்.

உங்கள் அஹங்காரம் இதிலிருந்தே கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

உங்கள் அடையாளமும் இதன் வழியாகவே ஏற்படுகிறது. அதனால் தான் உங்கள் உங்கள் அடையாளத்தை இழந்துவிடும் அபாயம் எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறது.

அது மனிதனால் செய்யப்பட்ட வலுவற்ற ஒரு விடயமாதலால் எப்பொழுது வேண்டுமானாலும் உடைந்துவிடக்கூடியதுதான்.

அதனால்தான் நீங்கள் அதனைப் பராமரிக்க மிகவும் கடினமாக உழைக்க வேண்டியிருக்கிறது.



உண்மையிலேயே உங்கள் உள்ளார்ந்த தன்மை தனிமைதான் உங்கள் தாயின் கருவறையில் தனிமையில் தான் இருந்தீர்கள்.

உண்மையில் நீங்களே உங்களுக்குப் போதும், இதுவே உங்கள் தனித் தன்மை.

காலப்போக்கில் [illegible] தனித்தன்மை இயல்பானது; புறத் தன்மை சமூகத்தால் ஆனது.

அது எவ்வாறு இருக்கிறதென்றால்... ஒரு பார்சல் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்கிறது; ஒவ்வொரு இடத்திலும் அதன்மீது வெவ்வேறு விவரங்கள் முத்திரை குத்தப்படுகிறது.

உண்மையிலேயே அந்தப் பார்சலானது இந்த முத்திரைகள் அல்ல.

அதன் உள்ளிருக்கும் வஸ்துதான், இல்லையா? அதேபோல் தன்மை உங்கள் புறத்தன்மையால் எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது.

நீங்களும் மக்கள் உங்கள் மீது குத்திய முத்திரைகளை அல்ல.

உங்களுக்குள் இருக்கும் வஸ்துதான்.

எப்படியோ காலப்போக்கில் உங்கள் அஹங்காரம் இந்த முத்திரைகளின் மீது கட்டமைக்கப்பட்டு அதற்கு மேலும் மேலும் உணவளிக்க மக்கள் தேவைப்படுகிறார்கள்.

அதனால்தான் உங்களால் முழுவதுமாக தனிமையில் உங்களுடனேயே இருக்க முடியவில்லை என்பதைக் கவனியுங்கள்.

நீங்கள் உங்களுடன் மட்டுமே இருக்கும்பொழுது உங்கள் அஹங்காரத்திற்கு உணவளிக்கும், மற்றவர்களின் குரல்களைக் கேட்க முடிவதில்லை. உங்கள் அஹங்காரம் உணவளிக் கப்படாததால் உணர்கிறீர்கள்.

நீங்கள் என்ன செய்கிறீர்கள்? குறைந்தபட்சம் தொலைக்காட்சியையாவது போட்டுப் பார்க்க ஆரம்பிக்கிறீர்கள்!

ஒரு சின்னக்கதை...

ஒரு பாரம்பரியம் மிக்க அரசியல் கட்சியைச் சேர்ந்த ஒருவன் இறந்து கொண்டிருந்தான். அவன் சாகும் தருவாயில் எதிர்க்கட்சிக்கு மாறிவிட்டது அவனுடைய நண்பர்களுக்குத் தெரியவந்தது. (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ராஜதந்திரிகளிடம் மங்கள விடுத்த கோரிக்கை



இலங்கை தொடர்பில் மனித உரிமை விடயங்களை மாத்திரம் கருத்தில் கொள்ளாது, ஏனைய விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செயற்படும் சர்வதேச ராஜதந்திரிகளுடனான சந்திப்பின் போது, சமரவீர இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். இந்த சந்திப்பு வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சர்வதேச சமூகம் தற்போது, மனித உரிமைகளை வைத்தே இலங்கையுடனான உறவுகளில் முடிவெடுக்கின்ற நிலையில் இருக்கிறது.

மைத்திரிபால சிறிசேன- ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் மனித உரிமைகள் பற்றிய கரிசனைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வவகாரங்களுக்குத் தீர்வு காணும், அரசியல் கலாசாரத்தை மாற்றும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் என்று உறுதியாக கூறமுடியும்.


உள்நாட்டுப் பொறிமுறையை உருவாக்குதல், அமைதியைக் கட்டியெழுப்புதல், மீளக்குடியமர்த்துதலுக்கான நிபுணத்துவ உதவிகளை சர்வதேச சமூகம் வழங்க வேண்டும் என மங்கள மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# இது தேசிய அரசாங்கம் அல்ல கூட்டுக்களவாணிகளின் அரசு

## ஹந்துன்நெத்தி விமர்சனம்

(கொழும்பு)

**பொதுத் தேர்தலின் பின்னர் அமைக்கப்படுவது தேசிய அரசாங்கம் இல்லையென்றும், கூட்டு வைத்து கொள்ளையடிக்கும் முயற்சியே என்றும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஹந்துனநெத்தி விமர்சித்துள்ளார்.**



ஜே.வி.பி.யின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ஹந்துனநெத்தியின் பேட்டியொன்று நேற்றைய திவயின பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அதில் கருத்து வெளியிட்டுள்ள ஹந்துனநெத்தி, கடந்த நாடாளுமன்றத் தேர்தல் இரண்டு அணிகளுக்கிடையில் நடைபெற்ற அரசியல் மோதல். ஒரு அணி மகிந்தவின் வெற்றிக்காக பாடுபட்டது. மற்றைய அணி அவரைத் தோற்கடிக்க பாடுபட்டது. இதற்கிடையில் பொதுமக்களுக்கு எங்கள் மீதான கவனம் குறைந்து விட்டது. அதன் காரணமாகவே நாங்கள் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை.

எனினும் முன்னைய நாடாளுமன்றத்தில் நாங்கள் மூன்று பேர் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தோம். தற்போதைய நாடாளுமன்றத்தில் ஆறுபேர் வெற்றிபெற்றுள்ளோம். அத்துடன் எங்கள் வாக்குகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதுவே நாங்கள் பெற்றுக் கொண்ட வெற்றிதான்.

நாடாளுமன்றத் தேர்தல் வரை எதிரும் புதிருமாக இருந்து வாக்கு கேட்டவர்கள் தற்போது இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்கப் போவதாக கூறி வருகின்றார்கள். உண்மையில் இது தேசிய அரசாங்கம் இல்லை.

தங்கள் வரப்பிரசாதங்கள் மற்றும் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள களவாணிகள் ஒன்று சேர்ந்து அமைத்துக் கொண்டுள்ள கூட்டுக் களவாணிகள் அரசாங்கம் என்றும் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்தார். (இ-7)

# உண்மையான எதிர்க்கட்சி நாங்கள்தான்

## ஜே.வி.பி.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் யாராக இருந்தாலும், மக்கள் மன்றத்தில் ஜே.வி.பியே எதிர்க்கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அதன் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள ரில்வின் சில்வா,

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக யாரும் வரலாம். ஆனால் அவர்கள் பெயரளவு எதிர்க்கட்சித் தலைவராகவே இருப்பார்கள். எதிர்க்கட்சியின் பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றும் கட்சியாக எமது கட்சியே இருக்கும்.

அரசாங்கத்தை நல்வழிப்படுத்தும் பலத்தை எங்களுக்குத் தருமாறு நாங்கள் கடந்த தேர்தலில் பொது மக்களிடம் வேண்டுகோள் முன்வைத்தோம். அதனை ஏற்று எங்களுக்கு ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களை வாக்காளர்கள் பெற்றுத் தந்துள்ளார்கள்.

இதனைக் கொண்டு பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் நாங்கள் தொடர்ந்தும் செயற்படுவோம். நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், அதற்கு வெளியேயும் பொதுமக்களின் எதிர்க்கட்சியாக நாங்கள் செயற்படுவோம். அதன்மூலம் பொதுமக்கள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையை நாங்கள் காப்பாற்றுவோம் என்றும் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கினால் ஏற்றுக்கொள்வேன்

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கினால் ஏற்றுக்கொள்வேன் என வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகமொன்று இது தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த போது அமைச்சு பதவிகள் வேண்டாம், எதிர்க்கட்சியில் இருக்கவே விரும்புகின்றேன் என கூறியிருந்தேன்.

எனவே எதிர்க்கட்சியின் முக்கிய பதவியொன்றை வகிக்க நான் விரும்புகின்றேன்.

ஒன்பதரை ஆண்டுகளாக எதிர்கட்சியில் இருந்தமையினால் எனக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்க தகுதியுண்டு என கருதுகின்றேன்.

எனக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படும் என எதிர்பார்க்கின்றேன். நான்கு ஆண்டுகள் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளராகவும் கடமையாற்றியிருக்கின்றேன்.

பேச்சாற்றல், சட்ட அறிவு, அனுபவம், நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் பற்றிய அறிவு, நடவடிக்கைகள் போன்ற பல்வேறு தகைமைகள் எனக்கு உண்டு.

புதிய அரசாங்கத்தை தேசிய அரசாங்கமாக கருதவில்லை, ஒட்டுமொத்த அரசாங்கத்தை விமர்சனம் செய்ய வேண்டியதில்லை.

தனித்தனியாக விமர்சனங்களை நிதானமாக செய்ய முடியும் என தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## ஆன்மீக அசுரர்கள்

உடல் தூய்மை தெய்வீகத்தின் அடுத்த அடையாளம். உடம்பில் தங்கும் கழிவுகளே உடல் நாற்றத்தின் காரணம். கழிவுகள் நாளடைவில் நச்சுத்தன்மை பெற்று நமது நற்பண்புகளை கெடுத்து மெல்ல மெல்ல நம்மை அசுரர்களாக ஆக்கி விடுகின்றன. அடிக்கடி குளிப்பது, தூய ஆடைகளை அணிவது, வியர்வை, மலம், சிறுநீர் போன்ற கழிவுக் கொள்கலனாக உடலை வைக்காது, உடன் அவற்றை வெளியேற்றி சத்வ குணத்தைப் பாதுகாப்பது தெய்வீக சாதகனின் முக்கிய கடமை தான்.

இந்தியாவிலேயே, தெய்வீக சுகம் நுகரப் பொருத்தமான இடம் கேரளம். கேரளத்துக் கோவில்களில் தெய்வ சாந்நித்யத்தை நன்கு உணர முடியும். அதன் முக்கிய காரணம் தூய்மை.

பொதுவாக கேரளத்தில் பளிச் சென்று தம்மை வைத்துக் கொள்ளும் பழக்கம் உண்டு. மலையாள மக்கள் குளிப்பதற்குத் தயங்குவதே இல்லை. பெண்கள் கூட காலையும் மாலையும் தலைக்கு குளித்து, ஈரக் கூந்தலை உலர்த்திய படி, சந்தனப் பொட்டுடன் கோவிலுக்கு வரும் அழகே தனி அழகு. சென்னை போன்ற நகரங்களில் ஆண்கள் கூட அடிக்கடி தலைக்குக் குளிப்பதில்லை... தூய்மை ஒரு வகை தெய்வீக இயல்பு என்கிறது கீதை. ஒரு சின்னக்கதை...

அழுக்குப் பன்றி இருந்த கொட்டகை நோக்கி மூன்று நண்பர்கள் போனார்கள். பத்தடி தொலைவில் இருக்கும் போதே ஐயோ குடலைக் குமட்டுகிறதே என்று ஒருவன் ஓடி வந்தான். அவன் மலையாள தேசம். இரண்டாமவன் அறைக்குள் நுழைந்து விட்டு அவசர அவசரமாக ஆமாம்... ஆமாம் குடலைக் குமட்டுகிறது என்று வெளியே ஓடி வந்தான். அவன் தமிழ்நாடு. மூன்றாமவன் நுழைந்து உள்ளே போனதும் ம்... நாறுகிறதே என்று கத்தியபடி பன்றி வெளியே வந்து விட்டது! அவன் எந்த ஊர் என்று எனக்குத் தெரியாது... உங்களுக்குத் தெரிந்தால் யாருக்கும் சொல்லாதீர்கள்...

அடுத்த தெய்வீக இயல்பு என்ன? வஞ்சகம் இல்லாமை. அபிராமி அந்தாதியில் அம்பிகை வழிபாடு என்ன நன்மை தரும் என்று எழுதிய அபிராமி பட்டர் நெஞ்சில் வஞ்சம் இல்லா இனம் தரும் என்கிறார். வஞ்சனை அசுர இயல்பு. இயேசு நாதர் என்கிற தெய்வ புருஷரை ஒருவஞ்சகன் காட்டிக் கொடுக்கிறான். தெய்வத்திற்கு எதிரானது வஞ்சனை என்பதற்கு இதுவே சான்று.

இன்று பெரு வாரியாக வலம் வரும் சாமியார்கள், சந்நியாசிகள், சமயத் தலைவர்கள் வஞ்சகமிக்கவர்கள், பணம், புகழ், காமநுகர்ச்சி இவற்றை வஞ்சனையாக மறைத்துக் கொண்டு காவியாடைக்குள் ஒளிந்துக்கொண்டிருக்கும் காமக்கள்வர்கள். கர்விகள், கறை படிந்த உடையும் உள்ளமும் உடையவர்கள். ஒளிவு மறைவற்ற வாழ்க்கை அற்றவர்கள்.

நான் மிக மதிக்கும் அருளாளர் சுவாமி சித்பவானந்தர். ஒளிவு மறைவற்ற வாழ்க்கை வாழ்ந்தவர். தாம் தங்கியிருந்த அறைகளில் கண்ணாடி ஜன்னல்கள் அமைக்கச் செய்வார். அதற்கு திரைச் சீலை போட அனுமதிக்கமாட்டார். தாம் தங்கியிருக்கும் அறை கதவைத் தாழ் போட மாட்டார். துறவி தாழ் போட, மறைக்க என்ன இரகசியம் இருக்கிறது என்று கேட்பார். பல மாணவர்கள் மத்தியில் படுத்துறங்குவார்.

ஓர் ஆணையோ, பெண்ணையோ உள்ளே வைத்துக் கொண்டு கதவுதைத் தாழிட்டுக் கொள்ளும் எந்த ஒரு துறவியையும் நான் நம்பத் தயாராக இல்லை. அவர்கள் வஞ்சனையாளர்களே!

அடுத்து அசுர குணங்களைப் பட்டியல் போடுகிறது பகவத் கீதை. டம்பம், கர்வம், தற்புகழ்ச்சி, கோபம், கடுஞ் சொல், ஞானமின்மை இவை அசுர சம்பத்து உடையவன் பிறவிக் குணங்கள் என்கிறது பதினாறாம் அத்தியாயத்தின் ஐந்தாவது சுலோகம்.

மடங்களில், யாக சாலையில் பெரிய பெரிய சிம்மாசனங்களைப் போட்டுக் கொண்டு கடவுளைவிட அலங்காரம் செய்து கொண்டு தம்மைப்பற்றித் தாமே புகழ்ந்து பேசிக்கொள்ளும் மதத் தலைவர்கள் பலர் மேற்கூறிய சுலோகத்தின் சதை வடிவம்.

தெய்வ சம்பத்து மோட்சத்தை அடைய உதவும். அசுர சம்பத்து சம்சார பந்தத்தை அளிக்கும். மேலும் அசுரர் சம்பத்து உடையவர்கள் செய்ய வேண்டியது எது, விலக்க வேண்டியது எது என்பதை அறியமாட்டார்கள். தூய்மையோ ஒழுக்கமோ சத்தியமோ அவர்களிடத்தில் கிடையாது.

இந்த உலகம் தர்மத்தை ஆதாரமாகக் கூடியது என்பதை இவர்கள் உணருவதில்லை. இறைவன் என்கிற தத்துவத்தை இவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். காரணம் அதை ஒப்புக் கொண்டால் இவர்கள் அயோக்கியத்தனத்திற்கு இடையூறாக இருக்கும் அது. ஆண், பெண் கவர்ச்சி, சிற்றின்ப நுகர்ச்சி இவையே இவர்களுக்கு முக்கியம்.

உலகம் காரண காரியத்திற்கு கட்டுப்பட்டது என்பதை இவர்கள் ஏற்பதில்லை. பாவ புண்ணியம், கர்ம வினை இவை வெறும் கற்பனை என்பார்கள். கூச்சம் இன்றிப் பாவங்களை ஆனந்தமாகச் செய்வார்கள். கிம்சையில் இவர்களுக்குப் பேரானந்தம். உலகத்தின் அழிவுக்குப் பெரும்பாலும் இவர்களே காரணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் தோல்வி சீனாவுக்கு சிறந்த பாடம்

சீனர்கள் நிதியை விரும்புகிறார்கள். சீன ஜனாதிபதி பட்டுப்பாதைத் திட்டத்தை நிறைவேற்ற விரும்புகிறார். இவ்விரண்டையும் அடைவதற்கு சீனாவிற்கு இலங்கை மிகவும் முக்கியமானதாகும்.



நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தோல்வியுற்றதுடன் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷவின் பிரதமராகும் கனவு சுக்குநூறாகியது.

ஓகஸ்ட் 17 அன்று இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றது. இலங்கையின் வரலாற்றில் மிகவும் அமைதியாக இடம் பெற்ற தேர்தலாக இத்தேர்தல் கணிக்கப்படுகிறது. இத்தேர்தலில் 70 சதவீத மக்கள் வாக்களித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 22 தேர்தல் மாவட்டங்களில் எட்டு மாவட்டங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. 11 தேர்தல் மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

ஏனைய மூன்று மாவடங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணம், வன்னி மற்றும் மட்டக்களப்பு தெற்குத் தேர்தல் தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கையின் தேர்தல் முறைமையின் பிரகாரம், 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 196 உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படுகின்றனர்.

இத்தேர்தல் மாவட்டங்களில் ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் விகிதாசார முறையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். கட்சிகள் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் ஆசனங்கள் ஒதுக்கப்படுகின்றன. மீதி 29 ஆசனங்களும் தேசியப் பட்டியல் மூலம் நிரப்பப்படுகின்றன.


ஓகஸ்ட் 18 காலையில் தேர்தல் பெறுபேறுகள் உத்தியோக பூர்வமாக அறிவிப்பதற்கு முன்னரேயே தான் தேர்தலில் தோல்வியுற்று விட்டேன் என மகிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

'பிரதமராக வருவதற்கான எனது கனவு நனவாகாது. நான் இத்தேர்தலில் தோல்வியுற்று விட்டேன். நாங்கள் சிறந்ததொரு போட்டியில் தோற்றுவிட்டோம்' என மகிந்த ராஜபக்ஷ அறிவித்தார்.

கடந்த ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலைக் கருத்து வாக்கெடுப்பாக நோக்க முடியும் என விக்கிரமசிங்க விபரித்திருந்தார். பத்தாண்டாக நாட்டை ஆட்சி செய்த மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறவேண்டுமா என்பதை இலங்கையின் 15 மில்லியனுக்கும் மேற்பட்ட வாக்காளர்களே தீர்மானிக்க வேண்டும் என பிரதமர் ரணில் தேர்தல் பரப்புரையின் போது தெரிவித்திருந்தார்.

இலங்கையின் ஆட்சி வரலாற்றில் மிகவும் அதிகாரம் மிக்க ஒருவராக விளங்கிய மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஒரு தடவை தற்போது தேர்தலில் தோல்வியுற்றுள்ளார். இது இவர் சந்தித்த இரண்டாவது தோல்வியாகும். மக்கள் ராஜபக்ஷ வைத் தமது தேசியத் தலைமையாக ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை என்பதையே இத்தேர்தல் பெறுபேறு காண்பிக்கிறது.

இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நிறைவேற்று ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு பிரதமருக்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்ட பின்னர், இலங்கையின் பிரதமராக வரவேண்டும்



**சிலோன் ருடே நாளிதழில் வெளியாகியுள்ள கேணல் ஹரிகரன் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து....**

என மகிந்த ராஜபக்ஷ அதீத நம்பிக்கை கொண்டிருந்தார்.

அத்துடன் இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பைத் தனதாக்கிக் கொள்ள வேண்டும் எனவும் ராஜபக்ஷ முயற்சித்தார். ஆனால் இவ்விரு முயற்சிகளும் வெற்றியடையவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அல்லது ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி தேர்தலில் பெரும்பான்மை வெற்றியைப் பெற்றிருக்காவிட்டாலும் கூட, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. இதனால் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் இணைந்து தமது நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்த முடியும். இதன்மூலம் அரசியல் யாப்பில் மேலும்



சீர்திருத்தங்களை மேற்கொள்வதுடன், பொருளாதார நடவடிக்கைகளிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

ராஜபக்ஷவின் தேர்தல் தோல்வியானது மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடைத்துள்ள பாரிய அரசியல் வெற்றியாகும். ஏனெனில் குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்திற்கு சவால் விட்டதுடன் மீண்டும் மகிந்த ராஜபக்ஷவை தலைவராக்க முயற்சித்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவைச் சேர்ந்த 13 உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் முக்கிய செயலர்களை மைத்திரிபால சிறிசேன புதிதாக நியமனம் செய்தார்.

ஓகஸ்ட் 17 அன்று தேர்தல் முடிவடைந்த கையோடு மைத்திரிபால சிறிசேன இந்த மாற்றம் தொடர்பாக அறிவித்தார்.

கொழும்பு உச்ச நீதிமன்றம் ஓகஸ்ட் 31 இல் மீண்டும் திறக்கப்படும் போது மைத்திரிபால சிறிசேனவின் இந்த தீர்மானம் சவால்களுக்கு உட்படலாம். இலங்கையில் செயற்படும் அரசியற் கட்சிகளின் செயலாளர்களே தமது தேசியப் பட்டியல் உறுப்பினர்களை நியமிக்க முடியும் என முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவித்தார். இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் முறையீடு செய்யும் போது அது தொடர்பாக நீதிமன்றம் விசாரணை செய்ய முடியும்.

தான் ஜனாதிபதியாகக் கடமையாற்றிய அதே நாடாளுமன்றில் மகிந்த ராஜபக்ஷ இனி வரும் நாட்களில் எதிர்க்கட்சி வரிசையில் அமரவேண்டும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டால் இவர் தனது விசுவாசிகளுடன் இணைந்து நாடாளுமன்றைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபடலாம். இவர் இதனைச் செய்வாரா?

ஆட்சியிலிருந்து தூக்கியெறியப்பட்ட பின்னர் இதுவரை இரண்டு தேர்தல்களில் தோல்வியுற்ற மகிந்த ராஜபக்ஷவின் அரசியற் செல்வாக்கு குறைவடைந்துள்ளது. ஆனால் தென் இலங்கையைச் சேர்ந்த பௌத்த தேசியவாத சிங்களவர்கள் மத்தியில் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தொடர்ந்தும் காணப்படுகிறது. ஆகவே மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலில் நீடிப்பாரா?

ராஜபக்ஷவிற்கு அப்பால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் இந்த வினாவை ஆராய்வார்கள். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன், அவரது சகோதரரான சமல் ராஜபக்ஷ மற்றும் அவரது மகன் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர். இது இந்த மூன்று ராஜபக்ஷக்களுக்கும் பாதுகாப்பை அளிக்கிறது.

நாடாளுமன்றம் கூடியிருக்கும் வேளையில் இந்த மூன்று பேரும் கைதுசெய்யப்பட முடியாது. ஊழல் மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதில் இந்த விடயம் முக்கியத்துவம் பெறுகிறது.



ஆனால் இந்த விசாரணை என்பது மகிந்த ராஜபக்ஷக்களுக்கு பெரும் தலைவலியாக அமையும். மக்கள் நிதியை மோசடி செய்தமை தொடர்பில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. இவரது சகோதரரான முன்னாள் அமைச்சர் பசிலுக்கு எதிராக ஊழல் வழக்கு பதியப்பட்டுள்ளது. இந்த வழக்குகள் மிக வேகமாக விசாரணை செய்யப்படுகிறது.

ஆனால் மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் மகிந்த ராஜபக்ஷக்களுக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்வதில் இவர்களுக்கு ஆதரவான சிங்கள ஆதரவாளர்களைக் கருத்திற் கொண்டு மிகக் கவனமாகச் செயற்பட வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் வெற்றியை இந்தியா வரவேற்றுள்ளது. அத்துடன் ராஜபக்ஷ தற்போது நாடாளு மன்ற உறுப்பினராகியுள்ளமை தொடர்பிலும் இந்தியா விழிப்புணர்வுடன் உள்ளது.

நடந்து முடிந்த தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியுற்றதானது சீனாவுக்கான சிறந்ததொரு பாடமாக உள்ளது. அத்துடன் இலங்கையில் தடைப்பட்டுள்ள தனது திட்டங்களை இலங்கையின் புதிய தலைமையுடன் இணைந்து மேற்கொள்வதற்கான முயற்சிகளைக் கைக்கொள்ளும்.

சீன ஜனாதிபதியின் 21 ஆவது நூற்றாண்டிற்கான கடல்சார் பட்டுப் பாதைத் திட்டமானது வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படுவதற்கு இலங்கையுடனான உறவு மிகவும் முக்கியமானதாகும். சீனர்கள் நிதியை விரும்பு கிறார்கள். சீன ஜனாதிபதி பட்டுப்பாதைத் திட்டத்தை நிறைவேற்ற விரும்புகிறார். இவ்விரண்டையும் அடைவதற்கு சீனாவிற்கு இலங்கை மிகவும் முக்கியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாசிலாந்து வீதி விபத்தில் 38 பெண்கள் உயிரிழப்பு

## பாரம்பரிய விழாவுக்கு சென்ற சமயம் விபரீதம்

(பாபேனே)

**தெற்கு ஆபிரிக்க நாடான சுவாசிலாந்தில் பிரபலமான பாரம்பரிய விழா ஒன்றுக்கு சென்று கொண்டிருந்த 38 பெண்கள் வீதி விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.**



கடந்த வெள்ளிக்கிழமை, அவர்கள் பயணித்துக் கொண்டிருந்த ட்ரக் வண்டி இன்னொரு வாகனத்துடன் மோதியதில் 38 பேர் பலியானதுடன் 20 இற்கும் அதிகமானோர் மோசமாக காயமடைந்துள்ளதாக சுவாசிலாந்து ஒத்துழைப்பு வலையமைப்பு என்ற மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது.

உம்லாங்கா என்ற பாரம்பரிய நடன விழாவுக்காக அவர்கள் சுவாசி மன்னனின் அரண்மனைக்குச் சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து நேர்ந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும், அரண்மனைக்கு முன்பாக 8 நாட்கள் நடைபெறும் இந்தக் கொண்டாட்டத்தில் சுமார் 40 ஆயிரம் பெண்களும் அரை நிர்வாணமாக அணிவகுத்து செல்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## 71 சடலங்கள் மீட்கப்பட்டன

ஆஸ்திரியாவில் ஹங்கேரி எல்லைக்கு அண்மையில் நெடுஞ்சாலையொன்றில் கைவிடப்பட்டிருந்த லொறியொன்றிலிருந்து 71 குடியேற்றவாசிகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. கோழி இறைச்சிகளை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படும் காற்றுப் புகாத குளிர்சாதன லொறியிலிருந்தே இந்த சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவர்கள் அனைவரும் மூச்சுத் திணறி உயிரிழந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. பலியானவர்கள் அனைவரும் சிரியப் பிரஜைகள்ளென நம்பப்படுகிறது. அவர்களில் ஒரு பாலகன், 3 சிறுவர்கள் மற்றும் 8 பெண்கள் உள்ளடங்குகின்றனர்.

கிழக்கு ஆஸ்திரியாவிலுள்ள பார்ன்டோர்ப்நகரிலுள்ள நெடுஞ்சாலையில் காணப்பட்ட அந்த லொறியானது ஹங்கேரியில் பதிவுசெய்யப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த லொறியின் சாரதி ரோமானிய பிரஜை என ஹங்கேரி உறுதிப்படுத்தியுள்ளது. அந்த சாரதி சேர்பியாவிலிருந்து அந்தக் குடியேற்ற வாசிகளை லொறியில் ஏற்றியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

பயணத்தின்போது லொறியின் பின் கதவைத் திறந்த லொறி சாரதி, அதில் பயணித்த குடியேற்றவாசிகள் அனைவரும் உயிரிழந்துள்ளதை கண்டு அச்சமடைந்து லொறியைக் கைவிட்டு தலைமறைவாகியிருக்கலாம் என கருதுவதாக பிராந்திய பொலிஸார் தெரிவித்தனர். (3-7)

## அல் -ஜசீரா நிருபர்களுக்கு 3 ஆண்டு சிறைத்தண்டனை

எகிப்தில் அனுமதியின்றி செயற்பட்ட அல் -ஜசீரா தொலைக்காட்சி நிருபர்கள் மூன்று பேருக்கு தலா மூன்றாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எகிப்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு முகமது மோர்ஸி தலைமையிலான முஸ்லிம் சகோதரத்துவ ஆட்சி அகற்றப்பட்டது. அப்போது ஏற்பட்ட கலவரத்தை செய்தியாக வெளியிட்ட அல்- ஜசீரா தொலைக்காட்சியின் அவுஸ்திரேலியா, கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளை சேர்ந்த நிருபர்கள் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது உரிய ஊடக அனுமதியின்றி ஒளிபரப்பு கருவிகளை இயக்கியதாகவும், தவறான செய்தியை ஒளிபரப்பியதாகவும், இது நாட்டுக்கு தீங்கு விளைவிக்க கூடியது என்றும வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், அல்-ஜசீரா பத்திரிகையாளர் மூவருக்கும் 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

இவர்களில் முகமது பாக்மி, பாகர் முகமது ஆகியோர் சிறைக்கு அனுப்பப்பட்டனர். மற்றொரு நிருபர் பீட்டர் கிரெஸ்ட் கடந்த பெப்ரவரி மாதம் அவரது சொந்த நாடான அவுஸ்திரேலியாவுக்கு நாடு கடத்தப்பட்டதால் அவர் தண்டிக்கப்படவில்லை.


தீர்ப்பு வாசிக்கப்பட்டதும் நீதிமன்ற அறையில் இருந்த நிருபர்கள், வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் மற்றும் தண்டனை பெற்ற நிருபர்களின் குடும்பத்தினர் கடும் அதிருப்தியுடன் வெளியேறினர்.

தண்டனை பெற்ற நிருபர்களுக்கு பொது மன்னிப்பு பெறுவது தொடர்பாக தூதர்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (3-7)

## சீன கடதாசி தொழிற்சாலை விஷவாயுவால் 7 பேர் பலி!

சீனாவில் உள்ள கடதாசி ஆலையில் வேலை பார்த்த தொழிலாளர்கள் 7 பேர் விஷவாயு தாக்கி இறந்துள்ளனர். மத்திய சீனாவின் ஹுனான் மாகாணத்தில் உள்ள கடதாசி ஆலையில் நேற்று முன்தினம் இரவு தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். அப்போது, துப்புரவு வேலை செய்துகொண்டிருந்த ஒரு தொழிலாளி, கழிவு காகிதக் கூழ் நிரப்பிய பெரிய தொட்டிக்குள் தவறி விழுந்துவிட்டார்.

விஷத்தன்மை கொண்ட காகிதக் கூழில் விழுந்து தத்தளித்த அவரை காப்பாற்ற சக வீரர்கள் முயன்றனர். அப்போது அவர்களும விஷவாயுவால் தாக்கப்பட்டு விழுந்தனர். இந்த விபத்தில் 7 பேர் இறந்தனர். 2 பேர் விஷவாயுவை சுவாசித்ததால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுபற்றி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து உள்ளூர் அதிகாரிகள், கம்பனி நிர்வாகிகள் என




பலரை கைது செய்துள்ளனர்.

சீனாவில், பாதுகாப்பு குறைபாடு காரணமாக தொழிற்சாலை விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. சமீபத்தில் தியான்ஜின் துறைமுகத்தில் ஏற்பட்ட விபத்தில் 145 பேர் கொல்லப்பட்ட நிலையில், தேசிய அளவில் பாதுகாப்பு சோதனைகளை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. குறிப்பாக ஆபத்தான இரசாயனங்களை சேமித்து வைத்திருப்பதைக் கண்காணித்து நடவடிக்கை எடுப்பதில் அரசு கவனம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (3-7)




## மலேசியப் பிரதமருக்கு எதிராக தலைநகரில் நேற்று ஆர்ப்பாட்டம்



ஊழல்குற்றச்சாட்டிற்கு ஆளாகியுள்ள மலேசிய பிரதமருக்கு எதிராக பொலிஸின் தடையை மீறி அந்நாட்டு தலைநகரில் போராட்டம் நடந்துவருகிறது.

சில மாதங்களுக்கு முன்பு பிரதமர் நஜீப் ரஸாக்கின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் பலநூறு மில்லியன்டொலர் பணம்இருப்பது தெரிய வந்தது. இதனை தொடர்ந்து எதிர்க்கட்சிகள் அவரை பதவி விலகும்படி கூறிவருகிறார்கள். ஆனால் அவர்தனது வங்கிக்கணக்கில் இருப்பது நன்கொடைப் பணம் என்றும் தான் எந்த குற்ற மும் செய்யவில்லை என்றும் கூறிவருகிறார்.

ஆனால் நேற்று, அவர் பதவி விலகும்படி வற்புறுத்தி கோலாலம்பூரில் மக்கள் ஆயிரக்கணக்கில் கூடி போராட்டம் நடத்துகின்றனர். இந்த போராட்டம் மற்றும் பேரணி இரண்டு நாள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. போராட்டக்காரர்கள தங்கள் எதிர்ப்பை தெரிவிக்கும் பொருட்டு மஞ்சள் நிற உடை அணிந்து போராடி வருகிறார்கள். (3-7)

## ஆப்கானில் தாக்குதல் 100 தீவிரவாதிகள் பலி

ஆப்கானிஸ்தான் நாட்டில், ஹெல்மாண்ட் மாகாணத்தில் முசா காலா மாவட்டத்தில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை இராணுவம் முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது.

ஹெல் மாண்ட் மாகாண ஆளுநர் உமர் ஜவாக், "முகா காலா மாவட்டத்தில் தீவிரவாதிகளை ஒழிப்பதற்காக கூடுதல் படைகள் அமர்த்தப்பட்டுள்ளன" என கூறியுள்ளார்.

இந்த நிலையில், கடந்த சில நாட்களாக அங்கு நடந்து வருகிற தாக்குதல்களில் 100 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் பலியாகி விட்டதாக தகவல்கள் கூறுகின்றன. இதே போன்று இராணுவ தரப்பிலும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் கூறினாலும், பலி எண்ணிக்கை பற்றி உறுதியான தகவல் இல்லை. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு எவ்வித பாதிப்புமில்லை


(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தற்போதைக்கு ஆபத்து இல்லை என்று தெரியவந்துள்ளது.

கீதா குமாரசிங்க இரட்டைப் பிரஜா வுரிமை கொண்டவர் என்ற காரணத்தினால் அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை பறிபோகும் அபாயம் இருப்பதாக அண்மைய நாட்களில் பரபரப்பான தகவல்கள் வெளிவந்திருந்தன. 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இரட்டைப் பிரஜா வுரிமை கொண்டவர்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் உறுப்பினராக பதவி வகிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள மேலதிக தேர்தல்கள் ஆணை யாளர் முஹமட், கீதாவின் பதவிக்கு தற்போதைக்கு ஆபத்து இல்லை என்று தெரிவித்துள்ளார். தேர்தலின் மூலம் நாடாளுமன்றத்திற்கு தெரிவானவர்களின் பெயர்ப் பட்டியல் தற்போது வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தல்கள் ஆணையத்தால் எவருடைய பதவி யையும் பறிக்க முடியாது என்று அவர் கூறியுள்ளார்.

அவ்வாறு சட்டச் சிக்கல்கள் இருப்பின் அதனை நீதிமன்றம் ஊடாகவே தீர்த்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்றும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் முஹமட் தெரிவித்துள்ளார். (இ-7)



# எதிர்க்கட்சித் தலைவரை தேர்ந்தெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லையாம்

## விமல் வீரவன்ச காட்டம்

(கொழும்பு)

**நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரை தேர்ந்தெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இல்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கடுமையாக விமர்சித்துள்ளார்.**

இது தொடர்பாக பி.பி.சி யின் சந்தேசய சிங்கள ஒலிபரப்புக்கு அவர் வழங்கிய செவ்வியில்,

நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு அடுத்தபடியாக கூடுதலான ஆசனங்களைப் பெற்ற கட்சிக்கே எதிர்க்கட்சி ஆசனம் உரித்தானது. ஆனால் அதனை ஜனாதிபதியோ கட்சியின் தலைவரோ தீர்மானிக்க முடியாது.

அதனை பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஆனால் இன்றோ நடப்பது அனைத்தும் தலைகீழாக இருக்கின்றன.

நாட்டின் பிரதமரையும் ஜனாதிபதிதான் தேர்ந்தெடுக்கின்றார். அமைச்சரவையையும் அவர்தான் முடிவு செய்கின்றார். அதுவும் போதாதற்கு எதிர்க்கட்சித் தலைவரையும் அவர்தான் தீர்மானிக்க முயல்கின்றார்.

இது ஒரு அரசியல் கோமாளித்தனம். அத்துடன் இதன் மூலம் இலங்கையின் பல்கட்சி ஜனநாயகத்தின் உயிர்த்துடிப்பு நசுக்கப்பட்டுவிடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அளிக்கக் கோருபவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் டொலர் பொதிகளுக்கு ஆசைப்பட்டு குரல் கொடுக்கின்றார்கள். அது குறித்து தனியாக விசாரணை நடத்தப்பட வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி சுதந்திரக் கட்சிக்கே உரியது. ஆனால் அதனை தீர்மானிக்கும் சுதந்திரம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தனது செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சு.க.செயற்குழுவுக்கு சந்திரிகா வருகை

## மகிந்த பங்கேற்கவில்லை

(கொழும்பு)

நேற்று முன்தினம் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்து கொண்டுள்ள அதேவேளை மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை என்று தெரிய வந்துள்ளது.


மகிந்தவுடன் சேர்த்து சுதந்திரக் கட்சிக்குள் அவரின் தீவிர ஆதரவாளர்களான சுசில் பிரேமஜயந்த, அனுர யாப்பா ஆகியோரும் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிகின்றது.

சுதந்திரக் கட்சிக்குள் சந்திரிகாவின் மீள் வருகை மற்றும் கட்சி முடிவுகளில் அவரின் தலையீடு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அனுர யாப்பா மற்றும் சுசில் பிரேம ஜயந்த ஆகியோர் கலந்து கொள்ளவில்லை என்று அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

எனினும் தற்போதைய நிலையில் அரசியல் மற்றும் கட்சி ரீதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொள்ளும் பெரும்பாலான முடிவுகளின் பின்னணியில் சந்திரிகா அம்மையார் செயற்படுவதாகவு. அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. (இ-7)

# போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை தேவையில்லை

## தயான் ஜயதிலக கூறுகிறார்



(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் எந்தவொரு விசாரணையும் தேவையில்லை என்று தயான் ஜயதிலக வலியுறுத்தியுள்ளார்.

முதலாவது வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாகத்தில் அமைச்சுப் பதவி வகித்தவரும், சிரேஷ்ட இராஜதந்திரியுமான தயான் ஜயதிலக இது குறித்து விசேட நேர்காணல் ஒன்றை ரிவிர பத்திரிகைக்கு வழங்கியுள்ளார்.

அதில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்துள்ள தயான் ஜயதிலக, உலகின் எந்தவொரு நாடும் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்தி தண்டனை அளித்த வரலாறு இல்லை. அவ்வாறு விசாரணை நடத்திய நாடுகளும் பல வருடங்கள் கழிந்த பினனர் ஒப்புக்காகவே போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்தன. எனினும் அதன் மூலம் யாரும் தண்டிக்கப்பட்டதே இல்லை.


போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளுக்குப் பதிலாக குறித்த விடயங்கள் தொடர்பான ஞாபகங்களை காலப் போக்கில் மறக்கச் செய்யும் முயற்சிகளையே மேற்கொள்ள வேண்டும். அது தொடர்பான விடயங்களை தோண்டித் துருவாமல் காலங்கள் கடந்த பின்பு நடைபெற்ற தவறுகளுக்கு நியாயங்களை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அத்துடன் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். மற்றபடி போர்க்குற்ற விசாரணைகள் இதற்கான பரிகாரம் இல்லை.

தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள உள்ளக போர்க்குற்ற விசாரணையானது அமெரிக்காவின் சதித்திட்டமாகும். இது நாடுகளுக்கு ஆபத்தானது என்றும் தயான் ஜயதிலக மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அமைச்சரவைக்கு ஒழுக்கக் கோவை

## அவசியம் என்கிறார் ஜயரத்ன



(கொழும்பு)

நல்லாட்சிக்கான பங்களிப்பை வலியுறுத்தும் வகையில் அமைச்சரவைக்கு ஒழுக்கக்கோவை ஒன்றை அறிமுகம் செய்வது அவசியமென்று வர்த்தக சபையின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்ன வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலின் கீழ் பிரதமரின் நெறிப்படுத்தலில் புதிய அரசாங்கம் அடுத்த வாரத்தில் முதலாவது அமர்வைக் கூட்டவுள்ள நிலையில் இது குறித்து சிந்திப்பது சிறப்பானதாக இருக்கும் என்றும் சந்திரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பொதுவாழ்விற்கான விடயங்களைப் போன்று புதிய அமைச்சரவையில் தொடர்புடைய உறுப்பினர்களது கட்சிகளின் விஞ்ஞாபனங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என சந்திரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அதேபோன்று அந்த ஒழுக்கக்கோவை ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஒழுக்கக்கோவையை அமைச்சரவை உப குழு ஊடாக மேம்படுத்தி ஐக்கிய அமெரிக்க அமைச்சரவையின் ஒழுக்கக் கோவைக்கு நிகராகத் தயாரிக்க வேண்டும் என சந்திரா ஜயரத்ன ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆட்சி முறைகேடு தொடர்பில் 867 முறைப்பாடுகள் இதுவரை பதிவு

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் மட்டும்

(கொழும்பு)

மகிந்த அரசாங்கத்தின் ஆட்சியின் போது நிதி மற்றும் பொதுச் சொத்துக்களை தவறாக பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் 867 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த ஆணைக்குழு தங்கள் விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பித்த கடந்த 5 மாத காலப் பகுதியினுள் இம் முறைப்பாடு கிடைத்துள்ளதாக ஆணையத்தின் செயலாளர், நாடாளுமன்றத்தின் முன்னாள் நிர்வாக இயக்குனர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இம் முறைப'பாடுகளில் 250 முறைப்பாடுகள் தொடர்பில் நிரந்தரமான விசாரசனை மேற்கொள்ள வேண்டும் என உத்தர விடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு 5 அதிகாரிகளை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# தம்புள்ளயில் கோரவிபத்து

## 26 பேர் படுகாயம்

தம்புள்ள. கெகிராவை பிரதான வீதியில் இன்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 26 பேர் காயமடைந்துள்ளனர்.

பேருந்து ஒன்று லொறியுடன் மோதியதினாலே இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த 26 பேரில் 18 பேர் தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறு காயங்களுக்கு உள்ளானவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த சொகுசு தனியார் பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து நிகழ்ந்ததனை தொடர்ந்து பேருந்து சாரதி தப்பி யோடியுள்ளார். பேருந்து அதிக வேகத்தில் சென்றமையே இவ் விபத்துக்கு காரணம் என. பயணி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் வயலின் இசை இடம்பெறவுள்ளது.

இதன்போது வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம்- க.நந்தகுமார், தபேலா- சதா வேல்மாறன், முகர்சிங்- ஜெ.சாரங்கன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (இ-5)

## இசைப் பேருரை

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டி நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் தினமும் மாலை 6.45 மணிக்கு கந்தபுராண தொடர் இசைப் பேருரை நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று திங்கட்கிழமை பிரணவ உபதேசம் எனும் கந்தபுராண இசைப் பேருரையினை நல்லைக் குருமணியின் பிரதமவாரிசு கானகதா வாரிசு பிரம்மஸ்ரீ சி.வை. நித்தியானந்த சர்மா வழங்கவுள்ளார். (இ-5)

## ஆன்மீக அருளுரை

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவகாலத்தையொட்டி யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமியினால் நடத்தப்பட்டு வருகின்ற ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணி தொடக்கம் 8 மணி வரை நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் வாழ்க்கை எனும் விளையாட்டு எனும் ஆன்மீக அருளுரை இடம்பெறும். (இ-5)

## அருள் நெறி விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டி நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தி வருகின்ற யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறிவிழா தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெற்று வருகிறது.

இதற்கமைய இன்று திங்கட் கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்ளக் கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செய லாளர் கே. ஸ்ரீமோகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது வரவேற்புரையினை தெல்லிப்பழை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி க.கலைமதி நிகழ்த்தவுள்ளார்.

கலை நிகழ்வுகளாக கன்னி வளவு பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவி ம.வைஷ்ணவி- தனிநடனம், அழகெல்லை அறநெறிப் பாடசாலை மாணவன் க. கர்ணன்- தனிநடனம், மல்லாகம் நீலியம் பனை அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் வில்லிசை, துர்க்கை அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களான வ.சங்கவி, தோ. துஸ்யந்தினி- பேச்சு, கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களான மா.டிலான் கிருஸ்ணா, கி. அருள் சாந்- பேச்சு, சி.கரண்யா-தனிநடனம் மற்றும் கீழ்ப்பிரிவு மாண வர்கள் வழங்கும் நாடகம், பழம்பதி அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் குழு நடனம் மற்றும் சி. [illegible] இடம்பெறவுள்ளன. (இ-5)

# மாயாதுன்னேயின் இடத்திற்கு லால்காந்த

## ஜே.வி.பி.தீர்மானம்

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் சந்திர மாயாதுன்னே பதவி விலகியவுடன் ஏற்படும் வெற்றிடத்துக்கு கே.டி.லால்காந்த நியமிக்கப்படவுள்ளார்.

ஜே.வி.பி. கட்சியின் தேசியப் பட்டியல் மூலமாக முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் சரத்சந்திர மாயாதுன்னே நாடாளு மன் றத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் தனிப்பட்ட காரணங்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் நீடிக்க அவர் விரும்பவில்லை என்று தெரிய வருகின்றது.

இதன் காரணமாக நாடாளுமன்ற கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் அவர், பின்னர் தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளார்.

அதன் மூலம் ஏற்படும் வெற்றிடத்துக்கு ஜே.வி.பி.யின் தொழிற் சங்கத் தலைவர் லால்காந்த நியமிக்கப்படவுள்ளதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான லால்காந்த, கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது மேல்மாகாண சபைக்குத் தெரிவாகியிருந்தார்.

என்னும் தொடர்ச்சியாக மாகாண சபை அமர்வுகளுக்குச் சமுகமளிக்காத அவர், அண்மை யில் தனது பதவியை இராஜினாமாச் செய்திருந்தார்.

லால்காந்த கட்சியுடன் முரண்பட்டுக் கொண்டே மாகாண சபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்திருந்ததாக அப்போது தகவல்கள் பரவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வேலிருக்க அஞ்சாதே மடமை நெஞ்சே!

மாதரெலாம் அடியளந்து மனத்துள் கந்தன்
மங்காத அருள் நிரப்பி மாங்கல்யத்தை
நாதனவன் காத்திடவே வேண்டி நின்று
நல்லூரான் வீதியிலே உருகி நிற்பார்
ஏதமிலா நல்வாழ்வை எமக்குக் கந்தன்
எப்போதும் தந்திடுவன் என்றே சொல்லி
வேதனையில் உழல்வாரும் வேலன் காலை
விருப்புடனே பற்றி அருள் வேண்டி நிற்பர்.

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

## நல்லூரானை வணங்குவோம்

நல்லூரான் வாசல் செல்வோம் வணங்கி
இல்லாதவை யாவும் எடுத்துரைப்போம் இணங்கி
வல்லாளரின் ஆதிக்கம் அழியும் நொருங்கி
சொல்லாதவரும் சொல்வார் அவனருளில் மயங்கி

மானந்தன், அல்வாய்.

## தேசமெங்கும் ஒலிக்குதடா!

நல்லையிலே பாருங்கள் அருளாட்சி
நல்லதெலாம் தரும் செங்கோலாட்சி
கொண்டைச்சேவல் ஓதுது முருகா முருகா
துள்ளுமான் சொல்லுதலே முருகா முருகா

வண்மையில் வாய்மொழியும் முருகா முருகா
கன்னியர் குல மொழியும் முருகா முருகா
தென்றலின் நாமஜெயம் முருகா முருகா
தேசமெங்கும் ஒலிக்குதடா முருகா முருகா

## அலங்காரக் கந்தனே அருள்வாய்!

சரவணப் பொய்கையில் உதித்தவனே
சங்கரனார் மகனாக வந்தவனே
அழகு நல்லூரிலே உறைபவனே
அவுணரைக் காலால் உதைப்பவனே
வணங்கும் அடியாரைக் காப்பவனே
வள்ளி நாயகி கரம் பிடித்தவனே
அருணகிரி புகழை ஏற்றவனே
அலங்கார கந்தனாக அருள்பவனே.

க.பிரணவன், யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

## நல்லைக் கந்தன் நனிவிருத்தம்

குமரனே யுனைப்போற் தெய்வம்
குவலயத் துளதோ வன்பர்
இமைத்திடு முன்னே வந்து
இன்னலை யகற்றும் தாயே
அமர்ந்துனை நினைத்தாற் போதும்
அரவனைத் தமைதி தந்து
சமர்க்கள மெதூவா னாலும்
சாடுவாய் நல்லைக் கந்தா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவே மீண்டும் முதலமைச்சராக வருவார்

## கருத்துக்கணிப்பில் கண்டுபிடிப்பு

(சென்னை)

**ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சராக அதிக மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். இதில் மு.க.ஸ்டாலினுக்கு 2 ஆவது இடமும், கருணாநிதிக்கு 3 ஆவது இடமும் கிடைத்து இருப்பது கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்து உள்ளது.**



மக்கள் ஆய்வக இயக்குநர் பேராசிரியர் ச.இராஜநாயகம் வழிகாட்டுதலின்படி, தமிழகத்தின் 28 மாவட்டங்களில், 80 சட்டசபை தொகுதிகளில் கடந்த 13 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை பல்வேறு தரப்பு மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. தமிழகத்தில் கட்சிகளின் செல்வாக்கு எப்படி உள்ளது? மீண்டும் முதலமைச்சராக தகுதி படைத்தவர் யார்? என்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து படித்தவர்கள், படிக்காதவர்கள், கூலிவேலை செய்பவர்கள், விவசாயிகள், தனியார் நிறுவன ஊழியர்கள், மாணவர்கள், அரசு ஊழியர்கள் என பல்வேறு தரப்பு மக்களின் கருத்துகளை கேட்டு அறிந்தனர்.

இந்த கருத்துக்கணிப்பின் முடிவுகளை பேராசிரியர் ச.இராஜநாயகம் நேற்று முன்தினம் சென்னையில் வெளியிட்டார்.

தகுதி, திறமை, வாய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தற்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சர் ஆவார் என்று அதிகம் பேர் கருத்து தெரிவித்து உள்ளனர். அதாவது ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சர் ஆவதற்கு ஆதரவாக 31.56 சதவீதம் பேர் கருத்து தெரிவித்துள்ளனர்.

அவரை அடுத்து 2 ஆவது இடத்தில் தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின் உள்ளார். அவருக்கு ஆதரவாக 27.98 சதவீதம் பேர் கருத்து தெரிவித்துள்ளனர். 21.33 சதவீதம் பேரின் ஆதரவுடன் தி.மு.க. தலைவர் கருணாநிதி மூன்றாவது இடத்தில் உள்ளார். (3-7)

# காஷ்மீர் ராணுவபயிற்சி முகாமில் வெடிவிபத்து

## 18 படையினர் காயம்

(ஸ்ரீநகர்)

காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்துக்கு உட்பட்ட அவந்திப்போரா அருகே உள்ள இராணுவ முகாமில் 50 ஆவது ராஷ்ட்ரீய ரைபிள் படையின் தலைமை அலுவலகம், இராணுவ குடியிருப்புகள் மற்றும் பயிற்சி பாடசாலை உள்ளிட்ட அலுவலகங்கள் அமைந்துள்ளன.

இந்த முகாமில் உள்ள பயிற்சி பாடசாலையில் நேற்று முன்தினம் காலையில் வழக்கமான பயிற்சிகள் நடைபெற்றன. அப்போது அங்கு வைக்கப்பட்டிருந்த வெடிபொருள் பலத்த சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதற்கான காரணம் தெரியவில்லை. இந்த சம்பவத்தில் 18 வீரர்கள் பலத்த காயமடைந்தனர்.

உடனே அவர்கள் அனைவரும் ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்பட்டு படாமிபாக் கண்டோன்மென்ட் பகுதியில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களின் உடல் நிலை தற்போது சீராக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் நடந்த பகுதியை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் எடுத்து விசாரணை நடத்தி வருகிறது. மேலும் இந்த விபத்து குறித்து நீதி விசாரணைக்கும் உத்தர விடப்பட்டுள்ளது. (3-7)




# காஷ்மீர் எல்லையில் தாக்குதல் 3பேர் உயிரிழப்பு; 18பேர் காயம்

காஷ்மீரில் பாகிஸ்தான் அத்துமீறி தாக்குதல் நடத்துவதால் நூற்றுக்கணக்கானோர் கோவில்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். எல்லையில் தொடர்ந்து பதற்றம் நீடித்து வருகிறது.

ஜம்மு-காஷ்மீர் மாநில எல்லையோர பகுதிகளில் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது. இதை மீறி பாகிஸ்தான் இராணுவம் இந்திய இராணுவ நிலைகள் மீதும், எல்லையோர கிராமங்கள் மீதும் குறி வைத்து தாக்குதல் நடத்துவதை வழ்க்கமாக கொண்டு உள்ளது.

தீவிரவாதிகளை காஷ்மீருக்குள் ஊடுருவச் செய்யவும் இது போன்ற தாக்குதல் தந்திரங்களை பாகிஸ்தான் இராணுவம் கையாண்டு வருகிறது.

**10 கிராமங்கள் மீது தாக்குதல்**

நேற்று முன்தினம் அதிகாலை 2 மணி அளவில் ஜம்மு மாவட்டத்தில் சர்வதேச எல்லைக்கோடு மற்றும் எல்லை கட்டுப்பாடு கோடு பகுதிகளையொட்டி அமைந்த ஆர்.எஸ்.புரா, ஆர்னியா துணைவட்டார பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவம் சிறிய பீரங்கிகள் மூலம் 82 மி.மீ. ரக குண்டுகளை வீசி தாக்கியது. அதிநவீன இயந்திர துப்பாக்கிகளால் சரமாரியாகவும் சுட்டது.

இதனால் இந்திய எல்லையின் உட்புற கிராம பகுதிகளில் குண்டுகள் சரமாரியாக வந்து விழுந்த வெடித்தன.

கண் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த நேரத்தில் பீரங்கி குண்டுகளும், துப்பாக்கி குண்டுகளும் வந்து விழுந்ததால் எல்லையோரம் வசிக்கும் கிஷான்பூர், நவாபிந்த், அப்துலியா, ஜோரா போம், ஜீக்னு சாக், ஹர்னா, சியா, சாந்து சாக், சாய்குர்த், பக்கா ஆகிய 10 கிராம மக்களும் பீதியில் உறைந்தனர். அவர்களுடைய வீட்டுச் சுவர்களை பீரங்கி குண்டுகள் சல்லடையாக துளைத்தன.

பாகிஸ்தானின் இந்த அடாவடி தாக்குதலில் 2 பெண்கள் உட்பட 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 18 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் ஜம்மு மருத்துவ கல்லூரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்திய இராணுவ வீரர்களும் பாகிஸ்தானின் தாக்குதலுக்கு தகுந்த பதிலடி கொடுத்துவருகின்றனர்.

எனினும், பாகிஸ்தான் தாக்குதலை தீவிரப்படுத்தலாம் என்ற அச்சத்தில் காணப்படும் கிராம மக்கள் இரவில் தங்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லுமாறு மாவட்ட அதிகாரிகளை வலியுறுத்தி வருகின்றனர்.

பாகிஸ்தான் தீவிர தாக்குதல் நடத்தியதால் எல்லையோர பகுதிகளில் கூடுதல் வீரர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் 24 மணி நேரமும் எல்லையில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி நடத்தும் தாக்குதல் எதிரொலி காரணமாக எல்லையில் தொடர்ந்து பதற்றம் நீடித்து வரு கிறது. (3-7)

# வைபர் தாக்குதல் ஹெலிகளை வழங்குகிறது அமெரிக்கா

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்த, 'ஏஎச்-1 இசட் வைபர்' தாக்குதல் ஹெலிகொப்டர்களை அமெரிக்கா வழங்குகிறது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தீவிரவாத ஒழிப்பு என்ற பெயரில் ஆயுதங்களையும், போர்த்தளபாடங்களையும் குவித்து வைப்பதில் ஆர்வம் காட்டி வரும் பாகிஸ்தான், 100 கோடி டொலர் மதிப்பிலான ஆயுதங்கள், போர்த்தளபாடங்களை வழங்குமாறு கடந்த ஆண்டு அமெரிக்காவிடம் கேட்டுக் கொண்டது.

பாகிஸ்தான் கேட்ட ஆயுதங்கள், தளபாடங்களின் பட்டியலில் முக்கியமாக, 15 'ஏஎச்-1 இசட் வைபர்' தாக்குதல் ஹெலிகொப்டர்கள், 32 'டி-700 ஜி இ 401 சி' என்ஜின்கள், 1000 'ஏஜி எம்-114 ஆர் ஹெல்பயர் 2' ஏவுகணைகள், 36 'எச்-1' தொழில்நுட்ப புதுப்பிப்பு பணி கணனிகள், 17 'ஏஎன்ஃ ஏஏகியூ-30' இலக்கு பார்வை சாதனங்கள் மற்றும் பல இடம்பெற்றது. மேலும் கணனி சார்ந்த ஏராளமான தளபாடங்களை வழங்குமாறு அமெரிக்காவிடம் பாகிஸ்தான் கேட்டுக்கொண்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் பாகிஸ்தானுக்கு 100 கோடி டொலர் மதிப்பிலான இந்த ஆயுதங்களையும், தளபாடங்களையும் வழங்குவதற்கு அமெரிக்க வெளியுறவுத்துறை ஒப்புதல் வழங்கியது. இது தொடர்பாக அமெரிக்க பாராளுமன்றத்தில் அது அறிக்கையும் அளித்துள்ளது.

அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை, 'தெற்காசியாவின் அணு அச்சங்கள்' என்று தலைப்பிட்டு ஒரு தலையங்க கட்டுரை வெளியிட்டது. இந்தியப் பெருங்கடலில் அணு ஆயுதங்களை நிறுத்துவதில் இந்தியா, சீனா, பாகிஸ்தான் முன்னோக்கி சென்று கொண்டிருக்கின்றன. ஆனால் பாகிஸ்தான் மட்டும்தான், பிராந்திய ஸ்திரத்தன்மையை பாதிக்கிற வகையில் செயற்படுகிறது என்று குற்றஞ்சாட்டியுள்ளது. (3-7)

# ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்துக்கோரி நேற்று முழுகடையடைப்புப் போராட்டம்

## 2000 பேர் கைதாகினர்

ஆந்திர மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கக் கோரி பல்வேறு கட்சிகளும் அமைப்புகளும் நடத்தி வரும் முழுஅடைப்பு போராட்டத்தால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2000 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிட வலியுறுத்தி வை.எஸ். ஆர் காங்கிரஸ் கட்சி அழைப்பு விடுத்தது. இதற்கு கம்யூனிஸ்ட் கட்சிகள், காங்கிரஸ் உட்பட இதர



கட்சியினர் மற்றும் பல்வேறு அமைப்பினர் ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனால் ஆந்திராவின் பல்வேறு பகுதிகளில் பேருந்துகள், லொறிகள், ஆட்டோக்கள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

ஸ்ரீகாகுலத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட 2 ஆயிரத்துக்கும் அதிக மானவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் வை.எஸ்.ஆர் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சி மற்றும் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். குண்டூரில் மட்டுமே நூற்றுக்கணக்கான எதிர்க்கட்சியினர் கைது செய்யப்பட்டனர்.

முழுகடையடைப்பினால் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இயங்கவில்லை. ஆட்டோக்கள் ஓடவில்லை. ஹோட்டல்கள், வணிக வளாகங்கள், கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டுள்ளன. ஆந்திர எல்லையையொட்டிய தமிழகம், கர்நாடக பகுதிகளுக்கு செல்லும் பேருந்துகளும் இயங்கவில்லை. பொதுமக்களின் அன்றாட தேவைகளான பால், மருந்து, காய்கறி, தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் மட்டும் விநியோகம் செய்யப்படுகின்றன.

முன்னதாக இதே கோரிக்கையை வலியுறுத்தி கடந்த 11 ஆம் திகதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முழு அடைப்பு போராட்டம் நடத்தியது. இதற்கு அனைத்து எதிர்கட்சியினரும், பல்வேறு சங்கங்களும், அமைப்பினரும் ஆதரவு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பங்களை மறுப்பது மனித இயல்பு முடிந்தவரை அவற்றை பரிசீலித்து உதவுவது மனிதப் பண்பு. -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கைதிகள், காணாமல் போனோர் தொடர்பில் நடவடிக்கை எடுங்கள்

ஜனநாயக ஆட்சி என்பது மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது என்று கூறப்பட்டாலும் ஜனநாயக ஆட்சியிலும் பாதகங்கள் உள்ளன என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் என்ற நிலைமை ஜனநாயகத்திலும் சர்வாதிகாரத்தை புகுத்தி விடுகிறது.

தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டால் அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆணவத்தோடு செயற்பட முடியும் என்ற கர்வத்தை ஆட்சியாளர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏற்படுத்தி விடுகிறது.

இதன் காரணமாக தேர்தலில் வாக்களித்த பொது மக்கள் வருந்துவதைத்தவிர வேறு எதுவும் செய்ய முடியாது உள்ளது.

தேர்தல் வரும்போது வாக்காளர்களைக் கட்டி அணைத்து காரியம் பார்த்து விடலாம். அது வாக்காளர்களை வாலாயம் செய்வதற்கு போதுமானது என்பதையும் அரசியல்வாதிகள் மிக நுட்பமாக அறிந்து வைத்துள்ளனர்.

அரசியல்வாதிகளின் ஆலாவர்ண வார்த்தைகளுக்கும் ஆசாடபூதித்தனத்துக்கும் பொதுமக்கள் மருண்டு விடுகின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினராக ஒருவர் தெரிவாகிவிட்டால், ஐந்து ஆண்டுகளுக்கு அவர் தொடர்பில் பொதுமக்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியாது என்பதுதான் மிகப்பெரிய துன்பம்.

தேர்தல் பிரசாரத்தில், தேர்தல் விஞ்ஞாபனத்தில் எப்படி எல்லாம் கூறிவிட்டு அவர்கள் எதையும் செய்யவில்லை என்றால் அது தொடர்பில் பொதுமக்கள் எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாமை ஜனநாயகத்தை பலவீனப்படுத்தி விடுகிறது.

தங்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து தங்களின் பிரச்சினைகளை எடுத்துரைப்பது முடியாதபோது, குறித்த பாராளுமன்ற உறுப்பினர் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று மக்கள் தெரிவிக்கக் கூடிய சந்தர்ப்பங்களும்; மக்களின் முறைப்பாடு தொடர்பில் குறித்த மக்கள் பிரதிநிதிக்கு எதிராக நடவடிக்கை எடுத்து அவரை வீட்டுக்கு அனுப்பி வைக்கக் கூடியதான சட்ட ஏற்பாடுகளும் கொண்டு வரப் படவேண்டிய தேவை உள்ளது.

ஐந்து ஆண்டுகளைக் கொண்ட பதவிக்காலத்தில் மூன்று தடவையேனும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான நம்பிக்கையை உறுதி செய்து கொள்கின்ற ஏற்பாடுகள் இருந்தால் அன்றி தேர்தல் காலம் தவிர்ந்த ஏனைய காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களை மறந்துபோகின்ற நிலைமை நீடிக்கவே செய்யும்.

எதுவாயினும் இன்றிருக்கக் கூடிய சூழ்நிலையில்; மக்களின் தேவைகளை, குறைகளை வெளிப்படுத்துகின்ற பணியை ஊடகங்கள் மட்டுமே செய்ய முடியும். எனினும் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை முன்வைப்பது கூட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தீராக் கோபத்தை கொடுக்கிறது.

இதுதவிர ஊடகங்களைப் புரட்டிப் பார்க்கின்ற பழக்கமே இல்லாத மக்கள் பிரதிநிதிகளும் உண்டு.

எது எப்படியானும் சிறைகளில் விளக்கம், விசாரணைகள் இன்றி வாடுகின்ற தமிழ் இளைஞர்களை விடுவிக்கின்ற முயற்சியிலும், காணாமல் போனவர்களை கண்டறிவதிலும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் தீவிரமாக ஈடுபடவேண்டும்.

அதேநேரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கும், காணாமல் போனவர்களை கண்டறிகின்ற விடயத்துக்கும் முன்னுரிமை கொடுத்து, சதா அழுது கண்ணீர் விடுகின்ற உள்ளங்களைத் தேற்ற நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

# வடக்கு-கிழக்கில் வறட்சி 2 இலட்சம் மக்கள் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் வறண்ட கால நிலை காரணமாக வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் சில மாவட்டங்களில் சுமார் 60 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பேரிடர் மேலாண்மை நிலையம் கூறுகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, பொலநறுவை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் வறண்ட கால நிலையால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக அந்த நிலையத்தின் துணை இயக்குநரான பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மாவட்ட பேரிடர் மேலாண்மை பிரிவுகள் மற்றும் நிவாரண சேவைப் பிரிவுகள் என்பன பேரிடர் மேலாண்மை அமைச்சுடன் இணைந்து நிவாரணப் பணிகளை முன்னெடுத்து வருகின்றன. கிழக்கு மாகாணத்திலேயே கூடுதலான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 15 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட பேரிடர் மேலாண்மை உதவி இயக்குநரான எஸ்.இன்பராஜன் தெரிவிக்கின்றார்.

வறட்சியினால் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களில் உள்ள மக்கள் பெரும் குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.

உள்ளூராட்சி சபைகள் மூலம் பவுசர்களில் குடிநீர் வழங்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தாலும், அது போதுமானதாக இல்லை என்றும் சீரான விநியோகம் இல்லை என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

கால்நடைகளும் மேய்ச்சல் மற்றும் குடிநீர் பிரச்சினைகளை எதிர்கொள்வதால் நோய்வாய்ப்படுவதாக கால்நடை வளர்ப்போர் கவலையடைந்துள்ளனர்.

மேட்டு நில பயிர்கள் அநேகமான பிரதேசங்களில் நீர் இன்றி காய்ந்து கருகி விட்டதால் பயிர்ச்செய்கையாளர்கள் வாழ்வாதாரப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர்.

அரசாங்கம் தங்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரி வருகின்றனர்.(செ-12)

## அவுஸ்திரேலிய கப்பல் கொழும்பில் தரிப்பு

நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்ட அவுஸ்திரேலிய கடற்படை கப்பலான HMAS மெல்போர்ன் இலங்கையை வந்தடைந்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்த இந்தக் கப்பலுக்கு உத்தியோக பூர்வ வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனையடுத்து கப்பலின் கப்டன் பில் வோட்டர், இலங்கை கடற்படையின் மேற்கு பிராந்திய கொமாண்டர் தயாநந்த நாணயக்காரவை சந்தித்தார்.

இதேவேளை அவுஸ்திரேலிய கப்பல எதிர்வரும் 2ஆம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(செ-12)

## ஐ.ம.சு முன்னணியின் சிரேஷ்டருக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவி-ஜே.சீ

### விமல் போன்றவர்களுக்கு பதவி கிடையாது

அரசியல் அனுபவம் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சிரேஷ்டர் ஒருவருக்கே எதிர்க்கட்சி பதவி வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சீ.அலவத்துவல, எதிர்க்கட்சி தலைவர் பதவி கிடைக்க வேண்டியது தேசிய சுதந்திர முன்னணியின் விமல் வீரவன்ச போன்ற ஒருவருக்கு அல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சித் தலைவர் என்கின்ற ஒரு முக்கிய பொறுப்பினை பேச்சில் மாத்திரம் செயற்படுகின்றவருக்கு அல்ல செயற்பாட்டிலும் உள்ள ஒருவருக்கே வழங்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றில் பிரதான கட்சிகள் இணைந்து புதிய பயணம் ஒன்றுக்கு ஆயத்தமாகும் இந்த சந்தர்ப்பத்தில் விமல் வீரவன்ச போன்று நாடாளுமன்றத்துக்கு பின் கதவால் வந்தவர்கள் எதிர்க்கட்சி தலைவர் பதவியை பெற்று கொள்ள முயற்சிக்கின்றார்கள்.

அவர்கள் எவ்வாறான சூழ்ச்சிகளை மேற்கொண்டாலும் ஜனாதிபதி புத்திசாலிதனமாக தகுதியானவர்களுக்கு பதவியை வழங்குவார் என எதிர்பார்க்கின்றேன்.

தாங்கள் கட்சியில் போட்டியிட்டு அமைச்சு பதவிகளை பெற்று கொண்டவர்களே அமைதியாக இருக்கும் போது முன்னணி விளக்கில் வெளிச்சத்தை பார்க்கும் விமல் வீரவன்ச எதிர்க்கட்சி தலைவர் கேட்டு ஜனாதிபதிக்கு சவால் விடுவது பெரும் நகைச்சுவையான ஒரு விடயமாகும்.

ஜனவரி மாதம் 08ஆம் திகதி மக்களினால் நிராகரிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மற்றும் விமல் வீரவன்ச குழுவினர் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இறுதி சந்தர்ப்பம் இதுவாகும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் இருநூறாவது ஆண்டு விழாவையொட்டி இரண்டாவது நிகழ்வாக செப்ரெம்பர் முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதிகளில் யாழ். மாவட்ட பிரபல பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இச் சுற்றுப் போட்டிக்கு இங்கிலாந்தில் இருந்து வருகை தந்துள்ள கலாநிதி டாக்டர் ஆர்.வி.அகிலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் அணிகளுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (இ-7)

சின்மயா மிஷன்

நல்லூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வலம்புரி பத்திரிகையின் இணை அனுசரணையுடன் இணைந்து நடத்தும் இந்துவாக வாழ்வோம் வினாவிடைப்போட்டி

வினா: 4) 'உன்னை நீயே உயர்த்திக்கொள்'

a) இதைக் குறித்து நிற்கும் படம் எது?

b)(I) இந்தத் தத்துவம் எந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(II) இந்தத் தத்துவத்தின்மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?

(III) இந்தத் தத்துவம் நடைமுறைக்கு சாத்தியமானதா? விளக்கம் தருக.

வினாக்களுக்கான விடைகளை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நடைபெறும் இந்துவாக வாழ்வோம் கண்காட்சியைப் பார்வையிடுவதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### உணவும் மருந்தும்



"நீ சீரணிக்கும் அளவிற்குள்ளாக உணவு உட்கொண்டால் உணவை நீ சீரணிக்கிறாய். அதிகமாக உட்கொண்டால் உணவு உன்னைச் சீரணிக்கும்".

எனவே, சுத்தமானதும், எளிமையானதும், சத்து நிறைந்ததுமான உணவு வகை அன்றாடம் நமது உடலுக்குத் தேவை. காரம், புளிப்பு, உப்பு, சர்க்கரை இவற்றையும் மிதமாகக் கொள்ளவேண்டும்.

உணவில் அளவும் தரமும், முறையும் தவறினால், நோய்கள் உண்டாகும். அவ்வப்போது தக்கபடி மருந்து எடுத்துக் கொண்டால் சரியாகி விடும் என்று இலேசாக நினைப்பதும் சரியன்று.



மருந்து என்றால் என்ன? மனிதன் ஆற்றும் தவறான செயல்களால் நோய் உண்டாகிறது. அந்நோய்களைச் சமன் செய்ய, ஏற்ற ஆற்றல் உடலிலேயே இயற்கை அமைத்திருக்கிறது. ஒரு சமயம் உடலில் நோய் தீர்க்கும் ஆற்றல் வலுவற்றதாக இருந்தால், அந்த ஆற்றலை ஊக்கி விட ஏற்ற பொருட்களே மருந்து ஆகும். உயிர் ஆற்றலுக்கு உந்து சக்தி என்பது வழக்கு.

அவ்வாறான உந்து ஆற்றலுக்குத் துணையாய் உந்தும் ஆற்றலைத் தான் மருந்து என்று கூறுகிறோம். மருவி வந்த மகளை மருமகள் என்பது போல, மருவி வந்த மகனை மருமகன் என்பது போல, மருவி உந்து ஆற்றலை மருந்து என்று வழங்குகிறோம். மருந்தின் உபயோகம் வேறு வழியின்றி ஒரு குறுகிய காலத்தில் சிறு அளவில் மட்டும் தான் பொருத்தமானது. ஏனெனில் சில மருந்து வகை, ஒரு நோயைக் குணப்படுத்தி வேறொரு நோயை உண்டுபண்ணக் கூடியுதே. இதைத் தவிர்க்க இயற்கையான அறிவின் வழி முன் உண்ட உணவு முற்றிலும் செரிமானமான பின்னரே அடுத்த உணவு கொள்ளலாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்த மென்பந்து, உதைபந்தாட்ட போட்டி

## றெயின்போ, இளங்கதிர் சம்பியன்






FIRST FRESH FOOD LIMITED (லண்டன்) இன் அனுசரணையுடன் மறைந்த சைனிங்ஸ் உறுப்பினர் நடராசா வைத்திலிங்கம் (வைத்தியப்பா) ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய 11 நபர் கொண்ட மென்பந்தாட்ட போட்டியில் றெயின்போ விளையாட்டுக்கழகமும் 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இளங்கதிர் விளையாட்டுக்கழகமும் சம்பியன் ஆகின.

11 நபர் கொண்ட மென்பந்தாட்ட போட்டிகளின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் றெயின்போ மைதானத்தில் நடைபெற்றது. மென்பந்தாட்ட இறுதிப்போட்டி யில் வல்வை சைனிங்ஸ் விளை யாட்டு கழகத்தை எதிர்த்து வல்வை றெயின்போ விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற சைனிங்ஸ் முதலில் தடுத்தாட தீர்மானித்தது. இதனை தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய றெயின்போ அணி 12 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 144 ஓட்டங்களை குவித்தது.


கடின இலக்கை நோக்கி களமிறங்கிய சைனிங்ஸ் வீரர்கள் தாங்களும் சளைத்தவர்கள் இல்லை என்று நிரூபித்து 12 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 135 ஓட்டங்களை பெற்றனர். 9 ஓட்டங்களினால் றெயின் போ விளையாட்டுக்கழகம் வெற்றியை தனதாக்கி சம்பியன் பட்டத்தை தட் டிச் சென்றது.

தொடர்ந்து நடைபெற்ற 9 நபர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதி ஆட்டம் மாலை 4.30 மணியளவில் றெயின்போ மைதானத்தில் நடைபெற்றது.

உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் வல்வை இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை றெயின்போ விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்டம் ஆரம்பித்து சில நிமிடங்களிலேயே இளங்கதிர் அணியின் பிரசாந்த் கோல் கணக்கினை ஆரம்பித்தார். தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திய இளங்கதிர் ஆட்ட நேர முடிவில் இளங்கதிர் 3–0 என்ற கோல் கணக்கில் வெற்றியை தனதாக்கியது. சம்பியனாகியது. (கு)

## கழுகுகளின் உதைபந்தாட்ட போட்டி; மன்னார் சென் லூசியஸ் வெற்றி


நெற்கொழு கழுகுகள் வி.க நடத்தும் வடமாகாண ரீதியான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கடந்த வியாழக்கிழமை முதலாவதாக நடைபெறவிருந்த போட்டியில் கொறறாவத்தை ரேஞ்சஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ் சென். அனரனீஸ் மோதவிருந்தது.

ஆனாலும் யாழ் சென்.அன்ரனீஸ் குறித்த நேரத்திற்கு மைதானத்திற்கு வருகை தராமையினால் ரேஞ்சஸ் அடுத்த சுற்றுக்கு முன்னேறுவதாக அறிவிக்கப்பட்டது.

இரண்டாவது போட்டியில் மன்னார் சென் லூசியஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அராலி சென் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. இப் போட்டியின் முதலாவது நிமிடத்திலேயே சென் லூசியஸ் வீரர் ரொபேட் ரோச் கோல் அடித்து அதிர்ச்சி கொடுத்தார்.

தொடர்ந்தும் திறம்பட ஆடிய சென் லூசியஸ் வீரர் பிங்கோ 15 ஆவது நிமிடத்தில் தலையால் அதிரடி கோலினையும் 23 ஆவது நிமிடத்தில் மேலும் ஒருகோலினை பெற்றதன் மூலம் ஆட்டத்தின் முதல் பாதி 3:0 என நிறைவுபெற்றது.

தொடர்ந்து இரண் டாம் பாதியில் மேலும் ஒருகோலினை பெற்றதன் மூலம் ஆட்டம் 4:0 என நிறைவு பெற்றது. போட்டியில் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்திய ரொபேட் ரோச் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

அணிக்கான பணப் பரிசினை வடமாகாண சபை உறுப்பினர் [illegible] வழங்கி [illegible] ஜீவானந்தம் அணிவித்தார். (க)

## தர்சன் அதிரடி ஆட்டம் யங்கம்பன்ஸ் வெற்றி



உடற்கல்வி விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் யங்கம்பன்ஸ் அணிக்கு அபார வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் ரெட்றேஞ்சர்ஸ அணியை எதிர்த்து மோதிய கம்பர் மலை யங்கம்பன்ஸ் 6:2 என்ற அடிப்படையில் அபார வெற்றி பெற்றது. போட்டியில் அணியின் வெற்றிக்காக அதிகபட்சமாக தர்சன் 3 கோல் போட்டார். பிரகாஷ் 2, ரதன் ஒரு கோலினைப் போட்டனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பங்கள் நிறைந்த எஸ்.எஸ்.சி ஆடுகளம்

# இஷாந்த் 5/54; இலங்கை முதல் இன்னிங்ஸில் 201 ஓட்.

## நேற்றைய நாளில் மட்டும் 15 விக்கெட்டுக்கள் சரிந்தன



குசல் கைகொடுக்கலாம்

இஷாந்தின் வேகத்தில் இலங்கையின் விக்கெட்டுக்கள் தகர்த்தெறியப்பட்ட சமயம் இந்திய அணி இலகுவாக வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், இந்திய அணியின் 2ஆவது இன்னிங்ஸ் துடுப்பாட்டம் இதற்கு நேர்மாறானதாக நேற்றைய 3ஆவது நாளின் நிறைவின் போது அமைந்தது.

கொழும்பு எஸ்.எஸ்.சி ஆடுகளத்தில் உள்ள புற்களின் தன்மையினால் ஒவ்வொரு நாள் ஆட்டத்தின் இறுதி முடிவு ஊகிக்க முடியாத வகையில் எதிர்பாராத திருப்பம் நிறைந்ததாக அமைகிறது. இதற்கிடையில் வருண பகவானின் வருகையும் போட்டியின் நிலைமையை மாற்றியமைக்க கூடியதாகவும் காணப்படுகிறது.

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ், ஆடுகளத்தில் இருந்த புற்களை சாதகமாகப் பயன்படுத்தி இந்திய அணியை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியும் இவரின் கணிப்பை உறுதி செய்யும் வகையில் விக்கெட்டுக்களை அடுத் தடுத்து பறிகொடுத்து மிகவும் இக்கட்டான (170-8) நிலையில் இருந்தது. அச்சமயம் 8ஆவது விக்கெட்டுக்காக இணை சேர்ந்த ஆரம்ப வீரர் புஜாரா - மிஸ்ரா இணை ஆச்சரியப்படுத்தும் வகையில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் 2ஆம் நாள் நிறைவில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 292 ஓட்டங்கள் என்ற ஸ்திரமான நிலையை அடைய உதவியது.

நேற்றைய 3ஆம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி மேலதிகமாக 20 ஓட்டங்களை எடுத்து 312 ஓட்டங்களுடன் தனது இன்னிங்ஸை முடித்துக் கொண்டது. துடுப்பாட்டத்தில் புஜாரா ஆட்டமிழக்காமல் 145 ஓட்டங்களை எடுத்தார்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ் ஸ்ருவோட் பின்னி ஆகியோரின் வேகம், மித வேகம் கலந்த ஒரு கலவையான பந்து வீச்சு சூறாவளிக்குள் சிக்கி சின்னா பின்னமானது.

இதன்விளைவு ஒரு கட்டத்தில் 6 விக்கெட்டுகளை இழந்து 47 ஓட்டங்கள் என்ற நிலையாகியது. இத்தகைய தருணத்தில் இலங்கை அணியால் 100 ஓட்டங்களை கடக்க முடியுமோ என்று ஐயமுறும் வேளையில் தனது டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்ட அதிரடி வீரர் குசல் பெரேரா, 7ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக ஹேரத்துடன் இணைந்து 80 ஓட்டங்களை பகிர்ந்து இலங்கை அணியை ஓரளவு ஸ்திரமான நிலைக்கு கொண்டு சென்றார். இதில் குஷல் பெரேரா 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த போதிலும்,

களத்தில் நின்ற ஹேரத்துடன் இணைந்த பின்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடி இலங்கை அணியை கரைசேர்த்தனர்.

இவர்களின் ஆட்டத்தால் இலங்கை தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 201 ஓட்டங்களை எடுத்தது.



சரியும் புஜாராவின் விக்கெட்

துடுப்பாட்டத்தில் ஹேரத் 49, பிரசாத் 27 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் கலக்கிய இஷாந்த் 54 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், பின்னி, மிஷ்ரா தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். 111 ஓடடங்கள் என்ற முன்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது.

பிரசாத்தின் முதல் ஓவரின் 2ஆவது பந்தில் புஜாரா கிளீன் போல்டாகி வெளியேறினார். இது இந்தத் தொடரில் முதல் ஓவரிலேயே பிரசாத் இந்திய விக்கெட்டை கொய்யும் 4ஆவது சந்தர்ப்பமாக அமைந்தது. அடுத்து ராகுல் 2, ரஹானே 4 என பிரதீப் பந்தில் ஆட்டமிழந்தனர்.

இந்தியா 7 ஓட்டங்கள் எடுப்பதற்குள் முக்கிய மூன்று விக்கெட்டுகளை இழந்து தவித்தது. 4ஆவது விக்கெட்டுக்கு ஹோலியுடன், ரோகித் சர்மா களம் இறங்கினார். ஒருபுறம் விராட் ஹோலி நிதானமாக விளையாட மறுமுனையில் ரோகித் சர்மா அதிரடியாக விளையாடினார். இதில் ஹேரத் வீசிய ஓவரில் இமாலய சிக்ஸரும் உள்ளடங்கும். 8.1 ஓவர்களில் இந்தியா 21 ஓட்டங்கள் எடுத்திருக்கும் போது மழை குறுக்கிட்டது. அத்துடன் 3 ஆவது நாள் ஆட்டமும் நிறுத்தப்பட்டது.

ஹோலி 1 ரோஹித் 14 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

7 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் இந்திய அணி தற்போது 132 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது. இன்னும் 2 நாட்கள் முழுவதுமாக உள்ளது. இன்று இந்த இருவரும் ஓரளவுக்கு தாக்குப்பிடித்து விளையாடி 250 ஓட்டங்களுக்கு மேல் முன்னிலை பெற்றால் இந்தியா இந்த போட்டியில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்ற வாய்ப்பு உள்ளது. இதை முறியடிக்க இலங்கை பந்துவீச்சாளர்கள் ஆக்ரோசமாக செயற்பட வேண்டிய நிலையிலுள்ளனர்.

இதற்கு தினசரி அச்சுறுத்தி வரும் வருண பகவான் வழியிட வேண்டும். நேற்றைய நாளில் மட்டும் 65.1 ஓவர்களில் 242 ஓட்டங்களுக்கு 15 விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டுள்ளன. ஆடுகளத்தில் புற்கள் அதிகமாக இருப்பதாலும், வழக்கமாகவே காலையில் பந்து வீச்சுக்கு ஆடுகளம் அதிக அளவில் ஒத்துழைப்பதாலும் இந்தியாவைப் பொறுத்தவரை இன்று காலை போட்டி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.



நானேதான் ராஜா மச்சி நானேதான் மந்திரி - இஷாந்த்:

# பெண்கள் மீது இளைஞர்கள் சேட்டை

# கைது செய்ய தவறியது பொலிஸ்!

## வவுனியா குருமன்காட்டில் சம்பவம்

வவுனியா, குருமனகாட்டில் பெண்களுடன் தகாத முறையில் நடக்க முற்பட்ட இளைஞர் கும்பலை பொலிஸார கைதுசெய்யாத சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா, நெடுங்கேணியில் இருந்து வந்த தந்தை, இரு புதல்வர்கள் மற்றும் 4 சகோதரிகள் குருக்கள்புதுக்குளத்தில் உள்ள தமது வீட்டுக்கு செல்வதற்காக குருமன்காட்டில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் பேருந்துக்காக காத்திருந்துள்ளனர். எனினும் நீண்ட நேரமாக பேருந்து வராமையால் பெண்களுடன் நிற்பதில் அச்சம் கொண்ட தந்தையார் அங்கிருந்த முச்சக்கவண்டி தரிப்பிடத்தில் முச்சக்கரவண்டியை வாடகைக்கு அமர்த்த சென்றிருந்துள்ளார். அச் சமயம் அப் பகுதியால் மதுஅருந்திய நிலையில் சென்ற 10 பேர் கொண்ட இளைஞர் குழுவொன்று பேருந்து தரிப்பிடத்தில் நின்ற பெண்களுடன் தகாத முறையில் நடக்க முற்பட்டுள்ளது. அவர்களின் செயற்பாட்டை கண்டித்த அப் பெண்களின் சகோதரர்கள் இரு வரையும் அக் கும்பல் சரமாரியாக தாக்கியுள்ளது.

இந் நிலையில் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் இருந்து பொலிஸ் காவலரணுக்கு ஓடிச்சென்று அப் பெண்கள் முறையிட்டதுடன் தம்மை தாக்கியவர்களையும் அடையாளம் காட்டி அங்கு கூடியவர்களின் உதவியுடன் மூவரை பொலிஸாரிடம் பிடித்து கொடுத்துள்ளனர்.

அத்துடன் 119 அவசர பொலிஸாருக்கும் அழைப்பை ஏற்படுத்தி சம்பவத்தை தெரியப்படுத்திய நிலையில் சுமார் 20 நிமிடங்கள் கழித்து சம்பவ இடத்துக்கு அவசர பொலிஸார வருவதை அவதானித்த தகாத முறையில் நடந்து கொண்ட இளைஞர்கள் மூவரும் பொலிஸாரின் கைது நடவடிக்கையிலிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

இதனையடுத்து அங்கு கூடிய பெருமளவான மக்கள் பொலிஸாரின் அசமந்த செயற்பாட்டை கண்டித்ததுடன் அங்கு வந்த பொலிஸாருடனும் முரண்பட்டுக்கொண்டார்கள். இச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் தெரிவிக்கையில், நாங்கள் திருமண வீடொன்றில் கலந்து கொண்டு விட்டு வந்தோம். எமது பாதுகாப்புக்காக எமது அண்ணா இருவரும் வந்திருந்தார்கள். எனினும் மது பானம் அருந்திய 10 பேர் கொண்ட இளைஞர் குழு எமது அண் ணா இருவரையும் தாக்கியிருந்தது.

அத்துடன் பொலிஸாரிடம் நாங்கள் அவர்களில் மூவரை பிடித்துக்கொடுத்த போதும் பொலிஸார அவர்களை கைது செய்ய முயற்சிக்கவில்லை. அதன் பின்னர் அவசர பொலிஸார் வருவதை அவதானித்த காவலரணில இருந்த குறித்த இளைஞர்கள் மூவரும் தப்பி ஓடியுள்ளனர். நாம் பிடித்துக் கொடுத்து 20 நிமிடங்களுக்கு மேலாகியும் அவர்களிடம் இருந்து அடையாள அட்டை இலக்கத்தையோ ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் எச் செயற்பாட்டையும் பொலிஸார மேற்கொள்ளவில்லை என பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் தெரிவித்துள்ளார். (சே-250)

# மீண்டும் கொலை முயற்சியில்

# கொலைச் சந்தேக நபர்!

## துப்பாக்கி பிரயோகம் செய்து சந்தேக நபர் கைது

கொலைச் சந்தேக நபர் ஒருவர் மீண்டும் கொலை முயற்சியில் ஈடுபட்ட போது அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று மாலை 3.30 மணியளவில் அல்வாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது. அது பற்றி மேலும் தெரியவருவதாவது,

அல்வாய்ப் பகுதியில் ஒருவரை கத்தியால் குத்துவதற்காக நபர் ஒருவர் துரத்திச் செல்வதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்வதற்காக முயற்சித்தனர்.


எனினும் பொலிஸார் மீது குறித்த கொலைச் சந்தேக நபர் தாக்குதலை மேற்கொள்ள முற்பட்டுள்ளார்.

அப்போது குறித்த நபரின் முழங்கால் பகுதியில் பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு அவரை கைது செய்தனர். இவ்வாறு கைது செய்த நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு அல்வாய் பகுதியில் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கும் குறித்த நபருக்கும் தொடர்பு இருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மேற்படி கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சே-12,60)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் பூர்ணபசுபதிப்பிள்ளை உரோமகேஸ்வரன்



எமது பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட அமரர் பூர்ணபசுபதிப்பிள்ளை உரோமகேஸ்வரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

(1626)

யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகள் இன்று...

கள் திருத்தும் பாடசாலைகள் தவிர்ந்த மற்ற அனைத்து பாடசாலைகளின தும் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் இன்று தொடக்கம் ஆரம்பிக்கப் படும் என்று கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது.

க.பொ.த. உயர்தர பரீட்சையின் விடைத்தாள்களை திருத்தும் பாட சாலைகள் வரும் 28-ம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

அத்துடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் பாடசாலைகள் வரும் 15-ம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று கல்வியமைச்சு தெரிவித் துள்ளது.

இது தவிர க.பொ.த. உயர்தர பரீட்சை செப்டம்பர் மாதம் 8-ம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## லக்ஷ்மன் கதிர்காமர்...

இயக்கத்தை தடை செய்வதற்கு காரணமாக இருந்தவர் என்பதால், அவர் படுகொலை செய்யப்பட்டிருந் தார்.

எனினும், எல்லாவற்றுக்கும் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டி விடுவது இலகுவானது. இதில் வேறு காரணிகளும் தொடர்பு பட்டிருக்கலாம். கொலைக்கான உத்தரவு எங்கிருந்து வந்தது என்று கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

கடந்த பத்தாண்டுகளில் நடந்த பல கொலைகள், சம்பவங்கள் தொடர்பாக முழுமையான விசா ரணைகள் நடத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வலிகாமம் வடக்கில் கதிர்காமரின் குடும்பத் துக்குச் சொந்தமான காணிகள் முன்னைய அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது குறித்தும் அஜிதா கதிர்காமர் விசனம் வெளியிட்டுள் ளார்.

காணிகள் தொடர்பான சட்ட ரீதியான ஆவணங்கள் அனைத் தும் எம்மிடம் உள்ள போது, அவை கதிர்காமர் குடும்பத்துக்குச் சொந்தமானவை என்று தமக்குத் தெரியாதென எவரேனும் எப்படிக் கூற முடியும்,

இப்போது எமது குடும்பத்துக்குச் சொந்தமான நிலம் அதிபர் மாளி கையாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இதேவேளை கடந்த 2005 ஓகஸ்ட் 12ஆம் திகதி விடுதலைப் புலிகள் அமைப்பின் துப்பாக்கிதாரி ஒருவரால லக்ஸ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டார் என குற்றம் சாட்டப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## 'சர்வதேச விசாரணையே...

பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை ஜெபமாலையின் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்களின் குடும் பங்களின் சங்கத்தினரும் மன் னார் பிரஜைகள் குழுவினரும் இணைந்து இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தன.

காணாமல்போனவர்கள் தொடர் பில் உள்நாட்டில் பல்வேறு விசா ரணைகள் நடத்தப்பட்டு, சாட்சியங் கள் அளிக்கப்பட்டுள்ள போதிலும் அரசாங்கத்தினால் உரிய நடவடிக் கைகள் எடுக்கப்படவில்லை என்று அந்த அமைப்புகள் கூறியுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எவ்வாறு காணாமல் போயுள்ளார் கள் என்பதற்கான ஆவணங்கள் சர்வதேச நிறுவனங்களிடம் வழங் கப்பட்டுள்ள போதிலும் அவற்றால் பயனேதும் ஏற்படவில்லை என் றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை என்றும் உற வினர்கள் கூறுகின்றனர்.

இதன் காரணமாகவே சர்வ தேச விசாரணை ஒன்றை தாங் கள் வலியுறுத்துவதாக இந்த நிகழ் வின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான அருட்தந்தை ஜெபமாலை தெரி வித்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டி ருந்த காணாமல்போனவர்களின் உறவினர்கள், தமக்கு நீதி வழங்கப் பட வேண்டும் என்று கண்ணீர் சிந்திய படி கோரிக்கை விடுத்தனர். (செ-12)

## இன ரீதியான பாகுபாடு வேண்டா

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியை

# கூட்டமைப்புக்கு வழங்கவும் - அதா

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்தும் இனரீதியான பாகுபாடுகளுக்கு இட மளிக்காது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு வழங்குமாறு அதாவுட செனவிரத்ன வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப் பொன்றில் சுதந் திரக் கட்சியின் முக்கிய தலைவர் களில் ஒருவரும், முன்னாள் அமைச் சருமான அதாவுட செனவிரத்ன இந்தக் கோரிக் கையை முன்வைத்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரி வித்த அதாவுட செனவிரத்ன,

தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு இந்நாட்டின் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்ற அனைத்துத் தகுதிகளும் உள்ளது. அதனை யாரும் தடுக்க முடியாது.

அரசியலமைப்பு ஏற்பாட்டின் பிரகாரம் நடைபெற வேண்டிய விடயங்களைத் தடுக்க யாருக்கும் அதிகாரமில்லை. அதன் பிரகாரம் நாடாளுமன்றத்தில் கூடுதலான உறுப்பினர்களைக் கொண்ட எதிர்க் கட்சி என்ற வகையில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு முன்னணியில் உள்ளது.

அவர்களுக்கு எதிர்க் தலைவர் பதவியை வழங்கு தடுக்கும் நோக்கில் செயற்ப இனப்பாகுபாடு அடிப்படை சிந்தனையைக் கொண்ட தவிர வேறில்லை.

எனவே தொடர்ந்தும் றான இனப்பாகுபாடான சிற களுக்கு இடமளிக்காது த தேசியக் கூட்டமைப்புக்கு எ சித் தலைவர் பதவியை வேண்டும் என்றும் அதாவு விரத்ன தொடர்ந்தும் வலி யுள்ளார்.

## உள்ளக விசாரணை...

நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் பின்னர் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய 3 கட்சிகளின் முக்கியஸ் தர்கள் கொழும்பில் நேற்று கூடி இரண்டாவது கட்டமாகப் பேச்சுக் களை நடத்தியுள்ளனர்.

இதற்கு முன்னதாக யாழ்ப்பா ணத்தில் இவர்கள் கூடி தேர்தலுக் குப் பின்னரான நிலைமைகள் குறித்து ஆராய்ந்திருந்தார்கள்.

இந்தக் கூட்டத்தில் டெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், சிவாஜிலிங்கம் உள்ளிட்ட 6 பேரும், ஈ.பி.ஆர். எல்.எஃப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், செயலா ளர் சிவசக்தி ஆனந்தன் உள்ளிட்ட 5 பேரும், புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் உள்ளிட்ட இருவருமாக 13 பேர் கலந்து கொண்டி ருந்தனர்.

செப்டெம்பர் மாதம் நடைபெற வுள்ள ஐ.நா. மனித உரிமைப் பேர வைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வுள்ள ஐ.நா. விசாரணை அறிக்கை, அதனைத் தொடர்ந்து மேற்கொள் ளப்படவுள்ள விசாரணை சர்வ தேச விசாரணையாக அமைய வேண்டியதன் அவசியம், அத் துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுவன ரீதியாகச் செயற்பட வேண்டி யதன் தேவைகள், முக்கியத்துவம் என்பன உள்ளிட்ட பல்வேறு விட யங்கள் குறித்து இதன் போது ஆரா யப்பட்டது.

தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய 3 கட்சிகளும் நாடாளுமன்றத்தில் தனித்து இயங்குவது குறித்து எது வும் இங்கு பேசப்படவில்லை என்று கூறிய எம்.கே.சிவாஜிலிங்கம், இந்தக் கூட்டத்தில் பேசப்பட்ட விட யங்கள் குறித்து தமிழரசுக் கட்சிக்கு எடுத்துக் கூறி கலந்துரையாடவுள்ள தாகவும், அதற்காகவே இணைப் புக் குழு கூட்டத்தைக் கூட்டுமாறு அழைப்பு விடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் செயற்பாட் டில் அதிருப்தி கொண்டுள்ள ஏனைய 3 கட்சிகளும் தனித்து இயங்குவது குறித்து தேர்தலின் பின்னர் தீவிர மாகச் சிந்தித்து வருவதாகவும் அது பற்றி அவர்கள் கலந்துரையாடி யதாகவும் முன்னர் தகவல்கள் வெளி யாகியிருந்தன.

இதேவேளை தமிழரசுக்கட்சி யுடனுள்ள கருத்து முரண்பாடுகள் காரணமாகவே மேற்படிக் கூட்டத் துக்கு அவர்களை அழைக்க வில்லை என புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் கருத்துத் தெரிவித்துள்ளார். (செ-9)

## மகிந்தவின் விளம்பர

## ரூபாய் 11 கோடி நஷ்

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்த தீன தொலைக்காட்சி ஊடாக ராஜபக்ஷவின் விளம்பரங்க களவில் ஒளிப்பரப்பியமைக்கா வேண்டிய கட்டணத்தை செ காரணத்தினால், 11 கோடி கும் மேல் நஷ்டம் ஏற்பட்டு

தொலைக்காட்சி நிறுவ ஏற்பட்டுள்ள இந்த நஷ்டம் வாக்குமூலம் ஒன்றை வழ சுயாதீன தொலைக்காட்சி சே முன்னாள் தலைவர் அனுர உட்பட 10 பிரதான அதிகாரி அழைப்பு விடுக்கப்பட்டிருப்ப தூரமான மோசடிகள் மற்றும் குறித்து விசாரணை நடத்து பதி ஆணைக்குழுவின் செயலா டி சில்வா தெரிவித்துள்ளார்

## சர்வதேசம்.

நாங்கள் அந்த விசாரணை நாட்டளவில் தான் நடக்க டும் என்று உறுதியாகக் கூறி

நீதித்துறை மீது நம் இழந்த சிலர்தான் சர்வதே ரணை வேண்டும் என்று தாக அவர் குறிப்பிட்டுள்ள

அத்துடன் மேற்கத் களுடனான உறவைச் பதுடன் இந்தியா மற்றும் ச னான உறவையும் பராமரி என்று பிரதமர் ரணில் வ சிங்க தெரிவித்துள்ளார்.

## அரசியலிலிருந்து விலகி...

குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அநுர, நான் மீண்டும் தேர் தலில் போட்டியிட போவதில்லை.

அரசியலில் ஈடு படுவதனை விட துறவியாக செயற்படுவதே மேல்.

உங்களுக்கு வேண்டும் என்றால் தலைவரிடம் சென்று இம் முறை எங் நியாயமானதை செய்யுமாறு கூறுங்க அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அநுர பிரியதர்ஷன யாப்பா ஸ்ரீல சுதந்திர கட்சியின் முன்னாள் பொது லாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (

## கம்யூனிஸ்ட்..

என்று அந்தக் கட்சியின் பொதுச் செய டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி ச சந்தரசிறி கஜதீர இந்த முறை பாராளு துக்கு தெரிவாகியுள்ளார்.

அதன்படி அவர் பாராளுமன்ற நடவ களின் போது சுயாதீனமாக செயற்படுவார் டியூ குணசேகர தெரிவித்துள்ளார். (

## கூட்டணிக் கட்சி...

அப்போது தேசிய சுதந்திர முன் வெளிப்படையாக ஜனாதிபதியிடம் கரு களை முன்வைக்கும் எனவும் குறிப்பி ளார்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்ளும் வேளை எதிர்க்கட்சியையும் பிரதிநி வப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடி எனவும் வீரவன்ஸ மேலும் தெரிவித் ளார். (செ


O/L உடன் 6 மாதங்களில்
வெளிநாட்டு விசா
& தொழில் ஏற்பாட்டுடன்
Business &
Hotel Management
புதிய பிரிவு ஆரம்பம் - செவ்வாய். வியாழன் 10.00 am
Sikaram Institute of Hospitality & English
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம்) Call:077 36 16 798

பணியாளர் தேவை
முன்னணி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் பரீட்சைப் பகுதிக்கு பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.
1) எழுதுவினைஞர் (கணனி அறிவுள்ள ஆண்கள்)
2) சிற்றூழியர்கள் (ஆண்கள்)
நேர்முகத் தேர்வு :- 09.09.2015 முற்பகல் 11.00 மணி
NEW SCIENCE WORLD
Brown Road-Navalar Road Junction, Jaffna.
Hotline:- 077 336 4055 (C-1960)

தேவை
யாழ். மாநகர மத்தியில் பலமாடி கொண்ட கட்டிடத் தொகுதியை மேற்பார்வை செய்வதற்கு பணியாளர்கள் தேவை. இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
வாடகைக்கு
சில கட்டிடத் தொகுதிகள் வாடகைக்கும் உண்டு
(1615)
தொடர்புகளுக்கு
077-7302 343

Digital
விஷேட கட்டண சலுகைகள்
இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
WESTERN UNION
MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101
(C-1955)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்